மதுரை

# ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் வரலாறு



ஸ்ரீ மீனாட்சி அம்மன்

மதுரை—ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலய வெளியீடு

மதுரை

# ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் வரலாறு

(திருவாலவாய்)

தேவாரப் பாடல்பெற்றது.

எழுதியவர் :

வரலாற்றுச் செல்வர் - புலவர்மாமணி - ஆராய்ச்சிமணி

**திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள்**

தமிழாசிரியர், திருச்சிராப்பள்ளி

(Writer of Guide Books for Temples and Religious Lecturer)

அணிந்துரை :

உயர்திரு. அ. உத்தண்டராமபிள்ளை அவர்கள், B.A., B.L., I.A.S.,

சென்னை மாநில அறநிலையப் பாதுகாப்பு ஆணையாளர்.

அறங்காவலர்கள் (Trustees) :

1. திரு. V. சங்கரன் அவர்கள், B.A., B.L., M.L.A., (Chairman, Board of Trustees)
2. ,, A. சிதம்பர முதலியார் அவர்கள் M. L. C.
3. ,, K. M. S. L. நீலகண்டன் அவர்கள்
4. ,, P. மருதையா அவர்கள்
5. திருமதி. புஷ்பம் நடராஜன் அவர்கள்

ஆகியோர்களால் வெளியிடப் பெற்றது.

ஆலய நிர்வாக அதிகாரி :

திரு. R. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள், B.A., B.L.

ஆலய வெளியீடு

உரிமை
செய்யப் பெற்றது

1959

விலை ரூ. 2-00

முதற்பதிப்பு: ஜனவரி, 1959

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14.

சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர்
உயர்திரு. A. உத்தண்டராம பிள்ளை, B.A., B.L., I.A.S.

அவர்கள் அருளிய

# அணிந்துரை

" நீல மாமிடற் றால வாயிலான்
பால தாயினுர் ஞாலம் ஆள்வரே "—சம்பந்தர் தேவாரம்.

" ஆலந்தரித்த லிங்கம், ஆலவாய்ச் சொக்கலிங்கம்
மூலமாய் எங்கும் முளைத்தலிங்கம்—பாலொளியாம்
அத்தனே கூடல் மதுரா புரிஉமையாள்
அத்தனே ஆல வாயா "—சொக்கநாத வெண்பா.

" குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானு முடனே காண்க "—திருவாசகம்.

" தண்ணார் தமிழளிக்கும் தண் பாண்டிநாடு " என மணிவாசகராலும், " பார்மன்னு தொன்மைப் புகழ் பூண்டது பாண்டிநாடு " என்று சேக்கிழாராலும் பாராட்டப்பெற்ற பாண்டி நாட்டின் தலைநகரம் மதுரை என்னும் பழம்பதி. அங்கு கருணையே வடிவாகிய பார்வதி தேவியார் மதுரைப் பாண்டிய மன்னனுக்கு மகளாக மீனாக்ஷி என்ற திருப்பெயருடன் அவதரித்து சோமசுந்தரப் பெருமானை நாயகனாகப்பெற்று, முருகப்பிரானை உக்கிர பாண்டியனாகத் தோன்றிய பெருமை வாய்ந்தது. இறைவன் அற்புதமான 64 திருவிளையாடல்கள் செய்தருளிய அரும்பதி. ராஜசேகர பாண்டியன் வேண்டுதலுக்கிணங்கி கால்மாறியாடி ஐந்து நடன சபைகளுள் நடுநாயகமாய்

*

வெள்ளியம்பலமாக விளங்குகிறது. பதஞ்சலிக்காக தில்லை நடனக்காட்சியை மதுரையில் காட்டினார் கூத்தப்பெருமான். சங்கத் தமிழ்வளர்த்த திருப்பதி. "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க பூதபரம்பரை பொலிய" திருஞானசம்பந்தப் பெருமான் சமணரை வாதில் வென்று, நின்ற சீர்நெடுமாறன் வெப்பு நோயைத் தீர்த்து, தேவாரப் பதிக ஏடுகளை நெருப்பிலும் நீரிலும் இட்டு மெய்ப்பித்துச் சைவ சமயமும் திருநீற்றின் ஒளியும் விளங்கச் செய்த பெருமையுடையது. "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" எனச் சேக்கிழாரால் புகழப்பெற்ற பாண்டிமா தேவி மங்கையர்க்கரசியாரும், அவருக்கு உற்ற துணையாயிருந்து சைவம்காத்த அமைச்சர் குலச்சிறைநாயனாரும், திருநீறு, கண்மணி, சடை முடி தரித்து மும்மையாலுலகாண்ட மூர்த்திநாயனார் முதலிய பல பெரியோர்களும் வாழ்ந்த திருத்தலம். உலகில் பாரதமே புண்ணிய தேசம். அது பல புண்ணிய தலங்களைக்கொண்டது. அவற்றுள் நான்கு தலங்கள் சிறந்தவை—காசி, காளத்தி, சிதம்பரம், மதுரை. மதுரையில் வசிப்பதாலேயே முக்தி என்ற புகழ்பெற்றது.

திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம், காசி, கைலாசம், ஆதாரஸ்தானங்களாக கருதப்படுகின்றன. ஆதாரங்களுக்கப்பால் துவாதசாந்தஸ்தானமாக உள்ளது மதுரை. மூலவர் சுயம்பு லிங்கம். சொக்கலிங்கப் பெருமான். வட இந்தியாவிலுள்ள மதுரையில் கிருஷ்ணன் லீலைகள் நடைபெற்றன. இங்கே சொக்கர் 64 திருவிளையாடல்கள் புரிந்தார். அவற்றுள் தனிச் சிறப்புடையது, ஈசன் வந்தி என்னும் கிழவிக்காகப் பிட்டுக்கு மண்சுமந்து பிரம்பால் அடிபட்டு அந்த அடி பிரபஞ்சத்திலுள்ள அரசன் முதலாக எல்லா ஜீவராசிகளுக்கும் விழுந்ததால் மணிவாசகப் பெருமான் பெருமையை உலகுக்குக் காட்டி வைகை வெள்ளத்தைத் தடுத்த திருவிளையாடல். இதனால் இந்த லிங்கத்தைத் தரிசித்தோர்

பிரபஞ்சத்திலுள்ள எல்லா லிங்கங்களையும் தரிசித்த பலனைப் பெறுவர்.

இந்திரன் தன் பிரம்மஹத்திதோஷம் இந்த லிங்கத்தைப் பூசித்ததால் நீங்கப்பெற்று ஆலயமும் கட்டி இந்திர விமானம் அமைத்து ஆண்டுக்கொருமுறை, சித்திரா பவுர்ணமியன்று பூசை செய்வதாகப் புராண வரலாறு கூறுகிறது. அதுபற்றி இங்கு சித்ராபவுர்ணமி உத்சவமும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கோயிலை நடுநாயகமாக வைத்துச் சுற்றிலும் வீதிகள் அமைக்கப் பெற்றிருப்பது இந் நகருக்குத் தனிச் சிறப்பு. ஆடிவீதி, சித்திரைவீதி, ஆவணி மூலவீதி, மாசிவீதி, வெளிவீதி என்று ஒழுங்காக அமைந்திருக்கின்றன. சித்திரை விழா மாசி வீதியிலும், மாசி விழா சித்திரை வீதியிலும் நடைபெறுவதும் ஓர் திருவிளையாடல்போலும்.

இத்தலத்தில் ஸ்ரீ மீனாட்சியம்மையை முதலில் வழிபட்டுப் பின்னர் சொக்கலிங்கப் பெருமானை வழிபடுவதே முறையாக உள்ளது. மீனாட்சி சுந்தரேசுவரர் அம்மையப்பராக மக்களுக்கு அருள் புரிகின்றனர். இந்நூல், வரலாற்றுச் செல்வர் - திரு. R. **பஞ்சநதம் பிள்ளை** யவர்களால் எழுதப் பெற்று ஆலய தர்மகர்த்தர்களால் வெளியிடப் படுகிறது. இவ்வாசிரியர் பல தல வரலாறுகள் எழுதி அனுபவமுள்ள தமிழறிஞர். கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த புலவர். சமய அறிவும், தெய்வ பக்தியும் நிறைந்த பெரியார். இந்த வரலாறு எளிய இனிய நடையில் எழுதப்பெற்றுப் பல பயனுள்ள பகுதிகளைக் கொண்டுள்ளது. இந் நூலாசிரியருக்கும், ஆலய தர்மகர்த்தர்களுக்கும் சைவ உலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

" மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே "

என்றார் தாயுமானவர்.

மதுரையே மீனாக்ஷி, மீனாக்ஷியே மதுரை. 'கஞ்சி காமாக்ஷி, மதுரை மீனாக்ஷி, காசி விசாலாக்ஷி' என்பது இம் மூன்று தலங்களிலும் அம்பிகையின் தனிச் சிறப்பைக் காட்டும் முதுமொழி. இத்தலத்தின் வரலாற்றை மக்கள் அனைவரும் படித்து உணர்ந்து பிறவிப் பயனைப் பெறுவார் களாக.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"—ஔவையார்

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்"—திருவள்ளுவர்.

"கண்ணினுற் பெரும் பயன் அண்ணலார்
நல்விழாப் பொலிவு கண்டார்தல்"

என்றார் சேக்கிழார் பெருமான். மதுரைமீனாக்ஷி சுந்த ரேசுவரர் ஆலயத்தில் திருவிழாக்கள் எல்லாம் கண் கொள்ளாக் காட்சிகள். இவ்விழாக்களின் தத்துவங்களை விளக்கிப் பிரசுரங்களாக விரைவில் வெளியிட ஆலய நிர்வாகத்தினர் ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

"சூழுமிதழ்ப் பங்கயமாக அத்தோட்டின் மேலோள்
தாழ்வின்றி என்றுந் தனிவாழ் வதத்தையல் ஒப்பார்
யாழின் மொழியின் குழலின்னிசையும் சுரும்பும்
வாழும் நகரம் மதுராபுரி என்பதாகும்"—பெரியபுராணம்.

"புண்ணியம்புரி பூமி பாரதில் வருபோகம்
நண்ணியின் புறுபூமி வானுடென்ப நாளும்
புண்ணியம்புரி பூமியுமதில் வருபோகம்
நண்ணியின்புறு பூமியுமதுரை மாநகரம்
—திருவிளையாடற் புராணம்.

"குன்றி விளவாடை வரும்பொழு தெல்லாம்
மலர்ந்த திருக்கொன்றை நாறத்
தென்றல் வரும்பொழு தெல்லாம் செழுஞ்சாந்தின்
மணநாறுஞ் செல்வவீதி

நன்றறிவார் வீற்றிருக்கும் நான்மாடக்
கூடல் வளநகரி யாளும்
வென்றி புனைவடி சுடர்வேள் மீனவனை
வானவர்கோன் மதலை கண்டான்"—வில்லிபாரதம்.

மாமதுரை
அங்கயற்கண் நாயகியே ! அம்மையே—துங்க
ஒளியே ! பெருந்திருவே ! ஓதிமமே ! உண்மை
வெளியே ! பரப்பிரம வித்தே ! அளிசேரும்
கொந்தளக பந்திக் குயிலே ! சிவயோகத்
தைந்தருவே ! மூவருக்கும் அன்னையே !—எந்தமிடர்
அல்லல் வினையெல்லாம் அகற்றியே அஞ்சலென்று
நல்ல சவுபாக்கியத்தை நல்கியே—வல்லபத்தி
ஆசுமது ரஞ்சித்ர வித்தாரம் என்றறிஞர்
பேசுகின்ற உண்மைப் பெருவாக்கு—நேசமுடன்
தந்தென்னை ஆட்கொண்டு சற்குருவாய் என்னகத்தில்
வந்திருந்து புத்திமதி கொடுத்துச்—சந்ததமும்
நீயே துணையாகி நின்றிரட்சி அங்கயற்கண்
தாயே சரணம் சரண். —மீனாக்ஷியம்மை கலிவெண்பா.

வாழ்க திருநெறி ! வாழ்கசீர் அடியாரெல்லாம்.

அ. உத்தண்டராமன்.

# முன்னுரை

"ஞாலம் நின்புகழே மிகவேண் டுந்தென்
ஆலவாயில் உறையும் எம்ஆதியே"—சம்பந்தர்

அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாய்ச் சொக்கர் - ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் எழுந்தருளிய மதுரைக்கோயில் மிகப் பழமையான பெருங்கோயில். கலையழகும், சிலை வனப்பும், இசையமைப்பும் பொருந்தியது. சிவபெருமான் 64 திருவிளையாடல்களையும் நடித்துக் காட்டியது. பாண்டிப்பதினான்கு தலங்களுள் முதன்மையானது. தேவாரப்பாடல் பெற்றது. பல புராணங்களையும், இலக்கியங்களையும், பல கல்வெட்டுக்களையும் உடையது. பாண்டியர் முதலிய மன்னர்களால் பரிபாலிக்கப் பெற்று வந்தது. திருவிழாக்கள் நிறைந்த திருநகரம்.

இத்தகைய பெருமைகளையுடைய கோயிலுக்குத் தனி வரலாறு (Guide Book) இல்லாதிருப்பதை உணர்ந்து, அறநிலையப் பாதுகாப்புத்துறை (Hindu Religious and Charitable Endowments) ஆணையாளரும், சிவனடி மறவாத சிந்தையும், சிவனடியார்களிடத்தில் அளவற்ற பக்தியும், திருமுறைகளிலும், சமய ஆராய்ச்சியிலும், திருப்பணியிலும், வழிபாட்டிலும் நிறைந்த ஈடுபாடுடையவருமாகிய உயர்திருவாளர் A. உத்தண்டராம பிள்ளை, B.A.,B.L. I.A.S. அவர்கள், அடியேன்பால் கருணைகொண்டு இவ்வரலாற்றைத் தொகுத்தெழுதும்படி அறிவித்தார்கள். அவர்கள் தெய்வமணங் கமழும் தூய திருமொழிகளில் ஓர் அழகிய அணிந்துரையும் வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு எனது பணிவான நன்றி. அவர்களுடைய ஆதரவாலும், ஸ்ரீ மீனாட்சியம்மையின் திருவருளாலும் இவ்வரலாறு

யாவரும் எளிதில் கோயிலைப்பற்றி அறிந்துகொள்ளும் பொருட்டுச் சுருக்கமாய் எழுதப்பெற்று, அறநிலையத்துறை ஆணையாளர் அவர்களால் அங்கீகாரம் செய்யப்பெற்றது.

பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தலவரலாறுகள் வெளிவரச் செய்வதிலும், சமய உண்மைகளைப் பரப்புவதிலும், திருத்தொண்டர்களின் திருக்கோயில்களை அமைப்பதிலும், கோயில்களைச் சீர்திருத்துவதிலும் தற்போதுள்ள அறநிலையப் பாதுகாப்புத் தலைவர் அவர்களும், மற்றையோர்களும் ஆவன செய்து வருகிறார்கள்.

இவ்வரலாறு எழுதுவதற்குத் துணையாயிருந்த நூல்கள், பழய திருவிளையாடல், பரஞ்சோதியார் திருவிளையாடல், பெரியபுராணம், திருப்பணிமாலை, கல்வெட்டுக்கள், ஜில்லா கஜெட்டீர் முதலியன. கோயில் நிர்வாக அதிகாரி அவர்கள் இந்நூல் செவ்வனே அமைவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். மதுரை தேவஸ்தானக் குறிப்புக்களைப் பேஷ்கார் திரு. M. **தங்கவேல் தேசிகர்** அவர்களும், மதுரைக் கோயில் பற்றிய சில குறிப்புக்களைத் திரு. S. **தர்மலிங்க முதலியார்** அவர்களும், திரு. **ம. க. சுந்தரேசபட்டர்** அவர்களும் அறிவித்தார்கள். ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரரின் திருவருளே இந்நூலை முன்னின்று முடித்தருளியது.

இதில் கோயில் விளக்கங்களும், தலப் பெருமைகளும், திருப்பணிகள் - கல்வெட்டுச் செய்திகளும், சரித்திரபுராண வரலாறுகளும், இலக்கியப் பாடல்களும், பல படங்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. அன்பர்கள் படித்து ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரரின் திருவருளைப் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி
5—12—57

R. **பஞ்சநதம் பிள்ளை**,
தமிழ் ஆசிரியர்.

# உள்ளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பாண்டிநாடும் நகரமும் | ... 1 |
| 2. | நகரமும் கோயிலும் | ... 3 |
| 3. | தலத்தின் வேறுபெயர்கள் | ... 5 |
| 4. | மதுரை நகரம் | ... 8 |
| 5. | பார்க்கவேண்டிய பிற இடங்கள் | ... 10 |
| 6. | கோயிலின் அமைப்பு | ... 15 |
| 7. | வெளி மண்டபங்கள் | ... 32 |
| 8. | சுற்றுக் கோயில்கள் | ... 35 |
| 9. | கோயில்களும் குறிகளும் | ... 37 |
| 10. | மூர்த்திகளின் பெயர்கள் | ... 40 |
| 11. | தீர்த்தங்கள் | ... 42 |
| 12. | தலப் பெருமைகள் | ... 45 |
| 13. | திருப்பணிகள் | ... 48 |
| 14. | சிற்பங்கள் | ... 55 |
| 15. | தினப்பூஜைகள் | ... 60 |
| 16. | திருவிழாக்கள் | ... 73 |
| 17. | வருமானமும் சொத்துக்களும் | ... 78 |
| 18. | நிர்வாகம் | ... 80 |
| 19. | சரித்திர வரலாறு | ... 81 |
| 20. | கல்வெட்டுக்கள் | ... 83 |
| 21. | புராண வரலாறுகள் | ... 91 |
| 22. | தேவாரத் திருப்பதிகங்கள் | ... 109 |
| 23. | புராணப் பாடல்கள் | ... 136 |
| 24. | பிற இலக்கியங்கள் | ... 142 |
| 25. | பிற விவரங்கள் | ... 151 |

# கோயில் விளக்கம்


கோயில் — திருஆலவாய் - ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயில் (அங்கயற்கண்ணிச் சொக்கர் கோயில்).
இடம்—மதுரை.
விநாயகர்—சித்தி விநாயகர்.
முருகன்—கூடல்குமரர்.
அம்மன்—ஸ்ரீ மீனாட்சி (அங்கயற்கண்ணி).
மூலவர்—ஸ்ரீ சுந்தரேஸ்வரர் (சொக்கநாதர்).
விமானம்—இந்திர விமானம்.
மரம்—கடம்ப மரம்.
தீர்த்தம்—பொற்றாமரை—வைகை—எழுகடல்.
முக்கிய விழாக்கள்—சித்திரைவிழா—ஆவணி மூலவிழா—தை தெப்பவிழா.

பாண்டிநாட்டில் மதுரை ஜில்லா மதுரை ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே அரைமைல் தூரத்தில் கோயில் உள்ளது. பெருமான் 64 திருவிளையாடல்களை நடித்துக் காட்டிய இடம். திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசராலும் தேவாரம் பாடப்பெற்றது. பல புராண இலக்கியங்களையுடையது. பல மண்டபங்களையும், சிற்பங்களையுங் கொண்டது.

ஸ்ரீ மீனாட்சி - சுந்தரேஸ்வரர் கோயில்களின் படங்கள் (Plan) ஆங்கில விளக்கங்களுடன் ஒரே படமாகத் தனியே சேர்க்கப்பெற்றுள்ளது.

# படங்களின் விளக்கம்


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| 1. | ஸ்ரீ மீனாட்சி அம்மன் | | முன் முகப்பு |
| 2. | ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம் | ... | 1 |
| 3. | அஷ்ட சக்தி மண்டபத் தோற்றம் | ... | 16 |
| 4. | கிளிக்கட்டு மண்டபம் | ... | 20 |
| 5. | ஆயிரக்கால் மண்டபம் - வெளித்தோற்றம் | ... | 22 |
| 6. | திருக்கல்யாண மண்டபம் | ... | 24 |
| 7. | கம்பத்தடி மண்டபம் | ... | 26 |
| 8. | புது மண்டபம் - உள்தோற்றம் | ... | 32 |
| 9. | ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலின் படம் (Plan) | ... | 32 |
| 10. | திருமலை நாயக்கர் | ... | 33 |
| 11. | ஸ்ரீ சொக்கநாதர், ஸ்ரீ மீனாட்சி (பொன் திருஉருவங்கள்) | ... | 40 |
| 12. | பொற்றாமரைக் குளமும் சுற்று மண்டபங்களும் | ... | 42 |
| 13. | வண்டியூர்த் தெப்பக்குளம் | ... | 44 |
| 14. | ஸ்ரீ மீனாட்சியைத் தாரைவார்த்துக் கொடுத்தல் | ... | 58 |
| 15. | ஸ்ரீ மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம் | ... | 72 |
| 16. | கோயில் கோபுரங்களின் தோற்றம் | | அட்டை பின்பக்கம் |



ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம்

ப - 1

உ

மதுரை

# ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயில் வரலாறு

## திருவாலவாய்

" வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவால வாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே "

—திருநாவுக்கரசர்

## 1. பாண்டி நாடும், நகரமும்

அங்கயற்கண்ணி யாகிய ஸ்ரீ மீனாட்சியம்மையுடன் ஸ்ரீ சுந்தரேசப்பெருமான் மகிழ்ந்துறையும் மதுரையம்பதியைத் தலைநகராகக் கொண்ட பாண்டிநாடு பழமையான புகழையுடையது. பாண்டிநாடே பழம்பதி எனப்பெற்றது.

முத்தும் முத்தமிழும் பொலிவுற்று விளங்குவது. பைந் தமிழும் பல வளமும் பொருந்தியது. ' நின்னுடு நல்ல தமிழுடைத்து ' என்று ஔவையாரால் பாராட்டப்பெற்றது. தண்ணார் தமிழளிக்கும் தண் பாண்டிநாடென்று மாணிக்க வாசகரால் புகழப்பெற்றது. ' பன்னு தொல்புகழ்ப் பாண்டி நன்னாடு ' என்று சேக்கிழார் போற்றியது. சேர சோழ பாண்டிய நாடுகளில் தமிழ்நாடென்று வழங்குவது. சந்தனப் பொதியமும், தண் குமரித்துறையும், புண்ணியப் பொருநை யாகிய தாமிரபரணி நதியும், தமிழ் கண்டதோர் வையை நதியும் தன்னகத்துடையது. செந்தமிழ் முனிவனான அகத் தியனும், சவுந்தரபாண்டியனும், சங்கப்புலவர்களும் தழைத் தினிதோங்கிய நாடு. சிவ பக்தியும், மெய்யன்பும் குன்றாமல் அறஞ் செய்யப்பெறும் நாடு. பழமையான நான்மறைகளுக் கும் எட்டாத பராபரனும், தேவியும் மனிதர்போல வந்து செங்கோல் செலுத்திய மங்கலப் பாண்டிநாடு. கன்னி நாடென்றும் கூறப்படும்.

முத்தமிழ்ச் சங்கத் தெய்வப் பாவலர் வீற்றிருக்கும் பாண்டி நன்னாட்டில் ஆடவல்லாராகிய சிவபெருமான் தென் திசையை நெருங்கி வந்து பொதியமலைத் தென்றற் காற்றை முகத்தில் ஏற்றும், செந்தமிழ்ச் சுவையைச் செவி யால் நுகர்ந்தும் தன் நடனத்தால் ஏற்படும் களைப்பைப் போக்கிக் கொள்கிறாராம். இதைப் போன்ற வேறு நாடு மண்ணுலகத்தும் விண்ணுலகத்தும் இல்லை என்பர். பாண்டிநாட்டின் பெருமைகளை திரிசிரபுரம், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும், மற்றையோர்களும் பின் வருமாறு காட்டியுள்ளார்கள்.

" புண்ணியக் குமரியென்றோ பொருநையென்றோ வானேரும்
நண்ணிய வையையென்றோ நயக்கும்வெண்குடிலை யென்றோ
அண்ணிய ஈரிரண்டும் அறமுத லென்குமாகப்
பண்ணிய தவத்ததன்றோ பண்புசால் பாண்டிநாடு "

—மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

" பண்டை நான்மறைக்கு மெட்டாப்பராபரன் மனிதர்போல
மண்டலத் திழிந்துவேந்தர் வல்லியைமணந்து கோவின்
எண்டரும் புவனமூன்று மிருந்தரசாளக் கண்டீர்
தண்டமிழ்ப் பாண்டிநாட்டின் தகவுண்டோமற்றோர் நாடு "
—பழைய திருவிளையாடல்

" உலகம் யாவையு மீன்றவளும்பரு ளுயர்ந்த
திலகநாயகி பரஞ்சுடர் சேயென மூன்று
தலைவரான் முறைசெய்த நாடிஃதன்றிச் சலதி
சுலவுபாரி னுண்டாகுமோ துறக்கத்து மஃதே "
—பரஞ்சோதியார்

இத்தகைய பெருமைகளையுடைய பாண்டிநாட்டில் பெருமான் திருக்கோயில் கொண்டிருக்கும் தலங்களில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் பதினான்காகும். அவைகளைக் குறிக்கும் பாடல் :—

" கூடல் புனவாயில் குற்றாலம் ஆப்பனூர்
ஏடக நெல்வேலி இராமேசம்—ஆடானை
தென்பரங்குன் றஞ்சுழியல் தென்திருப்புத் தூர்கானை
வன்கொடுங்குன் றம்பூ வணம்."

## 2. நகரமும் கோயிலும்

**பா**ண்டிநாட்டுத் தலங்களுள் தலைநகராகிய மதுரைப் பதியின் நடுவில் தாமரை மலரின் பொகுட்டுப் போன் றுள்ள திருவாலவாய்க் கோயில் நாட்டின் முதற் கோயிலாக அமைந்துள்ளது. இக்கோயிலில் பளிங்கு மலையுடன் மரகதம் சேர்ந்தாற்போல, ஸ்ரீ மீனாட்சியம்மையாருடன் ஸ்ரீ சுந்தரேஸ்வரர், கோயில்கொண்டு விளங்குகிறார்.

" சுத்தமார் பளிங்கின் பெருமலையுடனே
சுடர்மரகதம் அடுத்தாற்போல்
அத்தனார் உமையோ டின்புறுகின்ற
ஆலவாயாவதும் இதுவே " —திருஞானசம்பந்தர்

ஓர் புலவர் மதுரை நகரை ஓர் தாமரை மலருக்கு ஒப் பிட்டுக் கூறுகிறுர். மதுரை மாநகர், திருமால் உந்தியில் உதித்த தாமரை மலரைப் போன்றது. அதன் இதழ்களைப் போன்றவை தெருக்கள். இதழ்களின் நடுவில் விளங்கும் பொகுட்டைப் போன்றது அண்ணலார் உறையுங்கோயில்.

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீருர், பூவின்
இதழகத்தனைய தெருவம், இதழகத்து
அரும்பொகுட் டனைத்தே அண்ணல் கோயில்" —பரிபாடல்

மற்ருேர் புலவர் அறிவு என்னும் தராசில் ஓர் தட்டில் மதுரை நகரையும், மற்ருெரு தட்டில் உலகிலுள்ள நகரங் களையும் இட்டுத் தூக்கியபோது மதுரை நகர் அமைந்த தட்டே கனத்தால் தாழ்ந்து நின்றது என்று கற்பனையாகப் பாடுகிறுர்.

"உலகம் ஒருநிறையாத் தானேர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க—உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர். —பரிபாடல்

"கைத்தலநான் கிரண்டுடைய மலர்க்கடவுள்
மேலொருநாட் கயிலையாதி
எத்தலமும் ஒருதுலையிட்டித்தலமு மொருதுலையிட்
டிரண்டுந் தூக்கி
உத்தமமாந் திருவாலவாய்மிகவும் கனத்ததுகண்
டுலகின் மேலா
வைத்ததல மிதுவென்ருல் இதன்பெருமை
யாவரே வழுத்தவல்லார் —பரஞ்சோதியார்

தென்னுடாகிய தமிழ்நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல. அவை சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள், அம்மன் கோயில்கள் முதலியன. இவைகளில் அந்தந்த சமயத் தலைவர்களால் தேவாரம் பாடப்பெற்ற தலங்களும், பெயர் மட்டும் குறிக்கப்

பெற்ற வைப்புத்தலங்களும், தல புராணங்களைக் கொண்ட கோயில்களும், தனிப் பாடல் பெற்ற தலங்களும், பிற்காலத்தில் பக்தர்களால் அமைக்கப்பெற்ற அபிமானத் தலங்களும் அடங்கியுள்ளன. இவைகளுள் தேவாரப் பாடல் பெற்ற 274 தலங்களில் பாண்டிநாட்டுத் தலங்கள் 14-ல் நாட்டின் முதற் கோயிலாகத் திருவாலவாய் என்னும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் வைகைக் கரையின் தென் கரையில் உள்ளது. இத்தலத்தைக் குறித்துத் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய தேவாரப் பதிகங்களும், 11-ந் திருமுறையில் பாணபத்திரர்க்காகச் சொக்கலிங்கப் பெருமான் அருளிய திருமுகப் பாசுரமும், நக்கீரர், பரணர் பாடிய பாடல்களும், 12-ந் திருமுறையாகிய பெரிய புராணத்தில் மதுரை சம்பந்தமாக உள்ள பல பாடல்களும், பல புராணங்களும், பிரபந்தங்கள் பலவும் உள்ளன. இவைகளின் பாடல்கள் பின்னே சேர்க்கப்பெற்றுள்ளன.

## 3. தலத்தின் வேறு பெயர்கள்

இத்தலத்திற்கு மதுரை, ஆலவாய், கடம்பவனம், கூடல், நான்மாடக்கூடல், கன்னிபுரீசம், சிவராஜதானி, சிவநகரம், சமஷ்டிவிச்சாபுரம், சீவன்முத்திபுரம், சிவலோகம், துவாதசாந்தபுரம் முதலிய பெயர்களும் வழங்கும்.

சிவபெருமான் தமது சடையிற் சூடிய பிறையினிடத்துள்ள அமிர்தமாகிய மதுவைத் தெளித்து, நாகம் உமிழ்ந்த விஷத்தை நீக்கிப் புனிதமாக்கியதால் மதுரை எனப் பெயர் பெற்றது.

" திருவமர் அருள்சேர் சொக்கன் தேவர்கள் தேவன் வெய்ய
அரவுமிழ் ஆலவாற்றை மதுர மாக்குதலால் ஆங்கு
வார்புகழ் பதிக்கு நாமம் மதுரைமா நகரியென்றே
பரிவுற அன்றுமுன்னுப் பரந்தது பாரின்மீது "

—பழைய திருவிளையாடல்

சிவபெருமானுக்கு அணியாயிருந்த பாம்பு வட்டமாய் வாலை வாயாற்கௌவி எல்லையைக் காட்டியதால் ஆலவாய் என்றும், கடம்பமரம் அடர்ந்த காடாக இருந்ததால் கடம்ப வனம் என்றும், நீபவனம் என்றும், மதுரையை அழிக்க வருணன் ஏவிய ஏழுமேகங்களையும் தடுக்கும்பொருட்டுப் பெருமான் தம் சடையினின்றும் விடுத்த நான்கு மேகங் களும் நான்கு மாடங்களாகக் கூடிக் காத்ததால் நான்மாடக் கூடல் என்றும், கூடல் என்றும் பெயர்கள் ஏற்பட்டன.

"வாடுவோர் தம்மைப்போற்ற வயங்கொளி மாநகர்க்கண்
கூடருமேக நான்கும் மாடமாக் கூடலாலே
நாடவ ரதிசயிப்ப நான்மாடக்கூட லென்று
பீடுடை நகர்க்கு நாமம் எங்கணும் பிறங்கிற்றன்றே"

—பழய திருவிளையாடல்

கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்னும் நான்கை யும் நான்கு மாடங்களாகக் கூறுவதும் உண்டு. தடாதகைப் பிராட்டியார் கன்னியா யிருந்து அரசு புரிந்தமையால் கன்னி புரீசம் என்றும், சிவபெருமான் சுந்தரபாண்டியனாக அரசாண்ட காரணத்தால் பூலோக கயிலாயம் - சிவராஜ தானி - சிவநகரம் என்றும், ஆன்மாக்களுக்கு ஞானத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கையும் அருளுவதால் சமஷ்டிவிச்சாபுரம் என்றும், சீவன் முத்தர்கள் வாழ்வதால் சீவன்முத்திபுரம் என்றும், வரகுணபாண்டி யனுக்குச் சிவலோகங் காட்டியதால் சிவலோகம் என்றும், விராட்புருடனுக்குச் சிரசின் தானமாகிய பிரம ரந்திரத்திற்கு மேல் பன்னிரண்டங்குல அளவில் இருப்பதாலும், ஆதாரங் கடந்த நிராதாரப் பரவெளித் தலமாதலாலும் துவாதசாந்த புரம் என்றும் பெயர்கள் வழங்கப்பெறும். சங்கப்புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்த இடமாதலால் மதுரைக்குத் தமிழ் மதுரை, தமிழ்க்கூடல், சங்கத் தமிழ்க்கூடல், மூச்சங்கம் வளர்கூடல், விரிதமிழ்க்கூடல், முத்தமிழ் மதுரை முதலிய

பெயர்களும் வழங்கும். இவ்வாறு பலபெயர்களைப் பெற்ற மதுரை-மதுரம் பொருந்திய மதுரை பராபரனுர் மானிடராக வந்து திருவிளையாடல்களைச் செய்தருளிய மாமதுரை

" ஆனபெரு நான்மறைக்கும் அரியயற்குந் தெரியாதார்
மானிடராய் விளையாடும் மாமதுரை நகர்போற்றி "

என்று யாவராலும் போற்றப்படுகிறது.

தென்னிந்திய இருப்புப்பதையில் மதுரை ரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 4 பர்லாங் தூரத்தில் ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வரர் கோயில் உள்ளது. வாடகை வண்டிகளும், ரிக்ஷா வண்டிகளும் எளிதில் கிடைக்கும். வெளியூர்களிலிருந்து மோட்டார் வண்டிகள் மூலமாயும் இத்தலத்தை அடையலாம். தூரத்திலிருந்து வரும்போதே மதுரைக் கோயிலின் நான்கு கோபுரங்களும் காண்போருக்கு மகிழ்ச்சியளிப்பதுடன் அம்மையப்பரின் கோலங்களையும் நினைப்பூட்டும். மதுரை என்பது ஊர்ப் பெயராகவும், திருவாலவாய் என்பது கோயில் பெயராகவும் அமைந்துள்ளது.

தக்ஷிண ரயில்வேயில் தென்பகுதியில் மதுரைச் சந்திப்பு பெரிய ரயில் நிலையமாக உள்ளது. சேரநாட்டாரும், சோழநாட்டாரும், பாண்டிநாட்டாரும், பிறநாட்டாரும் சந்திக்கும் படியான இடம். ரயில் நிலையத்துக்கு முன்னே அழகிய (Booking Office) பிரயாணச் சீட்டுக்கொடுக்கும் இடம் புதிதாகக் கட்டப் பெற்றுள்ளது. இங்கிருந்து இராமேஸ்வரத்திற்கும், விருதுநகருக்கும், திண்டுக்கல்லுக்கும், போடிநாயக்கனூருக்கும் தனித் தனியே ரயில் கிளைப்பாதைகள் செல்கின்றன.

**Madura** : *Popularly known as the " City of* Festivals " is the second largest City in the Presidency. It was the seat of the ancient Pandiyan Kingdom which lasted from the era before Christ, up to the 17th century. Madura was the centre of

Tamil culture for several centuries. The design of the massive temple in the heart of the City, dedicated to Goddess Meenakshi displays an exuberance of fancy and a lavishness of labour, rarely to be met with elsewhere. The Chitra Festival in April - May is very largely attended. The Thirumalai Naick's Mahal which was built as a Palace is the finest specimen of secular architecture in India. There are retiring and Refreshment Rooms at the Station." —*S. I. R. Places of Interest*

---

## 4. மதுரை நகரம்

பாண்டி நாட்டுக்குத் தலைநகராகிய மதுரை அன்றும், இன்றும், என்றும் பெருமையுடையது. சென்னை ராச்சியத்தின் இரண்டாவது பெரிய நகரம். கடல் மட்டத்திற்கு 330 அடி உயரமுள்ளது. நகராட்சியில் நடைபெறுவது. நகராட்சி 1866ல் தொடங்கியது.

பல வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சுமார் 80 லட்சரூபாய் வருமானமுடையது. சென்னை கார்ப்பரேஷனுக்கு அடுத்த ஸ்தானத்தை வகிப்பது. சுமார் 10 மைல் சுற்றளவுள்ளது. ஜனத்தொகை சுமார் 4 லட்சம். நகரின் நடுவில் ஸ்ரீமீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயில் உள்ளது. கோயிலுக்கு வெளியே ஆடிவீதி, சித்திரைவீதி, ஆவணிமூலவீதி, மாசிவீதி, மாரட்வீதி, வெளிவீதி முதலிய வீதிகள் நான்கு பக்கங்களிலும் உள்ளன. பல கோயில்களைக் கொண்டுள்ளதால் கோயில் நகரம் என்றும், திருவிழாக்கள் மிகுந்ததால் திருவிழா நகரம் (City of Festivals) என்றும் பெயர்கள் வழங்கும். சிற்பக்கலைகளைக்கொண்ட திருமலை நாயக்கர் அரண்மனை, புதுமண்டபம், மாரியம்மன் தெப்பக்குளம் முதலிய இடங்களைக்கொண்டது. மதுரை இராமநாதபுரம்

மாவட்டங்களின் கலெக்டர், நீதிபதி முதலிய தலைமை அதிகாரிகளின் இருப்பிடங்களும், அலுவலகங்களும், வேறு பல சர்க்கார் நிலையங்களும் உள்ளன. நூல் நூற்கும் சாலைகளாகிய ஹார்வி மில் முதலிய 8 யந்திர சாலைகளும், முனிசிபல் தொழிற்சாலையும், டி. வி. எஸ். தொழிற்சாலையும், அலுவலகமும் உள்ளன. மதுரைக்குப் பக்கத்துள்ள ஊர்களிலும் பல மில்கள் உள்ளன. குழாய்கள் மூலம் குடிதண்ணீர் விடப்படுகிறது. நகர் முழுவதும் மின்சார விளக்குகள் இரவைப் பகலாக்குகின்றன. காலத்தை அறிவிக்கச் சங்கு ஊதப்படுகிறது. நகராட்சியைச் சேர்ந்த கழிவு நீர்ப்பண்ணை, கம்போஸ்டு உர டிப்போ, மோட்டார் பஸ் நிலையம் முதலியனவும், சித்த யூனானி ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளும், பிரசவ விடுதிகளும், 11 முனிசிபல் ஆஸ்பத்திரிகளும், தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் நர்சிங்ஹோம், பிரசவ விடுதிகள் முதலியனவும் ஆங்காங்குள்ளன. பல நூல் நிலையங்களும், வாசகசாலைகளும், நான்காம் தமிழ்ச் சங்கமும் உள்ளன. கல்வித்துறையில் மாணவர்களுக்காக 3 கல்லூரிகளும், வைத்தியக் கல்லூரியும் பெண்களுக்காக 2 கல்லூரிகளும், 16 உயர்நிலைப் பள்ளிகளும், 3 பயிற்சிப்பள்ளிகளும், நூற்றுக்கு மேற்பட்ட தொடக்கப்பள்ளிகளும் உள்ளன. பாலிடெக்னிக் தொழிற் கல்விப் பயிற்சி நிலையம் உள்ளது. சர்க்கார் எர்ஸ்கின் ஆஸ்பத்திரியும், கிறிஸ்தவ மிஷனரிமார்களால் நடத்தப் பெறும் ஆஸ்பத்திரிகளும் உள்ளன. நகரில் டி. வி. எஸ். கம்பெனியாரின் (City Bus) நகர மோட்டார் வண்டிகள் பல இடங்களுக்கு ஓடிக்கொண்டிருக்கின்றன. (Bus) நிலையத்திலிருந்து வெளியூர்களுக்குப் பல மோட்டார் வண்டிகள் போக்குவரத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றன. மதுரையைச் சுற்றிலும் பசுமலை, யானைமலை, பன்றிமலை, நாகமலை முதலிய மலைகள் இருக்கின்றன. வாணிகத் துறையில் மதுரை நகரம் தென்னாட்டின் கேந்திரஸ்தலமாக

விளங்குகிறது. நூல், கைத்தறி, ஜவுளி சாயங்களுக்குப் பெயர்பெற்றது. கைத்தறி ஜவுளிகள் இலங்கை, பர்மா, மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படு கின்றன. மதுரையில் கிடைக்காத பொருள் இல்லை. வெளி யூர்களிலிருந்து வரும் யாத்திரை வாசிகள் தங்குவதற்கு முசாபுரி பங்களா, மீனாட்சி நிலையம், மங்கம்மாள் சத்திரம், கருப்பட்டிச் சத்திரம், குன்னத்தூர் சாம்பசிவய்யர் சத்திரம், லாலா சத்திரம், தேவாங்கசெட்டியார் சத்திரம், மார்வாடி சத்திரம் முதலியவை உள்ளன. இவைகள் மதுரை நகர சபையாராலும், மாவட்ட போர்டாராலும் நிர்வகிக்கப்படு கின்றன. மதுரை ரயில் நிலையத்தில் (Retiring Rooms) தங்கும் அறைகள் உள்ளன. மதுரை நகரம் கைத்தொழிலி லும், கல்வித்துறையிலும், சமயத்துறையிலும் சிறந்து விளங்குகிறது.

---

## 5. பார்க்க வேண்டிய பிற இடங்கள்

**திருமலை நாயக்கர் மகால் :** மீனாட்சியம்மன் கோயிலுக்குத் தெற்கில் இரண்டு பர்லாங் தூரத்தில் உள்ளது. மிகவும் பெரிய கட்டிடம். இதன்மேல் ஏறிப் பார்த்தால் நகரின் தோற்றம் தெரியும். சர்க்கார் அலுவலகங் கள் இதில் உள்ளன.

**பத்துத் தூண் :** மகாலுக்கு அருகில் உள்ளது. திருமலை நாயக்கர் தமது யானைகளை இந்தத் தூண்களில் கட்டி வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது.

**தெப்பக் குளம் :** நகரின் கீழ்க்கோடியில் 1½ மைல் தூரத்தில் மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ளது. குளத்தின் நடுவில் பூஞ்சோலையுடன் கூடிய நீராழிமண்டபம் உள்ளது. படகின்மூலம் மையமண்டபத்துக்குச் சென்று வரலாம்.

***திருப்பரங்குன்றம்*** : நகரின் தென்மேற்கில் சுமார் 5 மைல் தூரத்தில் உள்ளது. முருகனுக்குரிய ஆறு படை வீடுகளில் ஒன்று. தேவாரம் பெற்ற தலம். மோட்டார் வசதிகள் உண்டு. அடிவாரத்தில் சரவணப் பொய்கை உள்ளது.

***அழகர் கோயில்*** : மதுரைக்கு வடக்கில் 13 மைல் தூரத்தில் உள்ளது. திருமாலுக்குரிய 108 திருப்பதிகளில் ஒன்று. முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளில் ஒன்று. திருமாலிருஞ் சோலை என்றும், பழமுதிர் சோலை என்றும் கூறப்படும். ஆழ்வார்கள் பாடிய பிரபந்தப்பாடல்களும், அருணகிரியார் பாடிய திருப்புகழ்ப்பாடல்களும் உள்ளன. மலையின்மேல் நூபுரகங்கை - என்ற தீர்த்தம் உள்ளது.

***யானைமலை*** : நகரின் வடகிழக்கில் 5 மைல் தூரத்தில் உள்ளது. யானை படுத்ததுபோல் அமைந்தது. 250 அடி உயரமுள்ளது. அடிவாரத்தில் பெருமாள் கோயிலும், குளமும் உள்ளன.

***திருவாதவூர்*** : மதுரைக்குத் தென் கிழக்கில் 15 மைல் தூரத்தில் உள்ளது. மாணிக்கவாசகர் பிறந்த ஊர். திருவாதூர் என வழங்குகிறது.

**Madura**: " Madura the Capital of the Taluk and District is the largest moffusil town in the Presidency, being the chief place in the District, Madura, the Head-Quarters of all the usual Officers. It stands on the main line of the South Indian Railway, 345 miles from Madras. It possesses a Travellers' Bungalow, rooms for the Europeans at the Railway station and many-Chatrams for natives. The chief of the last is that opposite the Station which was founded and

endowed from funds left by Queen Mangammal and is still called by her name. Municipality was constituted in 1866. The town is the industrial, educational and religious centre of the District.

Madura stands on the right bank of the Vaigai. In the neighbourhood rise three small prominent hills, which are called the Anaimalai, Pasumalai and Nagamalai from their supposed resemblance to an Elephant, a Cow, and a Snake respectively. The South Gopuram of the great Meenakshi Temple is 484 feet above the sea, but this tower is itself some 150 feet above the ground and the town is thus only about 330 feet above the sea level. The Vaigai bridge was completed in 1889. The view up to the river from this is one of the most charming in the District. In the foreground stands the little stone Mayya Mantapam to which the image of Siva is taken at the great Chitrai feast.

Rous Peter is the best remembered of all the Collectors of Madura. He gave valuable jewels to Meenakshi Temple and Alagar Koil. The people nick-named him, "Peter Pandiya." He died in 1828. It remains to refer to the three buildings for which Madura is so widely known, namely the great temple, the tank called the Teppakulam and the Palace of Thirumalai Nayakkan."

*—Madura District Gazetteers*

**The Great Temple :** "The Temple stands in the centre of the town. Except the inner shrines,

probably none of it is older than the 16th century. The original building of the days of Pandiya Kings was almost entirely destroyed by the Muslim troops of Malick Kafer in 1310. The inner shrines are mentioned by Manicka Vasagar, who is thought to have lived in the 5th century of the present era. Four high stone-walls, in the middle of each of which is a gate-way surmounted by pyramidical gopurams, enclose a nearly rectangular space, about 830 feet by 730 feet, within which is a laybrinth of store houses, cloisters, mandapams and lesser shrines and the sacred tank, and in the centre, surrounded by other walls with more gate-ways and towers, the inner shrines of the God and Goddess. The God is SIVA, in his form Sokkanatha or Sundaram - " the beautiful " - and the Goddess, his wife, is Meenakshi - the " fish-eyed." Round about the Temple outside the higher walls is a neat garden, fenced with iron railings which was laid out to replace the heaps of rubbish, which then occupied this space. The Gopurams are of the ordinary pattern. They are unusually lofty and are a land-mark for miles around. The highest of them is the South Gopuram, the top of which is about 150 feet above the street below it.

The legend regarding the deities in the local sthalapurana says that Meenakshi was the daughter of the Pandiya King who to the consternation of her parents was born with three breasts. A fairy, however, told the King that the

third breast would disappear as soon as she met her future husband and it did so when she first encountered Siva. They were wedded accordingly with much pomp.

Siva's shrine contains several subsidiary buildings which is not necessary to particularise, a stump, which is said to be all that now remains of the legendary forest of Kadamba trees, which is supposed to have formerly covered all this part of the Country. In it are kept the Temple jewels, which include a Pendant for the God, given by a Pandiyan King, a Head-dress studded with pearls and rubies presented by Thirumala Naicken, and a pair of golden stirrups, which were the gift of Rous Peter – goes the story for an escape from an elephant he had wounded. In one corner is the Mantapa Nayakka mantapam or King Mantapam among Mantapams. It is quite eclipsed by the Kambathadi Mantapam (Flag Staff Mantapam). Behind the Flag Staff are four huge images of Siva dancing, of the fearsome Goddess Kali and of Veerabhadra, in two different shapes, which are cut out of a single block of stone.

The chief festivals are the Chitrai, Teppakulam, and Avani Moolam festivals. The first occurs in Chitrai (April - May). The second takes place in Thai (Jan. - February). This was originated by Thirumalai Naicken after he had built the Teppakulam and is fixed for the Anniversary of his birthday. The third occurs in August September."

—*Madura District Gazetteers*

# 6. கோயிலின் அமைப்பு

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் மிகப் பெரிய கோயில். கலையழகும், சிலையழகும். சிற்பத்திறனும், சித்திர வனப்பும், நாத அமைப்பும்கொண்டது. கோயிலுக்குள்ளே பல மண்டபங்களும், பல மூர்த்திகளின் சிலைகளும், பொற்றாமரைக்குளமும், விமானங்களும் சிற்பத்திறனில் சிறந்து விளங்குகின்றன. மூர்த்திகளின் சிலைகளும், வேறு பல உருவங்களும் பேசாத பேச்சில் பேசும். சில தூண்களும், சிலைகளும் இசைபாடும். இலக்கியப் பாடல்களும், கதைச் சித்திரங்களும் ஆங்காங்கு தீட்டப் பெற்றுள்ளன. திருவிளையாடல்களை நடித்துக்காட்டும் நாடகச் சிற்பங்களும், நடனச் சிலைகளும் உள்ளன. எனவே முத்தமிழுக்குரிய இயல் - இசை - நாடகங்களைக் காட்டும் கலைக்கோயிலாகவும், சிலைக் கோயிலாகவும் மதுரைக்கோயில் விளங்குகிறது.

இந்திரன் தனக்கு நேர்ந்த கொலைப் பாவத்தைப் போக்கிக் கொள்ளப் பல தலங்களுக்கும் சென்று வரும் போது, கடம்பவனமாகிய இத்தலததில் ஓர் அழகிய லிங்கத்தைக் கண்டு பூசித்து வழிபடப் பாவம் நீங்கியதால் இந்திர விமானத்துடன் கூடிய பெருங்கோயிலைக் கட்டுவித்தான் என்பர். இப்பெருங்கோயில் நகரின் நடுவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலின் நான்கு பெரிய கோபுரங்களும், தூரத்தில் காணும்போதே கண்களுக்கு விருந்தளிக்கும். மேல்புறக் கோபுரம் வருகிறவர்களை வரவேற்கும். இதில் பல புராணக் கதைகள் சுதையால் சித்திரிக்கப் பட்டுள்ளன. தென்கோபுரம் மிகவும் உயரமானது. பூமி மட்டத்திலிருந்து 150 அடி உயரம். கோயிலுக்குள்ளே எட்டுக் கோபுரங்களும் 2 விமானங்களும் உள்ளன. வலது புறம் அம்மன் கோயிலும், இடதுபுறம் சுவாமி கோயிலும் சக்தியும் சிவமுமாக அமைந்துள்ளன. அம்மன் கோயிலுக்கு முன்னே வளைவுள்ள அஷ்டசக்தி மண்டபமும், சுவாமி

கோயிலுக்கு முன்னே பெரிய கோபுரமும் உள்ளன. இதன் பக்கத்தில் கருப்பண்ணசுவாமி கோயில் உள்ளது. சக்திக்குப் பிரதான தலமாதலின் ஸ்ரீ மீனாட்சியை முதலில் தரிசித்தே சுவாமி கோயிலுக்குச் செல்வர். கோயிலுக்குள் ஆடிவீதியும், வெளியில் சித்திரைவீதி, ஆவணிமூலவீதி, மாசிவீதி முதலிய பல வீதிகளும் உள்ளன. திருவிழாக் காலங்களில் அந்தந்த வீதிகளில் சுவாமி புறப்பட்டுவரும்.

ஆடிவீதியில் தென்புறத்தில் யானைக் கூடமும், திவ்ய ஜீவியசங்கமும், தேவஸ்தான நூல் நிலையமும், பன்னிரு திருமுறை மன்றமும், தேவஸ்தான அலுவலகமும் (Office) உள்ளன. மேற்கில் பசுமடம், சிவகங்கை, அழகர்கோயில் தேவஸ்தான நிலையங்கள் உள்ளன. வடக்கில் திருப்புகழ் மன்றமும், திருவள்ளுவர் கழகமும், மதுரை ஆதீனகர்த்தர் நடத்தும் தவநெறி மன்றமும், கிழக்கில் பதினறுகால் மண்டபமும் உள்ளன. இவ் வீதியில் சமயப் பேச்சுக்களும், திருக்குறள் விரிவுரைகளும், பிற கூட்டங்களும் அவ்வப்பொழுது நடந்துகொண்டேயிருக்கும்.

வடகோபுரத்துக்குப் பக்கத்தில் 5 இசைத் தூண்கள் (Musical Pillars) வரிசையாய் நிறுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் 22 தனித்தனித் தண்டுகள் உள்ளன. அவைகளை மெதுவாய்த் தட்டினல் பல ஓசைகள் பிறக்கும். ஆயிரக்கால் மண்டபத்திலும் பல ஒலிகளைத்தரும் சிலைகள் உள்ளன.

இந் நூலாசிரியர் மதுரையைப் பற்றி எழுதிய குறிப்புக்களைக்கொண்டு திருச்சி வானெலி நிலையத்தார் (A. I. R.), 'நான் மாடக்கூடல்' என்னும் தலைப்பில் இக் கோயிலில் உள்ள இசைத் தூண்களின் ஒலிகளையும், பிற சிற்பங்களின் நாதங்களையும் எழுப்பித் தேவாரப்பண் அமைத்துக் கோயிலின் சிறப்புக்களை அவ்வப்போது ஒலிபரப்பி வருகிறார்கள்.



அஷ்ட சக்தி மண்டபத் தோற்றம் ப - 16

கோயிலுக்கு வெளியே நான்கு மதில்களைச் சுற்றிலும் இரும்பு வேலிகள் அமைக்கப்பெற்று, உட்புறத்தில் பூந்தோட்டங்கள் வைக்கப்பட்டுள்ளன. மதில் பக்கங்களில் குப்பைகள் சேராதபடி இவ்விதம் அமைக்கப்பெற்றது. கோயிலின் சுற்றளவு கிழமேலில் 847 அடி. தென்வடலில் 792 அடி. மதிலுக்குள் ஆடிவீதியின் சுற்றளவு கிழமேலில் 830 அடி. தென்வடலில் 730 அடி. கோயிலின் உட்புறம் வெளிவீதி மட்டத்திற்கும் தாழ்வாய் உள்ளது. பெரிய கோயிலின் அமைப்பைக் காட்டும்படமும், ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயில் படமும், ஸ்ரீ சுந்தரேஸ்வரர் கோயிலின் படமும் தனித்தனியே சேர்க்கப் பெற்றுள்ளன.

## ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயில்

அம்மன் கோயிலுக்கு முன்னே **அஷ்டசக்தி மண்டபம்** உள்ளது. இதில் எட்டுச் சக்திகளின் சிலைகள் உள்ளன. தென்புறத்தில் கௌமாரி, ரௌத்திரி, வைஷ்ணவி, மகா லட்சுமியின் வடிவங்களும், வடபுறத்தில் எக்ஞரூபிணி, சாமளை, மகேஸ்வரி, மனோன்மணியின் உருவங்களும் தனித் தனித் தூண்களில் அமைக்கப் பெற்றுள்ளன. இம் மண்டபத்தில் ஸ்ரீ மீனாட்சியம்மையின் வரலாறு சித்திரிக்கப் பெற்றுள்ளது. மீனாட்சி பிறந்ததிலிருந்து சுந்தரேசரை மணம் புரியும் வரையிலுள்ள ஓவியங்கள் உள்ளன. இம் மண்டபத்தை அடுத்த வாயிலின் வலதுபுறம் வல்லபை கணபதியும், இடதுபுறம் சண்முகரும் காட்சிதருகிறார்கள். இதையடுத்து உள்ளே சென்றால் வடக்கில் வேடுவர் சிலையும், தெற்கில் வேடுவச்சி சிலையும் உள்ளன. இவ்விரண்டும் ஓர் அந்தணனுக்கு மாபாதகந் தீர்த்தருளிய அடையாளங்கள் ஆகும்.

*அஷ்டசக்தி மண்டபம்*

இதையடுத்து **மீனுட்சி நாயக்கன் மண்டபம்** உள்ளது. திருமலே நாயக்கரின் மந்திரிகளுள் ஒருவஞன மீனுட்சி நாயக்கனுல் கட்டப்பட்டது. இதில் பூக்கடைகளும், வேறு பல கடைகளும் உள்ளன. 160 அடி நீள முள்ளது. பரந்த இடம். 6 வரிசைகளில் அமைத்த தூண்களேயுடையது. கோயிலுக் குச் செல்வோரும், வருவோரும் இம் மண்டபத்தில் சிறிது நேரம் அமர்ந்து செல்வர். இம் மண்டபத்தின் மேல்விட்டத்தில் 12 ராசிகள் சதுரவடிவில் அமைக்கப் பெற்றுள்ளன.

மீனுட்சி நாயக்கன் மண்டபம்

இதை அடுத்த கோபுரவாயிலில் பெரிய திருவாசி விளக்குகள் தினந்தோறும் ஏற்றப்படுகின்றன. சிவகங்கை சமஸ்தானத்தின் ஆதரவில் இவ் விளக்குத் திருப்பணி நடைபெற்று வருகிறது.

இதை அடுத்து **முதலி மண்டபம் உள்ளது**. கடந்தை முதலியாரால் கட்டப்பெற்றது. இதில் வடக்கு வரிசையில் பிக்ஷாடனர், ரிஷிபத்தினி, தாருகமுனிகளின் சிலேகளும், தென்வரிசையில் முனிவர், மோகினி, கடந்தை முதலியார் ஆகியோர்களின் சிலேகளும் உள்ளன. சிலேகளின் சிற்பங் கள் மிகவும் அழகாய் உள்ளன. சிவபெரு மான் பிக்ஷாடனராய் தாருகவன முனிவர் களிடம் சென்று உபதேசித்த வரலாற்றை இச் சிலேகள் அறிவுறுத்துகின்றன. சுவாமி கோயில் பிரா காரத்திலும், கம்பத்தடி மண்டபத்திலும், ஆயிரக்கால் மண் டபத்திலும், பிற இடங்களிலும் பிக்ஷாடனரின் சிலேகள் உள்ளன. அடியார்களின் அன்பை அங்கங்கிருந்து யாசிக் கிருர் போலும்.

முதலி மண்டபம்

இதை அடுத்து உள்ளே சென்ருல் **பொற்ருமரைக் குளம்** காணப்படும். கோயிலுக்குரிய தீர்த்தங்களில் முதன்மையானது. சிவகங்கை என்றும் பெயர் பெறும்.

இந்திரன் தான் பூஜிப்பதற்குப் பொன் தாமரை மலர்ப் பெற்ற இடம். திருக்குறளின் பெருமையை நிலை நாட்டிய சங்கப்பலகை தோன்றிய தடம். தருமபுரம் ஆதீனம் ஆதிகுரு மூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தருக்கு அரன் திருவருளால் சொக்கலிங்கம் கிடைக்கப் பெற்ற இடம். இக் குளத்தில் மீன்களும் நீர்வாழ் உயிர்களும் இல்லாதிருப்பது ஓர் அதிசயமாகும். *குளத்தின் நடுவில் தற்போது ஓர் பொன் தாமரை மலர் மிதக்கவிடப்பட்டுள்ளது. இக் குளத்தைச் சுற்றிலுமுள்ள சுவர்களில் திருவிளையாடற் புராணக் கதைகள் சித்திரிக்கப் பெற்றுள்ளன.

பொற்று மரைக் குளம்

தெற்குச்சுவரில் திருக்குறளின் 1330 பாடல்கள் காசி மடம் திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் ஆதரவில் வெண் சலவைக் கற்களில் தீட்டப்பெற்றுள்ளன. காலை மாலை நேரங்களில் பக்தர்கள் அனுஷ்டானம் செய்வர். இக் குளத்தின் கிழக்குப் பக்கத்திலிருந்து பார்த்தால் சுவாமி அம்மன் கோயில்களின் தங்க விமானங்களைக் காணலாம்.

தற்போது வெளியில் உள்ள கிணற்றிலிருந்து யந்திரக்குழாய்கள் மூலம் குளத்திற்குத் தண்ணீர் வரவும், போகவும் ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளது.

ஒரு காலத்தில் குருடரும் முடவருமாகிய இரட்டைப் புலவர்கள் இத்தலத்திற்கு வந்து பொற்றாமரைக்குளத்தில் நீராடினர். குருடர் தமது துணியை அலசும்போது துணி நழுவி அப்பாற் சென்றது. அப்போது முடவர் அவரைக் கேலி செய்யும் முறையில்

*ஓர் நாரைக்குப் பெருமான் அருளிய வரத்தின்படி இக் குளத்தில் மீன்களும், பிற உயிர்களும் இல்லாமல் ஒழிந்தன என்பது வரலாறு.

" அப்பிலே தோய்த்திட் டடுத்தடுத்து நாமதனைத்
தப்பினுல் நம்மையது தப்பாதோ "


என்று பாடினுர். குருடர் ஊனக்கண்ணிழந்தாலும் ஞானக் கண் பெற்றவராதலால், பதில் கூறும் முறையில் " செப்பக் கேள் – இக்கலிங்கம் போனுலென் ஏகலிங்க மாமதுரைச் சொக்கலிங்கம் உண்டே துணை " என்று பாடினுர். (கலிங் கம் – துணி) பெருமான் அருளால் துணியும் காற்ருல் தள்ளப்பெற்றுக் கரை சேர்ந்தது.

" ஆழ்ந்தசெழுந் தடம்பொற்ரு மரைமலர, அவனிமிசை
வாய்ந்தவுயர் பெயர்பொற்ரு மரையென்ன மருவியதால் "
—திருவிளையாடல்

பொற்ருமரைக் குளத்திற்கு மேற்கில், ஸ்ரீ மீனுட்சி சந்நிதிக்கு எதிரில் கிளிக்கட்டு மண்டபம் உள்ளது. கிளிக் கூண்டுகள் இருப்பதால் இப்பெயர் பெற்றது. மீனுட்சியம்மனின் வலது கையில் ஓர் கிளியுள்ளது. இம்மண்டபத் தூண்களில் யாளிகளின் சிற்பங்கள் உள்ளதால் யாளிமண்டபம் என்றும் பெயர் பெறும். சங்கிலிமண்டபம் என்றும் கூறுவர். இம்மண்டபத்தில் தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் முதலிய பஞ்சபாண்டவர்களின் சிலைகளும், துரோபதையின் சிலையும் அழகாக உள்ளன. இம்மண்டபத்திலுள்ள தனி மண்டபத்தில் பெண்களின் கோலாட்டம் நடைபெறுவதுண்டு.

கிளிக்கட்டு மண்டபம்

இம் மண்டபத்தில் ஸ்ரீ மீனுட்சியம்மன் சந்நிதியின் **பிரதானவாயில்** உள்ளது. இருபுறமும் திருவாயில் இருபாலர்களின் சிலைகள் உள்ளன. தலத்துக்குரிய சித்தி விநாயகர் சந்நிதி வலது புறமும், குமரர் சந்நிதி இடதுபுறமும் உள்ளன. தெற்கு வாயிலே அடுத்துக் காசிவிஸ்வநாதர்–விசாலாட்சி சந்நிதியும், ஜெவந்தீஸ்வரர் கோயிலும், கிளிக் கூண்டும் உள்ளன. வடபுறத்தில் சுவாமி கோயிலுக்குக்



கிளிக்கட்டு மண்டபம்

ப - 20

செல்லும் நடுக்கட்டுக்கோபுரவாயில் உள்ளது. இடைக்கட்டு வாயிற்கோபுரம் என்றும் சொல்லப்படும். இதில் பல அழகிய கற்சிற்பங்கள் உள்ளன. இவ்வாயிலுக்கு நேராக முக்குறுணிப் பிள்ளையார் சந்நிதியுள்ளது. நடுக்கட்டுக் கோபுரத்துக்கு முன்னுள்ள இடைவெளி, முத்து வழி என்று சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் கிழக்கில் சென்னீஸ்வரர் கோயிலும், மேற்கில் முத்துலிங்கமும் உள்ளன. (கோயில்களில் கிளிக்கூண்டுமண்டபம் உண்டு. அதில் பல கூண்டுகளில் கிளிகளை வளர்த்துக் கடவுளின் திருநாமங்களைச் சொல்லிப் பழக்கிக் கோயிலுக்கு வருவோர் களுக்கு கடவுளின் நினைப்பை உண்டாக்குவது மரபு. இலக்கியங்களில் கிளிக்கண்ணி, கிளிவிடுதூது என்ற நூல்களும் உண்டு.)

அம்மன் கோயிலுக்குள் 2-ம் பிராகாரத்தில் கிழக்கில் திருமலை நாயக்கர் மண்டபமும், மேற்கில் கொலுமண்டப மும், கூடல் குமரர் சந்நிதியும் உள்ளன. கொலுமண்டபத் தில் நவராத்திரி விழாவில் அம்மன் கொலுவிருந்து, காட்சி தரும். இந்தப் பிராகாரத்துக்கடுத்து அறுகாற்பீடவாயில் உள்ளது. இவ்விடத்தில் ஸ்ரீ மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் அரங்கேற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. வாயிலுக்கு இருபுறமும் "காலத்தொடு கற்பனை கடந்த"—"தொடுக்குங் கடவுள்" என்று தொடங்கும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் வெண் சலவைக்கற்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. சுவர்களில் மீனாட்சி கல்யாணம் சித்திரிக்கப் பெற்றுள்ளது. வாயிலுக்கு வலது புறத்தில் திருமலை விநாயகர் சந்நிதியும், இடதுபுறத்தில் திருமலைக்குமரர் சந்நிதியும் உள்ளன. இதை அடுத்து உள்பிராகாரத்தில் (முதல் பிராகாரம்) கிழக்கில் ஐராவதவிநாயகரும், மேற்கில் வல்லபை கணபதியும், நிருத்த கணபதியும், முத்துக்குமார சுவாமியும் கோயில் கொண்டுள்ளார்கள். வடக்கில் சண்டி கேஸ்வரி சந்நிதியும், பள்ளியறையும் உள்ளன. மூலஸ்

தானத்தில் நடுநாயகமாக ஸ்ரீ மீனாட்சியம்மையார் கருணை நோக்குடன் இரண்டே கைகளைக்கொண்டு எழுந்தருளி யிருக்கிறார். சந்நிதிக் கெதிரில் உலோகக்கிராதிகள் பொருத்தப்பெற்றுள்ளன. ஒருபால் ஆண்களும், மற்றொரு பால் பெண்களும் தரிசித்தவண்ணமாக இருப்பர். ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயிலின் படம் தனியே காட்டப் பெற்றுள்ளது.

"பொங்குருச் செல்வங்கல்வி பொருவிலா வாய்மைதூய்மை
இங்கெமக் கருளவல்ல இணையிலா வெம்பிராட்டி
பங்கயத்தடஞ் சூழ்கூடற் பவளமால்வரையை நீங்கா
அங்கயற் கண்ணிமங்கை அடிக்கமலங்கள் போற்றி"

—பழைய திருவிளையாடல்


## ஸ்ரீ சுந்தரேஸ்வரர் கோயில்

கோயிலுக்கு முன்னே பெரிய கோபுரம் விண்ணை யளாவி நிற்கிறது. நான்கு கோபுரங்களில் இது கீழ்த் திசைக் கோபுரமாகும். இதைக் கடந்து உள்ளே சென்றால் **வீரவசந்தராய மண்டபம்** உள்ளது. முத்துவீரப்ப நாயக்க ரால் கி. பி. 1609-ல் கட்டப்பெற்றது. இதிலும் பல கடை கள் உள்ளன.

இதற்குப் பக்கத்தில் வடபுறத்தில் **ஆயிரக்கால் மண்டபம்** உள்ளது. மதுரைக் கோயிலில் உள்ள மண்டபங் களுள் மிகவும் பெரியது; பல சிற்பங்களுடையது. விசுவநாத நாயக்கரின் பிரதம மந்திரியும், தளகர்த்தனுமான அரிய நாத முதலியாரால் 16-வது நூற்றுண்டில் கட்டப்பெற்றது.

ஆயிரக்கால் மண்டபம்

அவருடைய உருவச் சிலையும் ஓர் தூணில் உள்ளது. இம் மண்டபத்தில் 985 தூண் கள் உள்ளன. நடுவில் நடராஜரின் பெருஞ் சிலை உள்ளது. இது சித்திரசபை என்று சொல்லப்படும். இம் மண்டபத்துக்கு முன் வரிசைத் தூண்களிலும், நடு



ஆயிரக்கால் மண்டபம் – வெளித்தோற்றம்   ப - 22

மண்டபத்தின் இருவரிசைத் தூண்களிலும் பல சிலைகள் உள்ளன. இவை மிகவும் சிற்பம் பொருந்தியவை. ஒவ்வொன்றும் தனிக்கல்லில் ஆக்கப் பெற்றது. சில சிற்பங்களில் நாதங்கள் பிறக்கும். சிலைகளில் அழகிய முகத்தோற்றமும், உடல்கட்டும், நரம்புகளின் எழுச்சியும் காணப்படும். மண்டபத்தின் அடியில் பல நடனச் சிற்பங்கள் உள்ளன. இவைபோன்ற சிற்பங்கள் புதுமண்டபத்திலும் உள்ளன.

இம் மண்டபத்தின் முகப்பிலுள்ள தூண் வரிசையில் முதலும் கடைசியும் பல சிறு தண்டுகளையுடைய பெருந் தூண்களாகும். கீழ்புறத்தூணில் ஓர் தண்டு உருளுவதைக் காணலாம். இடையில் மேற்கிலிருந்து சிவனுர், கண்ணப்ப நாயனுர், பிக்ஷாடனர், அரியநாத முதலியார், அரிச்சந்திரன், சந்திரமதி, குறவன், குறத்தி ஆகியோரின் சிலைகள் தனித் தனித் தூண்களில் அமைக்கப் பெற்றுள்ளன. இவை ஒவ்வொன்றும் கதைகளை அறிவிக்கும் வகையில் ஆக்கப் பெற்றுள்ளன. சிவனுரின்சிலை அங்கம் வெட்டிய திருவிளையாடலைக் குறிக்கும். கண்ணப்பர் சிலையில் ஒரு காலைச் சிவலிங்கத்தின் மேல் வைத்துக்கொண்டு, கைகளால் கண்ணைத்தோண்டுவதும், சிவகோசரியார் மறைந்திருந்து கவனிப்பதும் காட்டப்பெற்றுள்ளன. சந்திரமதி தன் இறந்த குழந்தையைத் தாங்கிக்கொண்டு முகவாட்டத்துடன் நிற்கிருள். முகத்தில் சோகம் காட்டப்பெற்றுள்ளது. குறவன் சிலையில் குறவன் பாடுபட்டுழைத்து உழைப்பின் பயனுல் பல அணிகளைப் பூண்டிருக்கும் சிற்பம் அமைக்கப் பட்டுள்ளது. குறத்தி ஒரு பிள்ளையைத் தோளிலும், ஒரு பிள்ளையை மடியிலும், ஒரு பிள்ளையைக் கையிலுள்ள கூடையிலும் வைத்துள்ளாள். கூடை அழகாய்ப் பின்னியிருப்பது சிற்பத்தில் காட்டப்பெற்றுள்ளது. அரியநாத முதலியார் அழகிய குதிரையில் அமர்ந்துள்ளார்.

மண்டபமுகப்பை அடுத்துள்ள தூண் வரிசையில் மேற்கிலிருந்து பாண்டியன், சிவவீரன், அமுதகலசத்தை யுடைய நிருத்தகணபதி, துவாரபாலகர்கள், சுப்பிரமணியர், நாகராஜன், **சரஸ்வதி** ஆகியோரின் சிலைகள் தனித்தனியே உள்ளன. நாகராஜனின் தலையில் ஐந்தலை நாகம் அமைக்கப் பெற்றுள்ளது. சரஸ்வதியின் சிலை மிகவும் அழகாய் உள்ளது. தலைசாய்த்த வண்ணம் இடுப்பை வளைத்து வீணைவாசித்துக்கொண்டுள்ளாள். வீணையின் கம்பிகளும், கட்டைகளும் கல்லில் காட்டப் பெற்றுள்ளன. கைகளில் சதைத் திரட்சியும், நரம்புகளும், கூர்மையான நகங்களும் சிற்பித்துக் காட்டப் பெற்றுள்ளன.

இதை அடுத்த பகுதியில் திருமால், பேடிவடிவ அருச்சுனன், துரோபதைகளின் சிலைகள் உள்ளன. பக்கத்தில் ஓர் ஆண் ஓர் பெண்ணைத் தூக்கிநிற்கும் சிலை உள்ளது. இது கலிகாலத்தின் இயல்பையும், பெண்ணுக்கு ஆண் அடிமை என்பதையும் அறிவிப்பதாகச் சொல்லப் படுகிறது. இடையிடையே யாளிகளின் உருவங்கள் தூண் களில் அமைக்கப்பெற்றுள்ளன.

இதை யடுத்த நடுமண்டபத்தின் இருபுற வரிசை களிலும் பல சிலைகள் உள்ளன. கீழ்புறத்தில் பிக்ஷாடனர், தருமர், பீமன், ரதி, வீரபத்திரர் முதலிய சிலைகளும், மேல் புறத்தில் அக்கினி, வீரபத்திரர், மன்மதன், புருஷாமிருகம், அருச்சுனன், மோகினி முதலியோரின் சிலைகளும் உள்ளன. இவற்றுள் அன்ன வாகனத்தில் அமர்ந்திருக்கும் **ரதியின் சிலை** சிற்பக்கலையும், நாத அமைப்பும் உடையது. இச் சிலையின் பகுதிகளில் அங்கங்கே மெதுவாய்த்தட்டினல் பல வகை நாதங்கள் எழுவதைக் கேட்கலாம். இவ்வாறே வீரபத்திரர் சிலையிலும் பல ஓசைகள் பிறக்கும். சிற்பங் களின் அணிகளும் அமைப்புக்களும் அக்காலத்து நாக ரிகத்தை அறிவிக்கின்றன. எனவே காலாயிரமுடைய இம் மண்டபத்தைக் காணக் கண்ணுயிரம் வேண்டும்.



திருக்கல்யாண மண்டபம்

"The Thousand Pillared Mantapam lies to the North and Fergusson, the historian of Indian architecture calls it "The wonder of the Place" and says of the sculptures there, that "they surpass those of any other hall I have seen."

வீரவசந்தராய மண்டபத்துக்குத் தென்புறத்தில் **திருக் கல்யாண மண்டபம்** உள்ளது. விஜயரங்க சொக்கநாத நாயக்கரால் கட்டப்பெற்றது. அவருடைய உருவச் சிலை யும் ஓர் தூணில் உள்ளது. பிற்காலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் புதுப் பிக்கப் பெற்றது. இதில் சித்திரை மாதத் தில் ஸ்ரீ மீனாட்சியம்மையாருக்கும் ஸ்ரீ சுந்தரேஸ்வரருக்கும் திருமணம் நடைபெறும். இரண்டு அர்ச்சகர்கள் மீனாட்சி-சுந்தரேஸ்வரராக நடித்துக் காட்டுவார்கள். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரரின் திருக்கல்யாணச் சிற்பம், கம்பத்தடி மண்டபத்திலும், புதுமண்டபத்திலும் உள்ளது. அம்மன் கோயில் அறுகால் பீடச்சுவர்களிலும் மீனாட்சி கல்யாணம் சித்திரிக்கப் பெற்றுள்ளது. இதற்கு எதிரில் மருதப்ப சேர்வைகாரரால் கட்டப்பெற்ற **சேர்வைகாரர் மண்டபமும்,** முத்து ராமய்யர் மண்டபமும் உள்ளன. இம்மண்டபத்தில் ஓர் தூணில் முத்துராமய்யரின் உருவச்சிலை உள்ளது. மற்றோர் தூணில் சரபமூர்த்தியின் சிலை உள்ளது. இதற்குப் பக்கத்தில் காசிவிஸ்வநாதர்–விசாலாட்சியம்மன் சந்நிதிகள் உள்ளன.

கல்யாண மண்டபம்

வீரவசந்தராயமண்டபத்துக்கு மேற்கில் உள்ள சுவாமி கோபுரத்தைக் கடந்து சென்றால் கண்ணைக் கவரும் வகையில் **கம்பத்தடி மண்டபம்** காட்சியளிக்கும். துவஜஸ் தம்ப மண்டபம் என்றும் சொல்லப்படும். ஆதியில் கிருஷ்ண வீரப்ப நாயக்கரால் சகம் 1494-ல் கட்டப்பெற்றுப்


பிற்காலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் புதுப்பிக்கப்பெற்றது. இதில் கோபுரவாயிலை அடுத்து அக்கினி வீரபத்திரர், அகோர வீரபத்திரர், ஊர்த்துவதாண்டவர், பத்திர காளி ஆகிய நான்கு மூர்த்திகளின் பெருஞ் சிலைகள் தனித்தனித் தூண்களில் அமைக்கப் பெற்றுள்ளன.

கம்பத்தடி மண்டபம்

மண்டபத்தின் நடுவில் நந்தியும், கொடிமரமும் (துவஜ ஸ்தம்பம்) உள்ளன. இருபுறங்களிலும் பல சிற்பங்களைக் கொண்ட **எட்டுப் பெரிய தூண்கள்** உள்ளன. இவைகளில் சிவபெருமானுடைய பல கோலங்கள் சிற்பித்துக் காட்டப் பெற்றுள்ளன.

தென் வரிசையில் சுவாமி சந்நிதிக்குப் பக்கத்துள்ள முதல்தூணில் கைலாசரூடர், சந்திரசேகரர், ரிஷபஅந்திகர், லிங்கோற்பவர் சிற்பங்கள் உள்ளன. அடியில் அதிகார நந்தி உள்ளது. 2-வது தூணில் காமதகனர், நடராஜர் மூர்த்திகளின் சிலைகள் உள்ளன. 3-வது தூணில் சுகாசனர், காலசம்மாரர், மார்க்கண்டேயர்களின் சிற்பங்கள் உள்ளன. மார்க்கண்டேயர் பக்தியின் முதிர்ச்சியில் தன்னை மறந்து லிங்கத்தைத் தழுவிக்கொண்டிருப்பது காண்போர் யாவருக்கும் பத்தியை உண்டாக்கும். நான்காவது தூணில் சோமசுந்தரர், திருக்கல்யாண சுந்தரர், திரிபுரசுந்தரர் முதலிய மூர்த்திகளின் உருவங்கள் உள்ளன. திரிபுரசுந்தரருக்கு எதிரில் உள்ள தூணில் தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் முப்புர அசுரர்களின் உருவங்கள் உள்ளன. முப்புரங்களையும் சிவபெருமான் சிரித்தெரித்தார் என்பது வரலாறு.

வட வரிசையில், சந்நிதிக்குப் பக்கத்திலுள்ள முதல் தூணில் சங்கர நாராயணர், அர்த்த நாரீஸ்வரர், ரிஷபாரூடர், ஏகபாதமூர்த்தி, சக்ரதரர் முதலிய மூர்த்திகளின் வடிவங்கள் உள்ளன. 2-வது தூணில் சலந்தர அனுக்கிரஹர், தட்சிணாமூர்த்தி (தென்முகக் கடவுள்)



புது மண்டபம் – உள்தோற்றம்

உருவங்களும், 3-வது தூணில் கஜ சம்மாரர், சண்டேச அனுக்கிரகர் வடிவங்களும், 4-வது தூணில் சோமாஸ் கந்தர், கிராத அர்ச்சுனர், ருத்திரர், பிக்ஷாடனர் முதலிய மூர்த்திகளின் கோலங்களும் உள்ளன. இதன் அடியில் நவக்கிரக சிற்பங்கள் உள்ளன. திருமாலின் பத்து அவதாரக்காட்சிகள் தூண்களின் உட்புறங்களில் அமைக் கப்பெற்றுள்ளன. கஜ சம்மாரச் சிற்பத்தில் பார்வதிக்கு முருகன் கையை உயர்த்திச் சிவபெருமானது தோற்றத் தைக் காட்டுவதாக உள்ளது.

சிவபெருமானுக்குரிய பல மூர்த்தங்கள் இந்த எட்டுத் தூண்களிலும் அழகாக அமைக்கப்பெற்றுள்ளன. ஒவ்வொரு மூர்த்தமும் ஒவ்வோர் கதையை அறிவிக்கும். மேலும் இம்மண்டபத்தில் பிட்டுக்கு மண் சுமத்தல், நாரைக்கு முத்தி கொடுத்தல் திருவிளையாடல்களின் சிற்பங் கள் தூண்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஓர் தூணில் யானைத்தலையும், பெண்ணுடலும், புலிக்காலுமுடைய ஓர் சிற்பம் உள்ளது. இம் மண்டபத்தின் கலைச்சிற்பங்களைக் கண்டநுபவிப்பதற்குக் கண்கள் பல வேண்டும்.

கம்பத்தடி மண்டபத்திற்கு வடக்கில் **மண்டபநாயக மண்டபம்** (King' Mantapam among mantapams) உள்ளது. தற்போது நூற்றுக்கால் மண்டபம் என்று சொல்லப்படுகிறது. சின்னப்பநாயக்கரால் சகம் 1448-ல் கட்டப்பெற்றது. மண்டபத்தின் மூலஸ்தானத்தில் நடராஜ ரின் சிலை உள்ளது. தேவசபை என்று சொல்லப் படும். இதுவும் பல சிற்பங்கள் அமைந்தது. கம்பத்தடி மண்டபம் புதுப்பிக்கப்பட்டபின், இம் மண்டபத்தின் கவர்ச்சி குன்றிவிட்டது.

மண்டபநாயக மண்டபம்

"In one corner is the mantapa nayaga mantapam. It is quite eclipsed by the Kambathadi mantapam." —*District Gazetteers*

இதற்குத் தென்புறம் உள்ளது **திருஞானசம்பந்தர் மண்டபம்.** கிருஷ்ண வீரப்பநாயக்கரால் கட்டப்பெற்றது.

ஞானசம்பந்தர் மண்டபம்

இம் மண்டபத்தில் மாணிக்கவாசகர், சுந்தரர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், நெடுமாறன், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், மூர்த்தி நாயனர் ஆகிய தல அடியார்களின் சிலைகள் உள்ளன. கமிஷனர் அவர்களின் ஆதரவால் அந்தந்த நாயனர்களுக்குரிய திருநாட்களில் அபிஷேக ஆராதனைகளும், உற்சவமூர்த்திகள் புறப்பாடும் நடைபெற்று வருகின்றன.

" சொற்கோவும் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே " —சிவானந்தமாலை

" மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன் " —சுந்தரர்

***பிரதான வாயில் :*** கம்பத்தடி மண்டபத்தில் சுவாமி கோயிலின் பிரதான கோபுரவாயில் உள்ளது. இரு புறமும் திருவாயில் இருபாலர்களின் பெருஞ்சிலைகள் உள்ளன. அவர்கள் ஆட்கொண்டார், உய்யக்கொண்டார் என்று சொல்லப்பெறுவர். வாயிலுக்குத் தெற்கில் அனுக்ஞை விநாயகர், சதாசிவமூர்த்தி முதலிய சந்நிதிகளும், வடக்கில் தண்டபாணி, காயத்திரி, சட்டையப்பர் முதலிய சந்நிதிகளும், நவக்கிரகங்களும் உள்ளன. இதைச் சுற்றிவரும் பகுதி 2-ம் பிராகாரமாகும். தென்பிராகாரத்தில் நடுக்கட்டுக் கோபுரத்துக்கு எதிரில் சுமார் 7 அடி உயரமுள்ள முக்குறுணிப் பிள்ளையார் சந்நிதி உள்ளது. ஆண்டவிநாயகர் என்றும் அழைக்கப்படுவர். " மன்னுமலையதுதான் மிகப் பழுத்தாலென்ன ஆண்டவிநாயகன் " என்று புகழப் படுகிறார். மாரியம்மன் தெப்பக்குளத்திலிருந்து இப் பிள்ளையார் கொண்டுவரப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

மேற்கில் பல லிங்கங்கள் உள்ளன. அவைகள் ஏகாதச லிங்கங்கள் ஆகும். வடமேற்கில் சங்கப்புலவர் மண்டபம் தெற்கு நோக்கியுள்ளது. கடைச்சங்கப்புலவர்களான இறையனுர், உக்கிரப் பெருவழுதியார், கபிலர், பரணர், நக்கீரர் முதலிய நாற்பத்தொன்பது புலவர்களின் உருவச் சிலைகள் உள்ளன. பொற்ருமரையின் வடகரை மண்டபத் தூண்களிலும் உள்ளன. புலவர்களுக்குப் பெருமான் சங்கப் பலகை அருளினுர்.

" உலக மகிழ்வெய்த முன்னுட் புலவருடனிருக்கும்
இலகுதவிசை யளித்தருள் வாயென் றெதிர்புகழும்
புலவர் மதுரையில் ஏழெழுபேரும் பொருந்தசங்கப்
பலகைதருஞ் சொக்கனே பரதேசி பயகரனே "

—பழைய திருவிளையாடல்

வடக்குப் பிராகாரத்தில் சங்கப்புலவர் உலா மண்டபம் உள்ளது. இதில் கூட்டு வழிபாடு நடைபெறும். 2-ம் பிராகாரத்தைச் சுற்றிலும் எட்டுக் கொடிமரங்கள் உள்ளன.

கோபுரவாயிலில் அதிகாரநந்தி உள்ளார். உள்ளே முதல் பிராகாரத்தின் கீழ்ப்புறத்தில் வந்தியம்மையும் லிங்கமும், அடுத்துச் சூரியனும் தேவிகளும் உள்ளார்கள். தெற்கு வரிசையில் அறுபத்துமூன்று நாயன்மார்கள், சகஸ்ரலிங்கம், சரஸ்வதி முதலிய மூர்த்திகளின் சந்நிதிகள் உள்ளன. பக்கத்தில் சப்த மாதர்கள், விநாயகர் ஆகியோர்களின் 9 சிலைகள் உள்ளன. இதற்கு எதிரில் 9 விளக்குகள் ஏற்றப் படுகின்றன. இக் கோயிலில் சிந்தாதேவி என்னும் சரஸ்வதிக்குக் கலை நியமம் என்னும் தனிக்கோயில் இருந்ததாக மணிமேகலையில் சொல்லப்படுகிறது. தென்மேற்கு மூலையில் சோமாஸ்கந்தர் மண்டபம் உள்ளது. இதில் ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வரரின் உற்சவ மூர்த்திகள் உள்ளன. மேற்கு வரிசையில் முருகன் சிலை, சோடசலிங்கம், ஜ்வரதேவர், ஜ்வரலிங்கம், பஞ்சமுக லிங்கங்கள் உள்ளன. அடுத்துப்

பிக்ஷாடனரின் மூலச் சிலையும், உற்சவமூர்த்தியும் உள்ளன. பிக்ஷாடனருக்கு இருபக்கத்திலும் முனிப்பெண்களின் சிலைகள் உள்ளன. பக்கத்தில் காசிவிஸ்வநாதர் - விசாலாட்சி - நந்தி - விநாயகர், சண்முகர், தக்ஷிணாமூர்த்தி ஆகியோரின் வெள்ளைக்கற்களாலான சிலைகள் உள்ளன. இவை யாவும் காசி மகாராஜாவால் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. வடக்குப்பிராகாரத்தில் சண்டிகேஸ்வரர், எல்லாம் வல்ல சித்தர் சந்நிதிகள் உள்ளன. சித்தருக்கு ஆக்கினைச் சித்தர் என்ற பெயரும் உண்டு. வடக்கு வரிசையில் அறுபத்துமூவரின் உற்சவமூர்த்திகள் உள்ளன. இவைகள் வைகாசி மூலநாளில் புறப்படும். பக்கத்தில் கடம்பமரம் வெள்ளித்தகடு பொருத்தப்பெற்றுள்ளது. இது தலத்துக்குரிய மரமாகும். இதனடியில் குமரகுருபரர் பாடிய மதுரைக் கலம்பகத்தின் 'புழுகுநெய்ச் சொக்கர்' என்ற பாடல் சலவைக்கல்லில் வரையப் பெற்றுள்ளது.

*" புழுகுநெய்ச் சொக்கர் அபிடேகச் சொக்கர் கர்ப்பூரச் சொக்கர்*
*அழகிய சொக்கர் கடம்பவனச் சொக்கர் அங்கயற்கண்*
*தழுவிய சங்கத்தமிழ்ச் சொக்கர் என்றென்று சந்ததநீ*
*பழகிய சொற்குப் பயன்தேர்ந்து வாவிங்கென் பைங்கிளியே "*

*—குமரகுருபரர்*

பக்கத்தில் கனகசபையில் நடராஜர் எழுந்தருளியுள்ளார். இம் மண்டபத்தில் திருஞானசம்பந்தர் பாடிய 'மந்திரமாவது நீறு' என்ற திருநீற்றுப் பதிகமும், 'வாழ்க அந்தணர்' என்ற பதிகமும் வெண்சலவைக் கற்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. திருநீற்றுப் பதிகம் பாண்டியனது வெப்பு நோயைத் தீர்த்தது. மற்றொன்று வைகை ஆற்றில் எதிர்த்துச் சென்றது. இதை அடுத்து 51 அட்சர லிங்கமும், மகாலட்சுமியின் சந்நிதியும் உள்ளன. அடுத்து இரத்தின சபையில் நடராஜர் எழுந்தருளியுள்ளார். பக்கத்தில் வன்னியும், கிணறும், லிங்கமும், ஓர் திருவிளை

யாடலைக் குறித்துள்ளன. கீழ்புறத்தில் பைரவர், பூவலிங்கம், கார்த்திகை, சந்திரன், ரோகிணி முதலிய மூர்த்திகளின் சிலைகள் உள்ளன. இந்தப் பிராகாரத்தில் தெற்கில் கலைமகளும், இதற்கு நேராக வடக்கில் திருமகளும் கல்வியையும், செல்வத்தையும் அருளும்வகையில் அமர்ந்துள்ளார்கள்.

இதை அடுத்து அறுகால் பீடவாயில் உள்ளது. இதன் அடியில் பல நடனச் சிற்பங்கள் உள்ளன. வாயிலின் உட்புறம் வெள்ளியம்பலத்தில் நடராஜப் பெருமான் கால் மாறியாடிக் காட்சி தருகிறார். இடது காலை ஊன்றி வலது காலைத் தூக்கியுள்ளார். இது ரஜிதசபை என்று சொல்லப் படும். தாண்டவம் சொக்க தாண்டவம் என்று சொல்லப் படும். இராஜசேகர பண்டியனது வேண்டுகோளுக்காகப் பெருமான் கால் மாறியாடினார். இதற்கு எதிரில் திருக் கூட்டத்தார் - சந்திரசேகரர் சந்நிதிகள் உள்ளன. மூலஸ் தானத்தில் சொக்கலிங்கப் பெருமான் - ஸ்ரீ சுந்தரேஸ்வரர் - சோமசுந்தரர் எழுந்தருளியுள்ளார். விமானம் இந்திர விமானம். எட்டு யானைகளால் தாங்கப்பெறுவது. 6 யானைகள் வெளிப்புறத்திலும், 2 யானைகள் மூலவர் பக்கத்திலும் உள்ளன. விமான மண்டபத்தைச் சுற்றிலும் தெற்கில் தக்ஷிணமூர்த்தியும், மேற்கில் லிங்கோற்பவரும், வடக்கில் துர்க்கையும் சந்நிதி கொண்டுள்ளார்கள். முன் மண்டபத்தைச் சுற்றிலும் 64 திருவிளையாடல்களில் சில சுதைச் சிற்பங்கள் பல வண்ணங்களில் சித்திரிக்கப் பெற்றுள்ளன. சுவாமி கோயிலின் அர்த்தமண்டபம், மகா மண்டபம், அறுகாற்பீடம் முதலியவைகளைக் குலசேகர பாண்டியன் கட்டுவித்ததாகச் சொல்லப்படுகிறது.

நடராஜப்பெருமானுக்கு இரத்தினம், பொன், வெள்ளி, தாமிரம், சித்திரம் என்னும் ஐந்து மன்றங்கள் - பஞ்சசபைகள் உண்டு. திருவாலங்காட்டில் ரத்தினசபையும், தில்லையில் பொற்சபையும், மதுரையில் வெள்ளிமன்றமும், திருநெல் வேலியில் தாமிரசபையும், குற்றாலத்தில் சித்திரசபையும்

உள்ளன. இக் கோயிலிலும் நடராஜருக்குப் பஞ்ச சபைகள் உள்ளன. முதல் பிராகாரத்தில் கனகசபையும், இரத்தின சபையும், வெள்ளியம்பலத்தில் ரசிதசபையும், நூற்றுக்கால் மண்டபத்தில் தேவசபையும், ஆயிரக்கால் மண்டபத்தில் சித்திரசபையும் உள்ளன. வெள்ளியம்பலம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், இவ்விடங்களிலுள்ள மூர்த்திகள் சாந்தாகாரச் சிலைகள். கனகசபை, ரத்தின சபைகளிலுள்ளவை உற்சவ மூர்த்திகள், கம்பத்தடி மண்டபத்தில் ஊர்த்துவ தாண்டவமூர்த்தியின் பெருவடிவமுள்ளது.

> "தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
> சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
> ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
> நான்ற மலர்ப்பதத்தே நாடு" —உண்மைவிளக்கம்

இக்கோயிலைச் சுற்றிலும் பல கல்வெட்டுக்கள் உள்ளன. கோயில் மிகவும் பழமையானது. சுவாமி கோயிலாகிய ஸ்ரீ சுந்தரேஸ்வரர் கோயிலின் அமைப்பைக்காட்டும் படம் தனியே சேர்க்கப்பெற்றுள்ளது. இக்கோயிலில் 1939ல் ஹரிஜன ஆலயப்பிரவேசம் நடைபெற்றது.


---

## 7. வெளி மண்டபங்கள்

**புதுமண்டபம்** : சுவாமி கோயிலின் கீழ்புறக் கோபுரத்துக்கு எதிரில் உள்ளது. வசந்த மண்டபம் என்றும் சொல்லப்படும். திருமலை நாயக்கரால் கி. பி. 1626-ல் தொடங்கப்பெற்று 1645-ல் முடிவுற்றதாகச் சொல்லப்படுகிறது. *333 அடி நீளமும், 105 அடி அகலமும், 25 அடி உயரமும் உள்ளது. 4 வரிசைகளில் 124 தூண்கள் உள்ளன. தூண்களில் பலவகைச் சிற்பங்கள் அமைந்த சிலைகள் உள்ளன. இம் மண்டபத்தில் வசந்தவிழா மிகச்



புது மண்டபம் – உள்தோற்றம் ப - 32



திருமலை நாயக்கர்

ப - 33

சிறப்பாய் நடைபெறும். தூண்களில் குதிரைமேல் அமர்ந்த வீரர்களின் சிற்பங்களும், யாளிகளின் உருவங்களும், சூரிய - சந்திரர்களின் உருவங்களும் உள்ளன. சில தூண்களில் திருவிளையாடல் சிற்பங்கள் உள்ளன. தடாதகைப் பிராட்டியார், பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தது, புலி முலை புல்வாய்க்கருளியது, கல்லானைக்குக் கரும்பளித்தது முதலிய சிற்பங்கள் உள்ளன. கிழக்கில் ஏகபாதமூர்த்தி, கஜசம்மார மூர்த்திகளின் சிலைகள் உள்ளன. நடுவில் 12 தூண்களைக்கொண்ட அழகிய சலவைக்கல் மண்டபம் உள்ளது. வசந்தவிழாவில் சுற்றிலும் உள்ள பள்ளத்தில் நீர் நிரப்பப்பட்டு நடுமண்டபத்தில் ஸ்ரீ சுந்தரேஸ்வரர் எழுந்தருளுவர். நடுவரிசைத் தூணில் திருமலை நாயக்கர் மனைவியருடன் நிற்கும் சிலைகள் உள்ளன. மற்றத் தூண்களில் இவருக்குமுன் ஆண்ட ஒன்பது நாயக்க மன்னர்களின் வடிவங்கள் உள்ளன. இவற்றைச் செதுக்கிய சிற்பி சுமந்திரமூர்த்தி ஆசாரி என்று திருப்பணிமாலையில் கூறப்படுகிறது. தற்போது இம் மண்டபத்தைச் சுற்றிலும் பல கடைகள் உள்ளன.

திருமலை நாயக்கர், முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரின் இளைய புதல்வர். கி. பி. 1623 முதல் 1659 வரையில் ஆட்சிபுரிந்தார். கோயில் பூஜைகளுக்கும், திருவிழாக்களுக்கும் மிகுந்த வருவாயுள்ள பல கிராமங்களைத் தானம் செய்துள்ளார். திருமலை நாயக்கர் மகால், ராயகோபுரம், தெப்பக்குளம் முதலியனவும் இவரால் கட்டப்பெற்றன. புதுமண்டபத்தின் சிறப்பைக் குறிக்கும் பாடல் :—

தரணிபுகழ் மேருகிரி பலவுருவெடுத்துநற்
சந்நிதானத்தில் வந்து
தவமுற்றதென்ன நூற்றிருபத்து நாலுகால்
தன்னிலே எந்தநாளும்

திரமான புதுமையா மண்டபங் கட்டியே
சித்திரமு மெழுதியந்தச்
செய்யமண்டபமணியு மாலையென இருபால்
சிறந்த மண்டபமியற்றிக்
குரவார் கருங்குழலங்கயற் கண்ணம்மை
கொன்றையணி சொக்கேசனுர்
கூடிவிளையாடியும் வசந்தமெனும் நல்விழாக்
கொண்டருளவே செய்தனன்
பரராசசேகரன் பரராச பூஷணன்
பரராச ராசதிலகன்
பரராசர் பணிமுத்துகிருஷ்ணப்ப பூபனருள்
பாலதிருமலை பூபனே. —திருப்பணிமாலை

***ராயகோபுரம் :*** இதுவேலை முடிவுபெருதது. புது மண்டபத்துக்குக் கிழக்கில் உள்ளது. இதன் பரப்பு 174 அடி நீளமும், 107 அடி அகலமும், நுழைவாயில் 22 அடி அகலமும் உள்ளது. 60 அடி உயரமுள்ள நான்கு தூண்கள் மிகவும் சிறப்ப வேலைப்பாடுகளுடன் நிற்கின்றன. ஓர் தூணில் வெடிப்பு ஏற்பட்டதால் வேலை தடைப்பட்ட தாகச் சொல்லப்படுகிறது. இதுவும் திருமலை நாயக்கரால் கட்டத் தொடங்கப்பெற்றது. விஜயநகரத்து மன்னரின் நினைவாகக் கட்டப்பெற்றதால் ராயகோபுரம் என வழங்கு கிறது.

***நகரா மண்டபம் :*** இது அஷ்டசத்தி மண்டபத் துக்கு எதிரில் உள்ளது. அச்சய மண்டபம் என்றும், நவபத்காறு மண்டபம் என்றும் சொல்லப்படும். இதில் அவ்வப்போது நகரா மேளவாத்தியம் அடிக்கப்படும். இதன் அடிப்பாகத்தில் கடைகள் உள்ளன.

***தேரடி மண்டபம் :*** கீழை மாசி வீதியிலுள்ளது தேர்த் திருநாளில் சுவாமி வந்து தங்கும்.

***மைய மண்டபம் :*** வைகையாற்றின் நடுவில் உள்ளது. சித்திரை விழாவில் ஓர் நாளில் ஸ்ரீ சுந்தரேஸ்வரரை இம் மண்டபத்துக்கு எழுந்தருளச் செய்வதாகச் சொல்லப்படுகிறது.

இவைகளையல்லாமல் ஆவணி மூலவீதி, மாசிவீதி முதலிய வீதிகளில் பிற்காலத்தில் ஏற்பட்ட பல மண்டபங்களும் உள்ளன. இவைகளில் அவ்வப்போது சுவாமி புறப்பட்டுத் தங்கிவரும்.

## 8. சுற்றுக்கோயில்கள்

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலைச் சேர்ந்தனவாகப் பல கோயில்கள் உள்ளன.

***திருவாப்புடையார் கோயில் :*** தேவாரப்பாடல் பெற்ற பாண்டி நாட்டுத் தலங்களில் ஒன்று. திருவாப்பனூர் என வழங்கும். வைகை நதிக்கு வடகரையில் உள்ளது. சிவபெருமான் ஓர் ஆப்பினிடத்தில் தோன்றிய தலம். திருஞானசம்பந்தர் தேவாரமுண்டு.

***வடதிருவாலவாய்க் கோயில் :*** இடைக்காடருடைய பிணக்கைத் தீர்க்கும் பொருட்டுச் சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளிய இடம். இக்காலத்தில் பழய சொக்கநாதர் கோயில் என வழங்குகிறது. பெரிய கோயிலுக்கு வடக்கில் வெளிவீதியில் உள்ளது.

***காஞ்சனமாலைக் கோயில் :*** இவர் தடாதகைப் பிராட்டியின் தாயார். பெரியகோயிலுக்குக் கிழக்கிலுள்ள ஏழ்கடல் தீர்த்தத்தின் மேற்குக் கரையில் உள்ளது.

***அநுமார் கோயில் :*** தெற்குச் சித்திரை வீதியில் உள்ளது.

***தென்திருவாலவாய்க் கோயில் :*** தெற்கு மாசி வீதியில் கிழக்கு மூலையிலுள்ளது.

***பைரவர் கோயில் :*** கீழாவணி மூல வீதியில் உள்ளது.

***செல்லத்தம்மன் கோயில் :*** வக்கீல் புதுத் தெருவுக்கும், வடக்குமாசி வீதிக்கும் நடுவில் உள்ளது. இதில் கண்ணகி சிலையும் உள்ளது.

***சப்தமாதர் - வீரபத்திரர் கோயில் :*** கோயிலுக்குத் தெற்கில் உள்ளது.

***மாரியம்மன் கோயில் :*** கீழ்த்திசையில் தெப்பக் குளத்துக்குப் பக்கத்தில் உள்ளது. செவ்வாய்-வெள்ளிக் கிழமைகளில் பெருங்கூட்டம் செல்லும்.

***திருப்பரங்குன்றம் :*** முருகப்பெருமானுக்குரிய ஆறுபடை வீடுகளில் ஒன்று. தேவாரம் பெற்றதலம்.

***திருவாதவூர்க் கோயில் :*** திருமறைநாதர் எழுந்தருளியது. மாணிக்கவாசகர் அவதரித்த இடம். வைகைக் கரையிலுள்ளது.

***முத்தீஸ்வரம் கோயில் :*** தெப்பக் குளத்துக்கு மேல்கரையில் உள்ளது. தெப்ப உத்ஸவத்தில் சுவாமி அம்பிகை இங்கே வந்து தங்கும்.

## பிற கோயில்கள்

***நன்மை தருவார் கோயில் :*** மக்கள் சிவ பூஜையை அறியும்பொருட்டுப் பெருமான் தம்மைத்தாமே பூசித்த மூர்த்தியை உடையது. மேல மாசிவீதியில் உள்ளது. திருநடுவூர் என்றும் பெயர்பெறும்.

***கூடலழகர் கோயில் :*** திருமாலுக்குரிய 108 திருப்பதிகளுள் ஒன்று. திருமங்கையாழ்வார் பாடியது. திருக்கூடல் என வழங்கும். தெற்கு மேற்கு மாசிவீதிகள் கூடும் தென்மேற்கு மூலையில் உள்ளது.

***சீனிவாசப்பெருமாள் கோயில் :*** மீனாட்சிபுரத்தில் ஓர் கோயிலும், தல்லாக் குளத்தில் ஓர் கோயிலும் உள்ளன.

*மதனகோபாலசாமி கோயில்:* மேல மாசி வீதியிலுள்ளது.

*முனீஸ்வரன் கோயில்:* வடக்குச் சித்திரைவீதியில் கோபுரவாயிலை அடுத்துள்ளது. இது காப்புத் தெய்வங்களில் முதலாவதாகச் சொல்லப்படுகிறது.

மேலும் இவ்வூரில் பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோயில், பேச்சியம்மன் கோயில், கருப்பண்ணசாமி கோயில் முதலிய கோயில்களும் உள்ளன.

## 9. கோயில்களும் குறிகளும்

ஆதியந்தங்கடந்த பரம்பொருளாகிய இறைவன், உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் கடந்த அருவ நிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகிறான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும் பால் மறைந்திருந்த போதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்த போதிலும் பளிங்குக் கல்லின் (Lens) மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்த போதிலும் தோண்டிய இடத்தில் தானே நீர் தோன்றுவது போலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்தபோதிலும் பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான்.

> "இருஞ்சுரபிக்கெங்கும் உருக்காண ஒண்ணாத பால் முலைப்பால்
> விம்மி ஒழுகுவது போல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே"
>
> —சிவஞான சித்தியார்

"எங்கும் சிவனிருப்பன் ஆனாலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்
ஆவினுடம் பெல்லாமும் ஆவரித்து நிற்கினும்பால்
பாவுமுலைக் கண்மிகுதிப் பார்"

—சிவஞானப் பிரகாச வெண்பா

இவ்வாறு புறத்தே கோயில் கொண்டு விளங்கும் பெருமான், பக்தியுடன் வழிபடும் அடியார்களின் உள்ளத்தையும் கோயிலாகக் கொண்டு அருள் செய்கின்றான். "காலையும் மாலையும் கைதொழுபவர் மனம் ஆலயமாகும்"

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய ஆட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே." —அப்பர்

தென்னாடாகிய தமிழ்நாடு மிகுதியான கோயில்களைக் கொண்ட இடமாகும். நாட்டை வளப்படுத்தும் ஆறுகளும், சோலைகளும், வாவிகளும், சாலைகளும் சூழ்ந்து இயற்கைக் காட்சிகளைத் தந்து இன்பம் ஊட்டுகின்றன. வானளாவிய கோபுரங்களும், விமானங்களும், காண்போருக்குத் தூரத்திலிருந்தபடியே தெய்வ உணர்ச்சியைத் தூண்டும் நிலையில் அமைந்துள்ளன. உடலுக்கு உணவைத்தரும் வயல்கள் அமைந்திருப்பது போல, உள்ளத்துக்கு உணவாகிய பக்தியை உண்டாக்கும் பாங்குடைய கோயில்கள் பல அணிகளாக விளங்குகின்றன. "திருக்கோயில் இல்லாத திருவிலூரும் பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும் அவை எல்லாம் ஊரல்ல" என்றபடிக்கில்லாமல் நாட்டின் பல இடங்களிலும் சைவ-வைணவத் தலங்கள் பல ஆங்காங்கு மிளிர்கின்றன. இவ்வகையில் தென்னாடு தெய்வ மணங்கமழும் திருநாடாகத்திகழ்கிறது.

"நோக்கிய இடங்களெல்லாம் நுவலருந் தலங்களாகத்
தேக்கிய தீர்த்தமாகச் சிவலிங்க மூர்த்தியாக

ஆக்கிய தவந்தானுளும் அடைந்தவர்க்கற மென்றேதும்
பாக்கிய மாக்கி மேலுய்ப்பது முது சென்னிநாடு"
—மகாவித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை

மேலும் நமது முன்னேர்களின் நாகரீக வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவன முன்னேர்கள் எடுப்பித்த திருக்கோயில்களாகும். இவைகள் பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றிப் பெருஞ் சிற்பங்கள் நிறைந்த பெட்டகங்கள் ஆகும். மின்சார அணுக்கள் நிறைந்துள்ள இடம் (Power House) போலத் திருவருள் அணுக்கள் நிறைந்த சிறப்பிடங்கள் ஆகும். எழுத்தின் ஒலிவடிவை உணர்த்துவதற்கு வரிவடிவெழுத்து அமைந்தது போலக் கட்புலனுல் காணமுடியாத கடவுளைக் காட்டும் சாதனங்களாகக் கோயில்கள் விளங்குகின்றன. இவைகளை நமது முன்னேர்கள் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்துப் பின் வழியினர்களாகிய நமக்கு அருஞ் செல்வங்களாக வைத்துச் சென்றூர்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுக்குக் கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக (Light-House) விளங்குகின்றன. "கோயில் விளங்கக் குடிவிளங்கும். ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பவை ஆன்றேர் கூறிய அனுபவ மொழிகளாகும்.


ஆதலின் பெறுதற்கருமையான மனிதப்பிறவியைப் பெற்றவர் அனைவரும், கோயில்களில் குடிகொண்ட பசுபதியாகிய பரமனை அன்பினுல் வழிபட்டு, அவன் வகுத்த நன்னெறியில் சென்று அவனருளைப் பெறமுயலுதல் சிறந்த கடமையாகும். "மானுடப் பிறவிதான் வகுத்தது மனவாக் காயத்து ஆனிடத்தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றே" என்றும், "உடம்பினைப் பெற்ற பயனுவதெல்லாம் உடம்பில் உத்தமனைக் காண்" என்றும் ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள்.

# 10. மூர்த்திகளின் பெயர்கள்

இக்கோயிலின் விநாயகர் சித்திவிநாயகர். பெருமானுக்கு ஆதியில் சொக்கநாதர், சொக்கலிங்கப் பெருமான் என்னும் பெயர்கள் வழங்கின. சொக்கு-அழகு. அழகுடையவர் என்பது பொருள். மதுரையில் சொக்கநாதர் கோயில், சொக்கிகுளம் முதலிய ஊர்கள் உள்ளன. தற்போது பெருமானுக்கு சுந்தரேஸ்வரர், மீனுட்சி சுந்தரர், சோமசுந்தரர், கல்யாணசுந்தரர், சண்பகசுந்தரர் என்னும் பெயர்கள் வழங்குகின்றன. மேலும் அட்டாலைச் சேவகன், அடியார்க்கு நல்லான், அதிர வீசி விளையாடுவான் என்ற பெயர்களும், அபிடேகச் சொக்கர், அழகிய சொக்கர், கடம்பவனச் சொக்கர், புழுகு நெய்ச் சொக்கர், கடம்பவனேசர், கர்ப்பூரச்சொக்கர், மதுரேசர் முதலிய நாமங்களும் வழங்கும். பெருமான் சங்கப்புலவராயிருந்தபோது இறையனுர், பேராலவாயர் என்னும் பெயர்கள் வழங்கும்.

கல்வெட்டுக்களில் பெருமானுக்கு அழகிய சொக்கநாதர், திருவாலவாயுடைய நாயனுர், மதுரை உடையார், திருவாலவாயுடையார், அதிர வீசி விளையாடுவார், சொக்கநாத சுவாமி, சொக்கநாயக ஈஸ்வர உடையார், திருவாலவாயுடைய தம்பிரானுர், மாதேவரழகிய சொக்கனுரான சுந்தரபாண்டியச் சோழக்கோனுர் முதலிய பெயர்கள் கூறப்படுகின்றன.

தேவியாரின் பெயர் மீனுட்சி என்பது. தமிழில் அங்கயற் கண்ணி என்பது. திருஞானசம்பந்தர் "அங்கயற் கண்ணி தன்னெடும் அமர்ந்த ஆலவாய்" என்று குறிப்பிடுகிறுர். மீன் போன்ற கண்ணையுடையவள். (Fisheyed Goddess) என்பது பொருள். மேலும் மீன் தனது முட்டைகளைத் தன் பார்வையினுலேயே தன் மயமாக்குவது போலத் தேவியாரும் தம்மைத் தரிசிக்க வரும் அடியார்களை அருட் கண்ணுல் நோக்கி மகிழ்விக்கிறுர்.



ஸ்ரீ சொக்கநாதர் ஸ்ரீ மீனாட்சி

(பொன் திருவுருவங்கள்)

ப · 40

(" திருநோக்கால் ஊழ்வினையைப் போக்கி ") மேலும் மீன் கண்ணுக்கு இமையில்லாமல் இரவும் பகலும் விழித்துக் கொண்டிருப்பது போலத் தேவியும், கண்ணிமையாமல் உயிர்களை எப்போதும் காத்துவருகிருள் என்றும் *அறிஞர் கூறுவர்.

தேவியின் கண்கள் அலர்வதால் தோன்றும் இவ்வுலகம், கண்கள் சற்று இமைக்குமாயின் அழிந்துவிடும் என்றெண்ணித் தேவி கருணைகொண்டு இமையாத நாட்டத்துடன் காத்துவருகிருள் என்றும் கூறுவர்.

" இணைவிழி யிமையா நாட்ட மெய்திய தலரத்தோன்றும்
பணைநெடும் புவனமிந்தப் பார்வைசற்றிமைக்கு மாயின்
துணையிழந்தழிவ தெண்ணித்துணிந்தநின் கருணை யென்ருல்
கணையினுங் கொடிய தென்னக்கடவதோ கடவுள்மாதே "
—சௌந்தரியலகிரி

மேலும் தேவியாருக்குப் பச்சைத்தேவி, மரகதவல்லி, தடாதகைப்பிராட்டி, அபிடேகவல்லி, அபிராம வல்லி, கயற்கண் குமாரி, கர்ப்பூர வல்லி, குமரித்துறையவள், கோமகள், சுந்தரவல்லி, பாண்டிப்பிராட்டி, மதுராபுரித் தலைவி, மாணிக்கவல்லி, மும்முலைத் திரு, வழுதிமகள் முதலிய பெயர்களும் வழங்கும். கல்வெட்டில் திருக்காமக் கோட்டத்து ஆளுடைய நாச்சியார் என்ற பெயர் வருகிறது.

மேலும் மீனுட்சி சுந்தரர் என்பதற்குச் சொல்லும் பொருளுமாய் விளங்குபவர் என்ற பொருளும் உண்டு.

" மன்னிய சொல்உன்மாது மாசறுபொருள் நீ உண்மை
என்ன நின்றரற்றும் வேதமாதலால் "—பழய திருவிளையாடல்

" என்னை இகழ்ந்தனனே சொல்வடிவாய்நின்
இடம்பிரியா இமயப்பாவை
தன்னையும் சொற்பொருளான உன்னையுமே
இகழ்ந்தனன் " —பரஞ்சோதியார்

*Rev. Fr. H. ஹீராஸ்.

இவைகளில் சொல் தேவியையும், பொருள் பெருமானை யும் குறிக்கின்றன.


வாகர்த்தா விவஸம்ப்ரக்தெள வாகர்த்தப் பிரதிபத்தயே |
ஜகத ஃ பிதரௌ வந்தே. பார்வதீபரமெஸ்வரௌ ||
—காளிதாஸர் குமாரசம்பவம்

தலவிருட்சம் – கடம்பமரம். விமானம் – இந்திர விமானம். எட்டு யானைகளால் தாங்கப்பெறுவது.

## 11. தீர்த்தங்கள்

***பொற்றாமரைக் குளம்***: கோயிலுக்குள் உள்ளது. நந்திதேவர் முதலியோரின் வேண்டுகோளின்படிப் பெருமான் தமது சூலத்தைப் பூமியில் ஊன்றி உண்டாக்கியது. இந்திரன் பூஜைக்காகப் பொன்தாமரை தோன்றிய இடம். எல்லாத்தீர்த்தங்களுக்கும் முன்னே தோன்றியதால் ஆதிதீர்த்தம் எனவும், எல்லாவற்றிற்கும் மேலாக விளங்குவதால் பரமதீர்த்தம் எனவும், நீராடியவருக்கு மங்கலத்தைக் கொடுப்பதால் ஞானதீர்த்தம் எனவும், முத்தியைத் தருவதால் முத்திதீர்த்தம் எனவும், சிவபெருமான் சடையிலுள்ள கங்கை நீர்கலக்கப்பெற்றதால் சிவகங்கை எனவும், உத்தமமாய் விளங்குவதால் உத்தமதீர்த்தம் எனவும், பெயர் பெறும். அமாவாசை, மாதப் பிறப்பு, கிரகண காலம் வியதிபாதம் முதலிய புண்ணிய காலங்களில் இத்தீர்த்தத்தில் நீராடிப் பெருமானை வழிபட்டால் வேண்டும் சித்திகளைப் பெறுவர்.

" தெய்வ இத்தீர்த்தந்தன்னை நினைவின்றித் தீண்டினாலும்
அவ்வியவினையின் நீந்தி அரும்பெறல் வீடுசேர்வர்
இவ்வுரை மெய்யேயாகும். என்னெனின் மனத்தாறன்றி
வெவ்வழல் தீண்டினாலும் சுடுமன்றிவிடுமோ அம்மா "
—பரஞ்சோதியார்



பொற்றாமரைக் குளமும் சுற்று மண்டபங்களும்

ப - 42

*ஏழுகடல்* : கோயிலுக்குக் கிழக்கில் உள்ளது. காஞ்சனமாலையின் வேண்டுகோளுக்கிணங்கிப் பெருமான் ஏழு கடல்களையும் வரவழைத்தார்.

*" தீதில் ஏழ்கடல்களும் சேர்தலாற்றடம்*
*பூதலத் தெழுகடலெனப் பொலிந்ததே "*

*—பழய திருவிளையாடல்*

*" தலையிலே ஆறிருக்க மாமிக்காகத்*
*தங்குகடல் ஏழழைத்த திருக்குற்றாலர்"–குற்றாலக்குறவஞ்சி*

***வையை நதி*** : குண்டோதரனின் நீர் வேட்கையைத் தணிக்கும்பொருட்டுப் பெருமான் அருளால் கங்கை, பெரிய நதியாக ஓடியது. பூம்புனல்யாறு என்றும், வையை என்றும், பொய்யாக் குலக்கொடி என்றும், பாராட்டப்பெற்றது. ஆதியில் கடலுடன் கலந்து பிற்காலத்தில் மாறியது. பரிபாடலில் எட்டுப்பாடல்கள் இந்நதியின் பெருமைகளைக் கூறும்.

பெருமானுடைய சடையிலிருந்து இறங்கிவருவதால் சிவகங்கை எனவும், ஞானத்தை அருள்வதால் சிவஞான தீர்த்தம் எனவும், காற்றைப்போல வேகத்துடன் விரைந்து வருவதால் வேகவதி என்றும், மாலைபோல் மதுரையைச் சூழ்ந்து வருவதால் கிருதமாலை என்றும் பெயர் பெறும்.

*" தீர்த்தன் இதழிச்சடை நின்றும் இழிந்து வரலால் சிவகங்கை*
*தீர்த்தன் உருவந்தெளிவோர்க்கு ஞானந்தரலாற் சிவஞான*
*தீர்த்தம் காலிற்கடுகிவரு செய்தியாலே வேகவதி*
*தீர்த்தம் கிருதமாலை யெனவையை நாமஞ் செப்புவரால் "*

*—பரஞ்சோதியார்*

*" தமிழருமை மதுரை மூதூர் நீரறியும் நெருப்பறியும்"*


என்றபடிப் புனல் வாதத்தில், ஞானசம்பந்தருடைய *" வாழ்க அந்தணர் "* என்னும் பதிகம் எழுதப் பெற்ற ஏடு ஆற்றை எதிர்த்துச் சென்றது.

" வேகவதிக் கெதிர் ஏறவிட்ட தொருசிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தின் அறிகுறியே "

—மனோன்மணீயம்

தமிழ் கண்டதோர் வையை' என்று பாரதியாரும் பாடியுள்ளார். "சங்கத்து இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்தபேதை" என்று வரந்தருவார் கூறுகிறார்.

**தெப்பக்குளம்** : கோயிலுக்குக் கிழக்கில் ஒரு மைல் தூரத்திலிருக்கிறது. திருமலை நாயக்கரால் 1645-ல் கட்டப்பெற்றது. திருமலை நாயக்கர் சமுத்திரம் என்றும், மாரியம்மன் தெப்பக்குளம் என்றும் பெயர் பெறும். தென் வடலில் 1000 அடியும், கிழமேலில் 950 அடியும் உள்ளது. நகரில் உள்ள மூன்று சிறந்த இடங்களில் ஒன்று. வைகையிலிருந்து வரும் ஓர் கால்வாயின் மூலம் நீர் நிரப்பப்படுகிறது. குளத்தின் நடுவிடம் ஓர் தீவுபோல் உள்ளது. நடுவில் நீராழி மண்டபக்கோயிலும், சுற்றிலும் நந்தவனங்களும், நான்கு மூலைகளிலும் நான்கு சிறிய மண்டபங்களும் உள்ளன. இவை சிற்பஅமைப்புக்களுடன் அழகாகக் கட்டப்பெற்றுள்ளன. படகுகள் மூலம் மைய மண்டபத்திற்குச் சென்றுவரலாம். திருமலை நாயக்கர் மஹாலுக்கு வேண்டிய செங்கல் கற்கள் இவ்விடத்தில் தயார் செய்யப்பெற்றதாகவும், சுவாமி கோயில் பிராகாரத்திலுள்ள முக்குறுணிப் பிள்ளையார் இவ்விடத்திலிருந்து எடுக்கப் பெற்றதாகவும் சொல்லப்படுகிறது. ஆண்டு தோறும் தைப்பூச நாளில் தெப்பவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். அன்றைக்குப் பலவகை விளக்குகளால் அழகாய் அலங்கரிக்கப் பெற்ற தெப்பத்தில் ஸ்ரீ மீனாட்சியம்மையும், ஸ்ரீ சுந்தரேஸ்வரரும் எழுந்தருளிச் சுற்றி வருவர். திருமலை நாயக்கரின் பிறந்த நாளின் நினைவாக இது நடைபெறுகிறது. மதுரைக் கோயிலுக்குரிய மூன்று முக்கிய திருவிழாக்களில் தெப்பத்திருவிழாவும் ஒன்று.



வண்டியூர் தெப்பக்குளம்

ப - 44

பிறவிக் கடலில் பக்தி என்னும் தெப்பத்தைக்கொண்டு பரமனை அடையவேண்டும் என்பது குறிப்பாகும்.

" கத்தித்திரி பிறவிச் சாகரத்துள் ஆழாமே
பத்தித்தனித் தெப்பம் பார்வாழத் தந்தபிரான் "
—நம்பியாண்டார்நம்பி

" புகலரிய சத்தசா கரமுமத னடுவிலே
புவன நவ கண்டங்களும்
பொன்மேரு நிகர்மேவு மண்டபமும் மதுரேசர்
புகழநவ மாய்ப்புதுக்கித்
திகழ் செய்திருமலை நாயகர் சமுத்திரமெனும்
தெப்பக்குளங் கண்டனன்
சிகரபுய பலவிசய சுமுகமுத்துக் கிருஷ்ண
திருமலை மகீபாலனே "
—திருப்பணிமாலை

" மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே "
—தாயுமானவர்

## 12. தலப் பெருமைகள்

இத் தலம் மிகவும் பழமையானது. தேவாரப் பாடல் பெற்றது. பாண்டி நாட்டின் தலைநகர். மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. கேட்க முத்திதரும் தலம். சிவத் தலங்களுள் நான்கு சிறந்தன. அவை சிதம்பரம், காசி, திருக்காளத்தி, திருவாலவாய் என்பன. இந் நான்கினுள் திருவாலவாயே மிகச் சிறந்ததாம். சிதம்பரம் தரிசிப்பவர்க்கும், காசி தன்னிடம் தங்கி இறப்பவர்க்கும், காளத்தி அன்புடன் வழிபடுபவர்க்கும் முத்தியைத் தரவல்லவை. ஆனால் திருவாலவாயைக் கேட்டவரே அறத்தை அடைவர். நினைத்தவரே பொருளை அடைவர். கண்டவரே இன்பமடைவர். திருவாலவாயில் வதிந்தவரே வீடுபேறு அடைவர். மேலும் சொக்கன் என்று ஒருகால்

ஓதின் துயர்கெடும். பகைமாளும், தொலைவிலாத செல்வம் உண்டாகும். சுருதி சொல்யாண்டுஞ் செல்லும். சொர்க்க மும் எளிதாம். இவ்வாறு புராணங்கள் கூறும்.

திருவாலவாயென்று கேட்டவரே அறம்பெறுவர் செல்வம்ஓங்கும்
திருவாலவாயென்று நினைத்தவரே பொருளடைவர் தேவதேவை
திருவாலவாயிடத்துக் கண்டவரே இன்பநலஞ்சேர்வர் என்றும்
திருவாலவாயிடத்து வதிந்தவரே வீட்டுநெறி சேர்வர்அன்றே ''
—பரஞ்சோதியார்

" அன்னமலி வயற்புலியூர் காசிநகர்
காளத்தி ஆலவாயாம்
இன்னவளம் பதி நான்கில் திருவால
வாய்அதிகம் எவ்வாறென்னின்
மின்அவிர்அம் பலங்காணக் காசிநகர்
வதிந்திறக்க வியன்காளத்திப்
பொன்னகரம் பத்தியினுல் வழிபாடு
செயவளிக்கும் போகம்வீடு ''

மேலும் சோமசுந்தரக் கடவுள் 64 திருவிளையாடல் களைச் செய்தருளிய தலம். கடைச் சங்கப் புலவர்கள் வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்த இடம். மூர்த்திநாயனர், விபூதி, ருத்திராக்கம், சடைமுடி என்ற மூன்றையுந் துணை யாகக்கொண்டு மும்மையால் உலகாண்ட நகரம். " திருவீற்றிருந்த தீதுதீர் நியமத்து மாடம்மலி மறுகின் கூடல் '' என்று நக்கீரரால் புகழப்பட்ட பதி.

நடராஜருக்குரிய ஐந்து சபைகளுள் வெள்ளியம் பலத்தில் பெருமான் கால்மாறி யாடியுள்ளார். மற்றும் நான்கு சபைகளையுடையது. இந்திரன், வருணன் முதலிய தேவர்கள் வழிபட்டுப் பேறு பெற்ற தலம். அரிமர்த்தன பாண்டியனிடத்தில் மாணிக்கவாசகர் ' தென்னவன் பிரம ராயன் ' என்னும் பெயருடன் மந்திரியாயிருந்த நகரம். திருஞானசம்பந்தர் அனல்வாதம், புனல்வாதம் செய்து சைவத்தைப் பாண்டி நாட்டில் நிலைபெறச் செய்த பதி.

திருநீற்றுப் பதிகம் பாடிப் பாண்டியனது வெப்பு நோயைத் தீர்த்தது. திருநள்ளாற்றுப் பதிக ஏடு தீயில் வேகாமல் வெளிவந்தது. "வாழ்க அந்தணர்" பதிகம் எழுதப் பெற்ற ஏடு வைகையாற்றில் எதிர்த்துச் சென்றது. நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறனும், ஞான சம்பந்தரின் வரலாறு கேட்டுப் பால் சுரக்கப்பெற்ற தலையன்பினராகிய மங்கையர்க்கரசியாரும், சைவந் தழைக்க அனுகூலராயிருந்த குலச்சிறையாரும் வாழ்ந்த திருப்பதி. சிவபூஜையின் மகிமையை உலகறிந்து உய்யும் வண்ணம் சோமசுந்தரர் தாமே தமது ஆன்மார்த்த மூர்த்தியாகப் பிரதிட்டை செய்து பூசித்த இம்மையே நன்மை தருவார் எழுந்தருளியிருக்கும் இடம். சிவபக்தி மிகுந்த வந்தியம்மையின் பிட்டருந்தி மண் சுமந்து பாண்டியனால் பிரம்படியும் பட்ட பெருமான் வாழும் இடம். மாணிக்கவாசகர் பொருட்டுப் பல திருவிளையாடல்களைச் செய்த இடம். பாணபத்திரர்க்குப் பெருமான் பாசுரம் எழுதிக்கொடுத்துச் சேரமான் பெருமாளால் நிதிகொடுப்பித்தது. மூலலிங்கத்தை நாவுக்கரசர் "முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்று பாடியது. ஊமையாயிருந்து பேசிய குமரகுருபரர், திருமலை நாயக்கர் காலத்தில் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடி அரங்கேற்றி அம்மையின் திருவருள் பெற்றது. தருமபுரஆதீனம் ஆதி குருமூர்த்தி ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஆன்மார்த்த வழிபாட்டிற்குச் சொக்கலிங்கப் பெருமானைப் பெற்றது. பாண்டியர் - நாயக்கர் - முதலிய மன்னர்களால் பரிபாலிக்கப்பெற்றது.

மேலும் முத்திதரும் நகரங்களுள் ஒன்று. சக்திக்குப் பிரதான தலம். சக்தி பீடங்கள் அறுபத்துநான்கில் முதற் பீடமான மீனாட்சி பீடத்தை உடையது. இராம லட்சுமணர்களும், பிறதேவர்களும், முனிவர்களும் பூசித்துப் பேறு பெற்ற இடம். இத் தலத்துக்கு ஒப்பாக ஒரு தலமும்,

பொற்றாமரைத் தீர்த்தத்துக்குச் சமமாக ஓர் தீர்த்தமும், மூல லிங்கத்திற்கு ஒப்பாக வேறோர் லிங்கமும் மூவுலகத்தும் இல்லை என்று சொல்லப்படுகிறது.

கோயில் பல திருப்பணிகளையும், சிற்பங்களையும், மண்டபங்களையும், கல்வெட்டுக்களையும் உடையது. சிற்பங்களில் நாத ஓசை அமையப் பெற்றது. திருஞானசம்பந்தர்-திருநாவுக்கரசர் ஆகியோரால் தேவாரம் பாடப்பெற்றது. வடமொழியிலும், தமிழிலும் பல புராணங்களையுடையது. அருணகிரியார் பாடிய திருப்புகழ்ப் பாடல்களையும், வேறு பலவாகிய பிரபந்தப் பாடல்களையும் உடையது. எப்பொழுதும் திருவிழா நடைபெறுவது. சிறப்பாகச் சித்திரை விழா, தெப்ப விழா, ஆவணி மூல விழாக்களைக் கொண்டது (City of Festivals). வேறு பல சுற்றுக் கோயில்களையுடையது. நாட்டின் பல இடங்களிலுள்ளவர்களும் வந்து தரிசிக்கும் பெருமையுடையது. எனவே மாண்பு மிக்க மதுரைத் தலத்தின் பெருமைகளை அளவிட்டுக் கூற இயலாது.

> "தேடி நான்முகன் செங்கண்மால் காண்கிலான்திங்கள்
> சூடினுன் அடியார் மனத்தான் மறைத்தொகுதி
> பாடினுன் அருளா லறுபத்து நாலாடல்
> ஆடினு னதிலெனின் அதன்பெருமை யாரறைவார்"
>
> —சீகாளத்திப் புராணம்

## 13. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி பாதுகாத்து அவ்வப்பொழுது ஆவன செய்யவேண்டும். புதியதோர் கோயிலை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர். "புதிதுறப் பணிகள் வேறு புரிவதின் பழயதொன்றை விதியுளி புதுக்கு

வோர்க்கு மிகப் புண்ணியந்தான் எய்தும்" என்று ஆன்றோர் கூறியுள்ளார்.

"மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமா லிங்கமாதி நளினபுட்க ரணியாதி
சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க்குறு பலன்தான்
ஓதுமுன் செய்தோர் தம்மில்ஆயிரங் குணிதமோங்கும்"

—சிவபுண்ணியத்தெளிவு

இக் கோயிலில் அவ்வப்போது பல திருப்பணிகள் நடந்து வந்திருக்கின்றன. ஆதியில் பாண்டியர்களாலும் நாயக்கர்களாலும், பிற செல்வர்களாலும் கோபுரங்கள், மண்டபங்கள் முதலியன திருப்பணி செய்யப்பட்டுள்ளன. "**திருவாலவாயுடையார் கோயில் திருப்பணிமாலை**" என்னும் நூலில் இக் கோயிலின் பல திருப்பணிகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. திருப்பணி செய்தவர்களின் பெயர்களும் காலங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அதன் சுருக்கம் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளது. முக்கியமாகக் கோயிலின் நான்கு பெரிய கோபுரங்களில் கிழக்குக் கோபுரம் சுந்தர பாண்டியனாலும், தெற்கு ஒன்பதுநிலைக் கோபுரம் சிராமலைச் செவ்வந்தியாலும், மேற்கு ஒன்பதுநிலைக் கோபுரம் பராக்கிரம பாண்டியனாலும், வடக்கு ஒன்பது நிலைக் கோபுரம் கிருஷ்ணவீரப்ப நாயக்கராலும் கட்டப்பட்டனவாகச் சொல்லப்படுகிறது.

பிற்காலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் ஆதரவால் திருக்கல்யாணமண்டபம், கம்பத்தடிமண்டபம் முதலியன அழகாகப் புதுப்பிக்கப் பெற்றுள்ளன.

திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் இக் கோயிலில் பல திருப்பணிகளைச் செய்துள்ளார்கள்: சுவாமி அம்மன் சந்நிதிகளில் சிவசிவ ஒளிவிளக்குகள் போடப்பட்டுள்ளன. பொற்றாமரைக் குளத்தில் ஓர்

பொன் தாமரைமலர் மிதக்க விடப்பட்டுள்ளது. குளத்தின் தென்கரை மண்டபச் சுவர்களில் திருக்குறள் 1330 பாடல் களும் வெண்சலவைக் கற்களில் பொறிக்கப்பெற்றுள்ளன. அம்மன் கோயில் அறுகாற்பீட வாயிலின் இருபுறங் களிலும் மீனுட்சியம்மன் பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் சலவைக் கற்களில் வரையப்பட்டுள்ளன. சுவாமி கோயில் பிராகாரத்தில் கனகசபை மண்டபத்தில் திருநீற்றுப்பதிகம் வெண்சலவைக் கற்களில் எழுதப்பெற்றுள்ளது. கடம்ப மரத்துக்கு வெள்ளிக் கவசம் அணிவித்து அதன் அடியில் மதுரைக் கலம்பகப் பாடல் சலவைக் கல்லில் தீட்டப் பெற்றுள்ளது. இவைகள் காசிமடத்துத் திருப்பணிகள்.

மேலும் காசிமடத்துத் தலைவர் அவர்களின் ஆதரவில் சித்திரை, ஆவணி, தை, பங்குனி மாதங்களில் ஒவ்வோர் நாளில் மூலவருக்குச் சந்தனக்காப்பும், ஆடிக் கிருத்திகை யில் மூர்த்தி நாயனர் திருவிழாவும், தினந்தோறும் காலை யிலும், மாலையிலும் ஓதுவார்களால் தேவாரபாராயணமும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் திருநாளில் திருமுறை விழாவும், திருவிளையாடற்புராணம், பெரியபுராணம், கந்த புராணச் சொற்பொழிவுகளும் தனித்தனியே அமைத்த மூலநிதிகளைக் கொண்டு நடைபெற்று வருகின்றன.

தருமபுரம் ஆதீனகர்த்தர் **ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்** அவர்களின் திருவுள் ளப்படி "வாழ்க அந்தணர்" என்ற திருப்பதிகம் வெண் சலவைக் கற்களில் கனகசபை மண்டபத்தில் வரையப் பெற்றுள்ளது.

சுவாமி கோயில் கோபுர வாயிலில் குன்றக்குடி ஆதீன கர்த்தரால் சேக்கிழார் பாடல்கள் சலவைக் கற்களில் பொறிக்கப்பெற்றுள்ளன.

தற்போதைய அறநிலையக் கமிஷனர் திரு. **A. உத்தண்டராம பிள்ளை**, B.A., B.L. அவர்களின் பெரு முயற்சியால் பொற்றாமரைக் குளத்திற்கு யந்திரக் குழாய்

கள் மூலம் தண்ணீர் வரவும் போகவும் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. மேலும் மூர்த்திநாயனர் முதலிய தலஅடியார்களைப் பிரதிட்டை செய்து, அவர்களுக்குரிய திருநாட்களில் உற்சவ மூர்த்திகள் புறப்பாடும் நடத்தப் பெற்று வருகிறது. சந்நிதிகளில் அந்தந்த மூர்த்திகளுக் குரிய அஷ்டோத்தரங்கள் கரும்பலகைகளில் தமிழில் எழுதப் பெற்றுள்ளன. அஷ்டோத்தர வெளியீடுகளும் தமிழில் வெளியிடப் பெற்றுள்ளன.

பழனி திரு. முருகேச முதலியார் அவர்கள் அன்புடன் அளித்த பள்ளியறைப் புதிய வெள்ளிப் பல்லக்குத் திருவுலா 9-12-57 மாலை 5 மணிக்கு அறநிலையப் பாதுகாப்பு மந்திரி திரு. M. **பக்தவத்சலம்**, B.A., B.L. அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்றது. அன்றைய இரவில் பள்ளியறைப் பூஜையை அறநிலையக் கமிஷனர் அவர்கள் உடனிருந்து நடத்திவைத்தார்கள்.

## *திருவாலவாயுடையார் கோயில் திருப்பணிமாலை திருப்பணி விவரம்*


1. சுவாமியினுடைய அஷ்டகஜ விமானம் தேவேந்திரன் பிரதிஷ்டை.
2. சுவாமிகோயில் அர்த்தமண்டபம், மணிமண்டபம், மகாமண்டபம், ஆறுகாற்பீடம், சன்னிதிக் கோபுரம் மூலப்பிராகாரத் திருமதில்களும் சூழப் பத்தியும், நாயகர் கோவிலும், சூரியாதி சண்டேசுவர தேவதை பிரகாரத் திருமதிலும், கோட்டையகழும், கோட்டைக்கு வெளியில் கீழைத்திக்கில் ஐயனர்கோவிலும், தெற்குத் திக்கில் சத்த மாதர்கள் கோவிலும், விநாயகர்கோயி லும், மேற்குத்திக்கில் ருத்திரன் கோவிலும், வடதிக்கில் எண்டோள் காளி கோவிலும் குலசேகரபாண்டியன் பிரதிட்டை.

3. சித்தர் கோவில் விக்கிரமபாண்டியன் பிரதிஷ்டை செய்தது. சுவாமி கோவிலிரண்டாம் பிராகாரத் திரு மதிலும் ஒன்பதுநிலைப் பெரிய கோபுரமும் அம்மன் கோவிலிரண்டாம் பிராகாரத் திருமதிலும், சன்னிதி மண்டபமும் சுந்தரபாண்டியன் செய்வித்தவை. சகம் 1140.
4. அம்மன் சன்னிதி மூன்றுநிலைக் கோபுரம், ஆனந்தத் தாண்டவ நம்பி செய்தது.—சகம் 1150
5. மாடவீதியாகிய ஆடிவீதிப் பெரிய திருமதில் - திரு நோக்கழகியார் செய்தது.—சகம் 1506
6. ஆடிவீதி மேற்கு ஒன்பதுநிலைப் பெரிய கோபுரம்— பராக்கிரமபாண்டியன் செய்வித்தது.—சகம் 1245
7. சுவாமி சன்னிதி அஞ்சுநிலைக் கோபுரம், செய்தது வசுவப்பன்—சகம் 1294. ஷை கோவிலிரண்டாம் பிராகார மேல்புறம் ஐந்துநிலைக் கோபுரஞ் செய்தது மல்லப்பன்.—சகம் 1294
8. அம்மன் கோவில் முதற் பிராகாரச் சுற்று மண்டபமும் பள்ளியறையும், ஆறுகாற்பீடமும் நாயகர் சன்னிதி மண்டபமும் மாவலி செய்தது.—சகம் 1374
9. மண்டப நாயகமும், சின்னீச்சுரமும் செய்தது சின் னப்பன்.—சகம் 1448
10. சுவாமி கோவில் இரண்டாம் பிராகாரத் தெற்கு ஐந்து நிலைக் கோபுரம் செவ்வந்திமூர்த்தி செய்தது.— சகம் 1481
11. ஷை பிராகார வடக்கு ஐந்துநிலைக் கோபுரம் செவ் வந்தி வேலன் செய்வித்தது.—சகம் 1482
12. ஆடிவீதித் தெற்கு ஒன்பதுநிலைக் கோபுரம் சிராமலைச் செவ்வந்தி செய்தது.—சகம் 1400
13. சுவாமி சன்னிதியில் துவாரபாலகர் மண்டபம், பொற்றாமரை வடபுற மண்டபம், பெருமாள் செய்தது சகம்.—1484

14. அம்மன் சன்னிதிச் சங்கிலி மண்டபம், திருவம்பலச் செட்டி செய்தது.—சகம் 1484
15. சுவாமி கோவில் முதற் பிராகாரக் கீழ்புறத் தென்புறம் மண்டபங்கள்.—சகம் 1485
16. அம்மன் கோவிலிரண்டாம் பிராகாரக் கீழ்புற மண்டபம், பொற்றுமரை மேல்புற மண்டபம், செட்டியப்பன் செய்தது.
17. வன்னியடிச் சபை, செல்லப்பன் செய்தது—சகம் 1485
18. சங்கிலி மண்டபத்துக்குத் தெற்கு மண்டபம், திம்மப்ப நாயகன் செய்தது.—சகம் 1486
19. செவ்வந்தீசுரம் - செவ்வந்தி செய்தது.—சகம் 1486
20. சுவாமி கோவில் முதற் பிராகார மேல்புற மண்டபம், அம்மன் கோவிலிரண்டாம் பிரகாரத் தென்புற மண்டபம்.—சகம் 1487
21. சுவாமி கோவில் முதற் பிராகார வடபுற மண்டபம், பட்டுத் திருமலை நாயக்கர் செய்தது.—சகம் 1491
22. அம்மன் கோவிலிரண்டாம் பிராகார மேல்புற வடபுற மண்டபங்கள், வீரகிருஷ்ணன் செய்வித்தவை.—சகம் 1491
23. அறுபத்துமூவர் கோவில் மண்டபம், நயினு முதலியார் செய்தது.—சகம் 1491
24. சன்னிதி ஏழுநிலைக் கோபுரம் காளத்தி முதலியார் செய்தது.—சகம் 1492
25. அம்மன் கோவிலிரண்டாம் பிராகார மேற்கு ஐந்து நிலைக் கோபுரம், வீரத்தும்மச்சி செய்தது.—சகம் 1492
26. சுவாமி சன்னிதி துவஜஸ்தம்ப மண்டபம், இரண்டாம் பிரகாரச் சுற்று மண்டபம், சம்பந்தர் கோவில் மண்டபம், ஆடிவீதி வடக்கு ஒன்பதுநிலைக் கோபுரம், மடைப்பள்ளி கிருஷ்ணவீரப்ப நாயக்கர் செய்தது.—சகம் 1494

27. பொற்றாமரைக் கீழ்புற மண்டபமும், திருமதிற்படியும், குப்பையாண்டி செய்வித்தவை.—சகம் 1495
28. செவ்வந்தீசுரச் சுற்றுத் திருமதில் சன்னிதி மண்டபம், சின்னச் செவ்வந்தி செய்தது.—சகம் 1496
29. பொற்றாமரைத் தென்புற மண்டபமும், படியும், திருமதிலும் விசுவநாதர் பிரதிஷ்டையும் அப்பன் பிள்ளை செய்தது.—சகம் 1500
30. சொக்கநாதர் மண்டபம்—வீரப்பன், வீரய்யன்.—சகம் 1500
31. சுவாமி கோவிலிரண்டாம் பிராகார நிருதிமூலை மண்டபம், விருப்பணான் செய்தது.—சகம் 1510
32. வீரவசந்தராய மண்டபம், முத்துவீரப்ப நாயக்கர் செய்தது.—சகம் 1533
33. அம்மன் சன்னிதி முதலிப்பிள்ளை மண்டபம், கடந்தை முதலியார் செய்தது.—சகம் 1535
34. மீனாட்சி நாயக்கர் மண்டபம்.—சகம் 1630
35. கலியாண மண்டபம்—விஜயரங்கச் சொக்கநாத நாயக்கர் செய்தது.—சகம் 1633
36. பேச்சுக்கால் மண்டபம்—பிட்டுச் சொக்கப்பண்டாரம் செய்தது.—சகம் 1580
37. ஆடிவீதி நிருதிமூலை மண்டபம்—தும்மச்சி நாயக்கர் செய்தது.—சகம் 1680
38. ஆடிவீதி அக்கினி மூலைமண்டபம்—ஆறுமுக முதலியார் செய்தது.—சகம் 1682
39. ஆடிவீதி ஈசானமூலை தட்டுச் சுற்றுமண்டபம்—வேங்கடேசுவர முதலியார்.—சகம் 1694
40. சேர்வைகாரர் மண்டபம்—மருதப்ப சேர்வைகாரர்.

—திருப்பணிமாலை



இசை ஒலிக்கும் தூண் ப - 55

# 14. சிற்பங்கள்

திருவாலவாய்க் கோயில் பெருங்கோயில், இந்திர விமானச் சிற்பம். எட்டுப் பெரிய யானைகளால் தாங்கப் பெறுவது. கோயிலும் பொற்றாமரைக் குளமும் கலையழகும், சிற்பச் சிறப்பும் பொருந்தியவை. நான்கு பெரிய கோபுரங் களும் பல சிற்பங்களையுடையன. மேற்குக் கோபுரத்தில் பல புராணக் கதைகள் சுதைச் சிற்பங்களாக உள்ளன. மண்டபங்களும், தூண்களும், மூர்த்திகளும் அழகிய சிற்பம் அமைந்தவை. இவைகளின் சிற்பச் சிறப்புக்கள் அங்கங்கே காட்டப்பெற்றுள்ளன. முக்கியமாகக் கம்பத்தடி மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், புதுமண்டபங்களின் சிற்பங்கள் மிகவும் அற்புதமாய் விளங்குகின்றன. தூண் களில் பல மூர்த்திகளின் சிற்பங்கள் உயிர்த்தன்மை பெற்று விளங்குகின்றன. ஆடிவீதித் தூண்களிலும், ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள இரதி முதலிய சிலைகளிலும் நாத ஓசைகள் பிறக்கின்றன. முதலில் மீனாட்சியம்மையைத் தரிசித்துப் பிறகு ஸ்ரீ சுந்தரேசரைக் காணும் வகையில் கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கால் மண்டபம், அறுகால்பீட மண்டபங்களின் அடியிலும், அம்மன் கோயில் வாயிற்கதவுகளிலும் பல நடனச் சிற்பங்கள் உள்ளன. கோபுரவாயில் தூண் களில் பெண்கள் கயிறுவீசி விளையாடும் கோலங்கள் உள்ளன. ராயகோபுர வாயிலில் அடுக்கடுக்கான கட்டைச் சிற்பங்கள் உள்ளன. கம்பத்தடி மண்டபத் தூண்ஒன்றில் யானைத் தலையும், பெண்ணுடலும், புலிக்காலும் கொண்ட ஓர் புதுமையான சிற்பம் உள்ளது. அஷ்டசத்தி மண்ட பத்திலும், பொற்றாமரைக் குளத்தின் மண்டபச் சுவர் களிலும் 64 திருவிளையாடல்களின் வண்ணச் சித்திரங்கள் வரையப் பெற்றுள்ளன. சுவாமி கோயிலின் உள் பிராகாரத் திலும், பிற இடங்களிலும் சொற் சிற்பங்களாகிய பல கல்

வெட்டுக்கள் உள்ளன. இத்தலத்துக்குரிய தேவாரப் பாடல்கள் முதலியன சலவைக் கற்களில் பொறிக்கப்பெற்றுள்ளன.

அம்மன் கோயிலிலும், புது மண்டபத்திலும் திருமலை நாயக்கர் முதலியோர்களின் உருவச் சிலைகள் உள்ளன. சுவாமிகோயில் பிராகாரத்திலும், கம்பத்தடி மண்டபத்திலும், புது மண்டபத்திலும் திருவிளையாடல்களைக் குறிக்கும் சிற்பங்கள் உள்ளன.

## திருவிளையாடற் சிற்பங்கள்

**1. பிட்டுக்கு மண் சுமந்தது :** பெருமான், தலையன்பிற் சிறந்த வந்தியம்மையின் பிட்டையுண்டு வைகைக் கரையில் கூலியாளாய் மண் சுமந்தது. வந்தியம்மையின் சிலையும் சுவாமி கோயிலில் உள்ளது.

" வைகைக்கோ புனற்கங்கை வானதிக்கோ சொரிந்துகரை
செய்கைக்கென் றறியேமால் திருமுடிமண் சுமந்ததே "
—மதுரைக்கலம்பகம்

" கரும்பனும் விரும்பநின்ற கட்டழகுடையன் என்பார்
அரும்பெற லிவன்றன் கூலிக்காட்செய்த தெவனோஎன்பார்
இரும்பெருங் குரவரற்ற தமியனோ என்பார்வேலை
புரிந்தவனல்லன் என்பார் அதுமேனி புகலுமென்பார் "
—பரஞ்சோதியார்

இச் சிற்பம் கம்பத்தடி மண்டபத்தில் அனுமார் சிலைக்கு எதிரில் உள்ள தூணில் உள்ளது. காண்போருடைய கண்களைக் கவரும் நிலையில் இச் சிற்பம் கலை நுட்பத்துடன் சிறப்பாக அமைக்கப்பெற்றுள்ளது.

**2. நாரைக்கு முத்தி கொடுத்தது :** மீன் உணவை நீக்கித் தன்னை வழிபட்ட ஓர் நாரைக்குப் பெருமான் வரமருளி முத்தி கொடுத்தருளினர். இச் சிற்பம் கம்பத்தடி

மண்டபத்தில் அகோர வீரபத்திரருக்கு இடதுபுறத்தி லுள்ளது. பொற்றுமரைக் குளத்தின் கிழக்குத் தூண் வரிசையில் ஓர் தூணிலும் இச் சிற்பம் உள்ளது.

**3. எல்லாம் வல்ல சித்தர் :** பெருமான் ஓர் சித்த வடிவங்கொண்டு மக்கள் அதிசயிக்கும்படிப் பல அற்புதங் களைச் செய்து காட்டினர். இவரது சந்நிதி சுவாமிகோயில் பிராகாரத்தில் வடமேற்கில் உள்ளது.

**4. வன்னியும் கிணறும் லிங்கமும் :** ஓர் வணிகப் பெண் தன்னை இகழ்ந்து பேசிய மூத்தாளுக்குச் சாட்சி யாக வரவேண்டுமென்று பெருமானை வேண்ட, வணிகப் பெண்ணுக்காகப் பெருமான் வன்னியும், கிணறும், லிங்கமுமாகக் காட்சியளித்தார். இச் சிற்பங்கள் சுவாமி கோயில் பிராகாரத்தில் உள்ளன.

**5. கால் மாறி யாடினது :** ராஜசேகர பாண்டிய னது வேண்டுகோளுக்கிணங்கிப் பெருமான் இடது காலை யூன்றி, வலது காலைத் தூக்கி மாறியாடினர். இது வெள்ளி யம்பலத்திலிருக்கும் திருக்கோலம்.

**6. அங்கம் வெட்டியது :** வாட் பயிற்சி நடத்தி வந்த சித்தன் ஒருவன், தன் குருவின் மனைவியைக் கற் பழிக்க முயன்றபோது, பெருமான் வாள் ஆசிரியனுகை வேடங்கொண்டு சித்தனுடன் போர் செய்து அவனைக் கொன்று மறைந்தார். இச்சிற்பம் ஆயிரக்கால் மண்டபத் தில் முன் வரிசைத் தூணில் உள்ளது.

புது மண்டபத்தில் உள்ளவை :—

**7. தடாதகைப் பிராட்டியார் :** மலையத்துவச பாண்டியன்—காஞ்சனமாலை இவர்களுக்கு மகப்பேறில்லா மல் புத்திரகாமேட்டியாகஞ் செய்ய, உமாதேவி மூன்று தனங்களுடன் யாக குண்டத்திலிருந்து தோன்றினள். பெருமானை மணந்தபோது ஒரு தனம் மறைந்தது. இத்

தேவி மூன்று தனத்துடன் நிற்கும் சிற்பம் புது மண்டபம் கீழ்ப்புறத் தூணில் வடக்கு நோக்கியுள்ளது.

**8. பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்தது :** சுகலன் என்னும் வேளாளனுடைய பன்னிரண்டு பிள்ளைகள், தேவகுருவான பிரகஸ்பதியின் தவத்துக்கு இடையூறு செய்ய, பிரகஸ்பதி அவர்களைப் பன்றிக்குட்டிகளாகும்படி சபித்தார். பெருமான் தாய்ப்பன்றியின் வடிவங்கொண்டு அப்பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தார். இச்சிற்பம் புது மண்டபம் கீழ்ப்புற வரிசையில் மேற்கு நோக்கி யுள்ளது.

**9. புலிமுலை புல்வாய்க் கருளியது:** ஓர் மானை வேடுவர் கொல்ல அதன் குட்டிக்குப் புலியைக்கொண்டு முலைப்பால் கொடுக்கும்படிப் பெருமான் அருள் செய்தார். சிவபெருமானுடைய திருவுருவம் புல்வாய்க் கன்றிற்குப் புலியைக்கொண்டு பாலருத்தியவண்ணம் உள்ளது. இச் சிற்பம் மேற்காட்டிய 8-வது சிற்பத்தின் பக்கத்தில் மேற்கு நோக்கி உள்ளது. திருப்பரங்குன்றம் முன் மண்டபத் திலும் இச்சிற்பம் உள்ளது. இவ்வரலாறு பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றிய பழைய திருவிளையாடற் புராணத் தில் கூறப்பட்டுள்ளது. பழைய காலத்தில் இத் திருவிளை யாடல் நிகழ்ந்ததென்பதை இந்தச் சிற்பம் விளக்குகிறது.


53. புலிமுலை புல்வாய்க்கருளின திருவிளையாடல்,

“ மாலொடுதேவர் மகிழ்ந்தேத்து நீபவனத்துழையைக்
கோலொடுவேடுவர் கொல்லக் கண்டேயதன் குட்டிக்குத்தாய்
போலுடன் வந்தந்தப் புல்வாய்மறிக்குப் புலியைமுலைப்
பால்கொடுவென்னும் சொக்கே பரதேசி பயகரனே ”

—திருவிளையாடற் பயகரமாலை

“ இகல்செய் கொடும்புலிமுலையைச் சிறியபுல்வாய்
வந்தருந்தும்படி யளித்த மாமதுரை யங்கயற்கண்
மணவாளா ”

—கருணைத் திருவிருத்தம்



ஸ்ரீ மீனாட்சியைத் தாரை வார்த்துக் கொடுத்தல் ப - 58

" புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி " —திருவாசகம்

**10. கல்லானைக்குக் கரும்பருத்தியது :** எல்லாம் வல்ல சித்தரின் பெருமையை, அபிடேகப்பாண்டியன் உணராமல் அவரைச் சோதிக்க எண்ணிக் கையிலுள்ள கரும்பைக் கல்யானை தின்னச் செய்யுமாறு கேட்டான். சித்தரின் அருளால் கல்லானைகளில் ஒன்று இடிபோல் முழங்கித் துதிக்கையால் அரசன் கையிலுள்ள கரும்பைப் பறித்துத் தின்றது. இதனை விளக்கும் சிற்பம், புது மண்டபம் மேற்கு வரிசைத் தூணில் கிழக்கு நோக்கி உள்ளது. பாண்டியன் கையிலுள்ள கரும்பை யானை பறிப்பதுபோன்று அழகாய் அமைந்துள்ளது.

**11. கரிக்குருவிக்கு உபதேசித்தது :** சாபம் பெற்ற ஓர் கரிக்குருவி சந்நிதியில் வந்து வழிபட்டதற்காகப் பெருமான் அதற்கு மிருத்தியுஞ்சய மந்திரத்தை உபதேசித்து, அதற்கு வலிமையையும் அருளினர். இதனல் வலியான் என்னும் பெயர் அதன் இனத்திற்கே வழங்கியது. இச் சிற்பம் முன் சிற்பத்துக்குப் பக்கத்தில் கிழக்கு நோக்கி உள்ளது.

**12. மீனட்சியம்மை திருக்கல்யாணம் :** திருமால் தாரைவார்க்க, பிரமன் சடங்குகளை நடத்த, தும்புரு - நாரதர் வீணைவாசிக்க, நந்திதேவர் மத்தளம் கொட்ட, மற்றதேவர்கள் பணிசெய்ய ஸ்ரீ மீனட்சி - சுந்தரேஸ்வரருக்குத் திருக்கல்யாணம் நடைபெறும் சிற்பம் கம்பத்தடி மண்டபத் தூணிலும், புதுமண்டபத் தூணிலும் அமைக்கப்பெற்றுள்ளது.

**13. மாபாதகம் தீர்த்தது :** ஓர் அந்தணனுடைய மாபாதகங்களைத் தீர்த்தருளிய வகையில் பெருமான் வேடுவனுகவும், மீனட்சி அம்மையார் வேடுவச்சியாகவும் கோலங்கொண்ட சிற்பங்கள், அம்மன் சந்நிதியில் அஷ்டசக்தி மண்டபத்துக்கு உட்புறத்தில் உள்ளன.

இவைபோன்ற வேறுபல சிற்பங்களும் ஆங்காங்குள்ளன. சுவாமி கோயில் உள்மண்டபச் சுவர்களில் திருவிளையாடலின் கதைச் சிற்பங்கள் பல வண்ணங்களில் அமைக்கப் பட்டுள்ளன. பொற்றாமரைக் குளத்தின் மண்டபச் சுவர்களிலும் திருவிளையாடற் கதைகளின் சித்திரங்கள் எழுதப்பட்டுள்ளன. மாரியம்மன் தெப்பக் குளத்தின் நடுவிலுள்ள மைய மண்டபமும், சுற்று மண்டபங்களும் அழகிய சிற்ப வேலைப்பாடுடன் விளங்குகின்றன.

## 15. தினப்பூஜைகள்

இக் கோயிலில் தினந்தோறும் ஆறு காலங்களில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

1. திருவனந்தல் காலை மணி 5—6.
2. காலை சந்தி மணி 7½—9.
3. திரிகால சந்தி } மணி 10½—11½.
4. உச்சிக்காலம் }
5. மாலைப் பூஜை மணி 5—6.
6. இரவு அர்த்தசாமம் மணி 8—9½.
   பள்ளியறைப் பூஜை 10—11.

காமிக, காரண ஆகமப்படி பூஜைகள் நிகழ்கின்றன.

வெள்ளிக்கிழமைகளில் அர்த்தஜாமம்—பள்ளியறைப் பூஜைகள் ஒரு மணி நேரம் கழித்து நடைபெறும். திருவிழாக் காலங்களில் சுவாமி வெளிமண்டபங்கள் செல்வதாயிருந்தால் மாலைக் காலப் பூஜை முடிந்து புறப்படும், சுவாமி திரும்பிவந்த பிறகு அர்த்தஜாமப் பள்ளியறைப் பூஜைகள் நடைபெறும். பூஜை நேரங்களில் பெரிய மணி அடிக்கப்படும். அந்தந்தக் காலங்களில் சென்று வழிபட்டால் மிக்க புண்ணியம் உண்டு.

" காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்—மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும் " —சிவதரிசனமகத்துவம்

மேலும் பிரதோட காலத்திற் சென்று தரிசனம் செய்வது மிகவும் விசேடம். பிரதோட காலமாவது வளர் பிறையிலும், தேய் பிறையிலும் வரும் திரயோதசி திதிநாளில் சூரியன் மறைவதற்கு முன்னுள்ள மூன்றேமுக்கால் நாழிகையும், பின்னுள்ள மூன்றேமுக்கால் நாழிகையும் கொண்ட காலம். சிவபெருமான் ஆலகால விஷம் உண்டருளிய காலம் என்பர்.

" வாழிய இருபக்கத்தும் வளர்திரயோ தசிக்கண்
ஆழியிற் கதிரோன்வீழும் அதற்குமுன் மூன்றேமுக்கால்
நாழிகை பின்னுமந்த நாழிகை இணையகாலம்
பாழியங் கடல்சூழ் வைப்போர் பகர்பிரதோடம் என்பார் "

" இன்ன புண்ணியகாலத்தில் எய்துபுதரிசிப்போர்கள்
முன்னர் வெம்பாவத் தாயமுருக்குவன் பிணிநிரப்போடு
என்ன பொல்லாங்குந்தீர்வர் இன்பமும் திருவும்பெற்றுப்
பின்னர்நம் பெருமான்பாதம் பிரிவறக்கலந்து வாழ்வார் "

—மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

***கோயில் தரிசன முறை :*** கோயிலுக்குச் செல்வோர் நீராடிச் சிவசின்னங்களாகிய திருநீறு, உருத்திராக்கம் அணிந்து தேங்காய் பழம் கற்பூரம் முதலியவைகளில் இயன்ற அளவு எடுத்துச் செல்லவேண்டும். முதலில் விநாயகரையும், சிவபிரானையும், பிறகு நடராஜர் தட்சிணா மூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் சுப்பிரமணியர், சமயகுரவர் நால்வர், அறுபத்துமூவர் முதலியோரையும், பிறகு தேவியாரையும், சண்டிகேசரையும் முறையாகத் தரிசிக்கவேண்டும். இத்தலம் சக்திக்குரிய பிரதான தலமான

தால் தேவியைத் தரிசித்த பிறகே சுவாமி கோயிலுக்குச் சென்று தரிசிப்பர்.

துவாதசாந்தத் தலமாகிய திருவாலவாய் 64 பீடங்களுள் முதல் பீடத்தைப் பெற்றுள்ளதால் எல்லாப் பூஜைகளும் தேவிக்கு முடிந்த பிறகே சிவபெருமானுக்கு நடைபெறுகின்றன. ஆகவே இத் தலத்தில் முதலில் விநாயகரையும், முருகனையும், பிறகு மீனாட்சியம்மையாரையும் தரிசித்து அப்பால் சுவாமி சந்நிதிக்குச் சென்று வழிபடுதல் முறையாக நடந்துவருகிறது.

***கோயிலில் செய்யத்தகாத குற்றங்கள்*** மலசலங்கழித்தல், எச்சில் உமிழ்தல், சூதாடுதல், ஆசாரமில்லாதுபோதல், வீண்வார்த்தை பேசுதல், அவசரமாக வலம் வருதல், நந்திதேவருக்கும், சிவபெருமானுக்கும் குறுக்கேபோதல், நிர்மாலியப் பொருள்களை மிதித்தல் முதலியன.

இக் கோயிலில் விநாயகர், முருகன், சுவாமி, அம்மன் முதலிய மூர்த்திகளுக்குரிய அஷ்டோத்தர சதநாமங்கள் கரும்பலகைகளில் தமிழில் எழுதப்பெற்றுத் தனி வெளியீடுகளாகவும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அவைகளின் பெயர்களும், அர்ச்சனை முதலிய கட்டணங்களின் விவரங்களும் பின்னே சேர்க்கப்பெற்றுள்ளன.

# அர்ச்சனை முதலிய கட்டணங்கள் விவரம்

| | வசூல் கட்டணம் | தேவஸ் தான ஈவு | பட்டர் கள் ஈவு | சாஸ்திரி கள் ஈவு |
|---|---|---|---|---|
| 1. சகஸ்ரநாம அர்ச்சனை | 1-00 | 0-38 | 0-44 | 0-18 |
| 2. திரிசதை | 0-62 | 0-25 | 0-25 | 0-12 |
| 3. அஷ்டோத்தரம் | 0-26 | 0-13 | 0.13 | |
| 4. கல்யாணம் | 3-00 | 1-50 | 1-50 | |
| 5. கல்யாணத் தாம்பூலம் | 1-00 | 0-50 | 0-50 | |
| 6. கற்பூர ஹாரத்தி தேங்காய் ஒன்று உடைக்க | 0-07 | 0-04 | 0-03 | |
| 7. மாலை சாத்த | 0-07 | 0.04 | 0-03 | |
| 8. வெண்ணெய் சாத்த | 0-07 | 0-04 | 0-03 | |
| 9. நைவேத்தியம் மதிப்பு ரூ. 1க்கு | 0-07 | | | |
| 10. ஜெபக்குடம் | 0-50 | 0-25 | 0-25 | |
| 11. மாவிளக்கு | 0-07 | 0-07 | | (கணக்கு) |
| 12. உபய சாமான் 1-க்கு | 0-75 | 0-25 | 0-25 | 0-25 |
| 13. உபய கால்நடை 1-க்கு | 2-62 | 2-62 | | |
| 14. உபயகிளி 1-க்கு | 5-00 | 5-00 | | |
| 15. கர்ணபூஷணம் | 0-26 | 0-26 | | |
| 16. நெய்விளக்குப் போட | 0-26 | 0-13 | 0-13 | |
| 17. அன்னப்பிராசனம் | 0-50 | 0-25 | 0-25 | |
| 18. கங்கை அபிஷேகம் செம்பு 1க்கு | 0-50 | 0-25 | 0-25 | |
| 19. உபய அபிஷேக சாமான்கள் | | | | |
| மதிப்பு ரூ. 5க்குள் பட்டது | 0-13 | 0-07 | 0-06 | |
| மதிப்பு 5க்குமேல் 10க்குள் | 0-26 | 0-13 | 0-13 | |
| „ 10 „ 25 „ | 0-50 | 0-25 | 0-25 | |
| „ 25 „ 50 „ | 1-00 | 0-50 | 0-50 | |
| „ 50 „ 100 „ | 2-00 | 1-00 | 1-00 | |
| 20. பிள்ளைகள் மரத்தொட்டில் 1க்கு | 0.50 | 0-25 | 0-25 | |

பாத காணிக்கை விசேஷ அர்ச்சனையில் செய்யும் நாணயம், தங்கம், பொன் முதலியவை தேவஸ்தானத்தைச் சேர்ந்தவை. டிக்கட்டுகளில் தேவஸ்தான ஈவும், பட்டர்கள், சாஸ்திரிகள் தட்சணை வகையறுவும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மூலஸ்தானம் அம்மன்—சுவாமிக்கு முத்துச் சொருக்கு நாகாபரண விசேட அலங்காரம் செய்யக் கட்டணம் ரூ. 20.

கோயில் நகைகளைப் பார்வையிடக் கட்டணம் ரூ. 21.

கோயில் வெள்ளி, தங்க வாகனங்களைப் பார்வையிடக் கட்டணம் ரூ. 2.

இக் கோயிலில் திருமணங்கள் நடைபெறுகின்றன. ஓர் திருமணத்திற்கு ஐந்து ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

# ஸ்ரீ விநாயகர் அஷ்டோத்ரசத நாமாவளி

ஓம் விநாயகாய நம :
விக்னராஜாய
கௌரீபுத்ராய
கணேச்வராய
ஸ்கந்தாக்ரஜாய
அவ்யயாய
பூதாய
தக்ஷாய
அத்யக்ஷாய
த்விஜப்ரியாய
அக்னி கர்ப்பச்சிதே
இந்த்ரச்ரீப்ரதாய
வாணீப்ரதாய
அவ்யயாய
ஸர்வஸித்திப்ரதாய
சர்வதனயாய
சர்வரீப்ரியாய
ஸர்வாத் மகாய
ஸ்ருஷ்டிகர்த்ரே
தேவாய
அனேகார்ச்சிதாய
சிவாய
சுத்தாய
புத்திப்ரியாய
சாந்தாய
ப்ரும்மசாரிணே
கஜானனாய
த்வை மாத்ரேயாய
முனிஸ்துத்யாய

ஓம் பக்த விக்ன விநாசனாய நம:
ஏகதந்தாய
சதுர்பாஹவே
சதுராய
சக்திஸம்யுதாய
லம் போதராய
சூர்பகர்ணாய
ஹரயே
ப்ரும்மவிதுத்தமாய
காலாய
க்ருஹபதயே
காமினே
ஸோமஸூர்யாக்னி லோசனாய
பாசாங்குசதராய
சண்டாய
குணாதீதாய
நிரஞ்ஜனாய
அகல்மஷாய
ஸ்வயம்ஸித்தாய
ஸித்தார்சிதபதாம்புஜாய
பீஜபூரபலாஸக்தாய
வரதாய
சாச்வதாய
க்ருதினே
த்விஜப்ரியாய
வீதபயாய
கதினே
சக்ரிணே

ஓம் இக்ஷு சாபத்ருதே நம : ஓம் நாகராஜயக்ஞோபவீத
ஸ்ரீதாய
அஜாய
உத்பலகராய
ஸ்ரீபதயே
ஸ்துதிஹர்ஷிதாய
குலாத்ரி பேத்ரே
ஜடிலாய
கலிகல் மஷநாசனாய
சந்த்ர சூடாமணயே
காந்தாய
பாபஹாரிணே
ஸமாஹிதாய
ஆச்ரிதஸ்ரீகராய
ஸௌம்யாய
பக்தவாஞ்சித தாயகாய
சாந்தாய
கைவல்ய ஸுகதாய
ஸச்சிதானந்த விக்ர
ஹாய
ஞானினே
தயாயுதாய
தாந்தாய
ப்ரும்மத்வேஷவிவர்ஜி
தாய
ப்ரமத்த தைத்யபயதாய
ஸ்ரீகண்டாய
விபுதேஸ்வராய
ரமார்ச்சிதாய
விதயே

காய நம:
ஸ்தூல கண்டாய
ஸ்வயம்கர்த்ரே
ஸாமகோஷப்ரியாய
பரஸ்மை
ஸ்தூல துண்டாய
அக்ரண்யை
தீராய
வாகீசாய
ஸித்தி தாயகாய
தூர்வாபில்வப்ரியாய
அவ்யக்த மூர்த்தயே
அத்புத மூர்த்திமதே
சைலேந்த்ரதனுஜோத்
ஸங்கலேலனோத் }
ஸுகமானஸாய
ஸ்வலாவண்ய சுதாதா
ராய
ஜிதமன்மதவிக்ரஹாய
ஸமஸ்த ஜகதாதாராய
மாயினே
மூஷிக வாஹனாய
ஹ்ருஷ்டாய
துஷ்டாய
ப்ரஸன்னாத்மனே
ஸர்வஸித்திப்ரதாயகாய
மஹாகணபதயே
ஸமஸ்தோப சாரபூஜாம்
ஸமர்ப்பயாமி

---

# ஸ்ரீ சுப்ரமண்யர் அஷ்டோத்ரசத நாமாவளி

ஓம் ஸ்கந்தாய நம:
குஹாய
ஷண்முகாய
பாலநேத்ரஸுதாய
ப்ரபவே
பிங்களாய
கிருத்திகாஸூனவே
சிகி வாஹனாய
த்விஷட்புஜாய
த்விஷண்ணேத்ராய
சக்திதராய
பிசிதாசப்ரபஞ்ஜனாய
தாரகாஸுரஸம்ஹாரிணே
ரக்ஷோபலவிமர்தனாய
மத்தாய
ப்ரமத்தாய
உன்மத்தாய
ஸுரஸைன்யஸுரக்ஷகாய
தேவ ஸேனாபதயே
ப்ராக்ஞாய
க்ருபாளவே
பக்தவத்ஸலாய
உமாஸுதாய
சக்திதராய
குமாராய
க்ரௌஞ்சதாரணாய
ஸேனான்யே
அக்னிஜன்மனே

ஓம் விசாகாய நம:
சங்கராத்மஜாய
சிவஸ்வாமினே
கணஸ்வாமினே
ஸர்வஸ்வாமினே
ஸநாதனாய
அனந்த சக்தயே
அக்ஷோப்யாய
பார்வதீப்ரியநந்தனாய
கங்காஸுதாய
சரோத்பூதாய
ஆஹூதாய
பாவகாத்மஜாய
ஜ்ரும்பாய
ப்ரஜ்ரும்பாய
உஜ்ஜ்ரும்பாய
கமலாஸன ஸம்ஸ்துதாய
ஏகவர்ணாய
த்வி வர்ணாய
த்ரிவர்ணாய
ஸுமனோஹராய
சதுர்வர்ணாய
பஞ்சவர்ணாய
ப்ரஜாபதயே
அஹஸ்பதயே
அக்னிகர்பாய
சமீகர்பாய
விச்வரேதஸே
ஸுராரிக்னே

ஓம் ஹரித்வர்ணய நம :
சுபகராய
வாஸ வாய
வடுவேஷப்ருதே
பூஷ்ணே
கபஸ்தினே
கஹனய
சந்த்ரவர்ணய
கலாதராய
மாயா தராய
மஹாமாயினே
கைவல்யாய
சங்கராத்மஜாய
விச்வயோனயே
அமேயாத்மனே
தேஜோ நிதயே
அனுமயாய
பரமேஷ்டினே
பரப்ரும்மணே
வேதகர்பாய
விராட்ஸுதாய
புளிந்த கன்யாபர்த்ரே
மஹாஸாரஸ்வதப்ரதாய
ஆஸ்ரிதாகிலதாத்ரே
சோரக்னய
ரோகனசனய
அனந்தமூர்த்தயே
ஆனந்தாய
சிகண்டிக்ருதகேதநாய

ஓம் டம்பாய நம :
பரமடம்பாய
மகாடம்பாய
வ்ருஷாகபயே
காரணோபாத்ததேஹாய
காரணதீதவிக்ரஹாய
அனீச்வராய
அம்ருதாய
ப்ராணய
ப்ராணயாமபராயணய
விருத்தஹந்த்ரே
வீரக்னய
ரக்த ஸ்யாமளாய
மஹதே
ஸுப்ரம்மண்யாய
குஹப்ரீதாய
ப்ரும்மண்யாய
ப்ராம்மணப்ரியாய
வம்ச வ்ர்த்திகராய
வேத வேத்யாய
அக்ஷய பலப்ரதாய
ஸ்வாமினதாய
வல்லி தேவஸேன
ஸமேத
ஸுப்ரம்மண்யஸ்வா
மினே
ஸமஸ்தோபசாரபூஜாம்
ஸமர்ப்பயாமி

# ஸ்ரீ மீனாட்சி அம்மன்
# ஸ்ரீ சியாமளா அஷ்டோத்தரசத நாமாவளி

| | |
|---|---|
| ஓம் ஸ்ரீ மாதங்க்யை நம : | ஓம் சாருஹாஸிந்யை நம : |
| விஜயாயை | மதுப்ரியாயை |
| ஸ்யாமாயை | ஸ்ரீ ஜனன்யை |
| சசிவேச்யை | சர்வாண்யை |
| சுகப்ரியாயை | சிவாத்மிகாயை |
| நீபப்ரியாயை | ராஜ்யலக்ஷ்மீப்ரதாயை |
| கதம்பேச்யை | நித்யாயை |
| மதாகூர்ணிதலோசனுயை | நீபோத்யாநநிவாஸிந்யை |
| பக்தாநுரக்தாயை | வீணுவத்யை |
| மந்த்ரேச்யை | கம்புகண்ட்யை |
| புஷ்பிண்யை | காமேச்யை |
| மந்த்ரிண்யை | யக்ஞரூபிண்யை |
| சிவாயை | ஸங்கீதரஸிகாயை |
| கலாவத்யை | நாதப்ரியாயை |
| ரக்தவஸ்த்ராயை | நீலோத்பலத்யுத்யை |
| அபிராமாயை | மதங்கதநயாயை |
| ஸுமத்யமாயை | லக்ஷ்ம்யை |
| த்ரிகோணமத்ய நிலயாயை | வ்யாபின்யை |
| சாருசந்த்ராவதம்ஸிந்யை | ஸர்வரஞ்ஜின்யை |
| ரஹ : பூஜ்யாயை | திவ்யசந்தனதிக்தாங்க்யை |
| ரஹ : கேள்யை | யாவகார்த்ரபதாம்புஜாயை |
| யோனிரூபாயை | கஸ்தூரி திலகாயை |
| மஹேச்வர்யை | ஸுப்ருவே |
| பகப்ரியாயை | பிம்போஷ்ட்யை |
| பகாராத்யாயை | மதாலஸாயை |
| ஸுபகாயை | வித்யாராக்ஞை |
| பகமாலின்யை | பகவத்யை |
| ரதிப்ரியாயை | ஸுதாபானுநுமோதின்யை |
| சதுர்பாஹவே | சங்கதாடங்கின்யை |
| ஸுவேண்யை | குஹ்யாயை |

ஓம் யோஷித்புருஷமோ
ஹின்யை நம :
கிங்கரீபூதகீர்வாண்யை
கௌளின்யை
அக்ஷரரூபிண்யை
வித்யுத்கபோலபலகாயை
முக்தாரத்னவிபூஷிதாயை
ஸுநாஸாயை
தநுமத்யாயை
ஸ்ரீ வித்யாயை
புவனேச்வர்யை
ப்ருதுஸ்தன்யை
பிரும்மவித்யாயை
ஸுதாஸாகரவாஸின்யை
குஹ்யவித்யாயை
அனவத்யாங்க்யை
யந்த்ரின்யை
ரதிலோலுபாயை
த்ரைலோக்யஸுந்தர்யை
ரம்யாயை
ஸ்ரக்விண்யை
கீரதாரிண்யை
ஆத்மைக்யஸுமுகீபூத ஜகதாஹ்லாதகாரிண்யை
கல்பாதீதாயை
குண்டலின்யை
கலாதராயை
மனஸ்வின்யை
அசிந்த்யானந்தவிபவாயை

ஓம் ரத்னஸிம்மாஸனேச்வர்யை
பத்மாஸனாயை நம :
காமகலாயை
ஸ்வயம்புகுஸுமப்ரியாயை
கல்யாண்யை
நித்யபுஷ்பாயை
சாம்பவ்யை
வரதாயின்யை
ஸர்வவித்யாப்ரதாவாச்யாயை
குஹ்யோபநிஷதுத்தமாயை
ந்ருபவச்யகர்யை
போக்த்ர்யை
ஜகத்ப்ரத்யக்ஷஸாக்ஷிண்யை
ப்ரும்மவிஷ்ணவீசஜனன்யை
ஸர்வஸௌபாக்யதாயின்யை
குஹ்யாதி குஹ்யகோப்த்ர்யை
நித்யக்லின்னாயை
அம்ருதோத்பவாயை
கைவல்யதாத்ர்யை
வசின்யை
ஸர்வஸம்பத்பிரதாயின்யை
ஸ்யாமளாம்பிகாயை
ஸ்ரீ மீனாக்ஷியம்பிகாயை
ஸ்ரீ ராஜராஜேஸ்வர்யை
சமஸ்தோபசாரபூஜாம்
ஸமர்ப்பயாமி

# ஸ்ரீ சிவ அஷ்டோத்ரசத நாமாவளி

ஓம் சிவாய நம :
மஹேஸ்வராய
சம்பவே
பிநாகினே
சசிசேகராய
வாமதேவாய
விரூபாக்ஷாய
கபர்தினே
நீலலோஹிதாய
சங்கராய
சூலபாணயே
கட்வாங்கினே
விஷ்ணுவல்லபாய
சிபிவிஷ்டாய
அம்பிகா நாதாய
ஸ்ரீகண்டாய
பக்தவத்ஸலாய
பவாய
சர்வாய
த்ரிலோகேசாய
சிதிகண்டாய
சிவாப்ரியாய
உக்ராய
கபாலினே
காமாரயே
அந்தகாஸுரஸூதநாய
கங்காதராய
லலாடாக்ஷாய
காலகாலாய


ஓம் க்ருபாநிதயே நம :
பீமாய
பரசுஹஸ்தாய
ம்ருகபாணயே
ஜடாதராய
கைலாஸவாஸினே
கவசினே
கடோராய
த்ரிபுராந்தகாய
வ்ருஷாங்காய
வ்ருஷபாரூடாய
பஸ்மோத்தூளிதவிக்ர
ஹாய
ஸாமப்ரியாய
ஸ்வரமயாய
த்ரயீமூர்த்தயே
அனீச்வராய
ஸர்வக்ஞாய
பரமாத்மனே
ஸோமஸூர்யாக்னிலோச
னாய
ஹவிஷே
யக்ஞமயாய
ஸோமாய
பஞ்சவக்த்ராய
ஸதாசிவாய
விச்வேச்வராய
வீரபத்ராய
கணநாதாய

ஓம் ப்ரஜாபதயே நம :
ஹிரண்யரேதஸே
துர்தர்ஷாய
கிரீசாய
கிரிசாய
அனகாய
புஜங்கபூஷணாய
பர்க்காய
கிரிதன்வனே
கிரிப்ரியாய
க்ருத்திவாஸஸே
புராராதயே
பகவதே
ப்ரமதாதிபாய
ம்ருத்யுஞ்ஜயாய
ஸூக்ஷ்மதனவே
ஜகத்வ்யாபினே
ஜகத்குரவே
வ்யோமகேசாய
மஹாஸேனஜனகாய
சாருவிக்ரமாய
ருத்ராய
பூதபதயே
ஸ்தாணவே
அஹிர்புத்ந்யாய
திகம்பராய
அஷ்டமூர்த்தயே
அனேகாத்மநே

ஓம் ஸாத்விகாய நம :
சுத்தவிக்ரஹாய
சாச்வதாய
கண்டபரசவே
அஜாய
பாசவிமோசனாய
ம்ருடாய
பசுபதயே
தேவாய
மஹாதேவாய
அவ்யயாய
ஹரயே
பகநேத்ரபிதே
அவ்யக்தாய
தக்ஷாத்வரஹராய
ஹராய
பூஷதந்தபிதே
அவ்யக்ராய
ஸஹஸ்ராக்ஷாய
ஸஹஸ்ரபதே
அபவர்க்கப்ரதாய
அனந்தாய
தாரகாய
பரமேச்வராய
ஸோமசுந்தரேஸ்வராய
ஹாலாஸ்யநாதாய
சமஸ்தோபசாரபூஜாம்
ஸமர்ப்பயாமி

---

குறிப்பு:- அஷ்டோத்தரசத நாமாவளிகள் திருச்சி மலைக்கோயில் ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி குருக்களால் ஒப்புநோக்கப்பெற்றன.



ஸ்ரீ மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம்

ப - 72

## 16. திருவிழாக்கள்

மதுரை நகரமே திருவிழா நகர் (City of festivals) என்று சொல்லப்படும். கோயிலில் முக்கியமாக மூன்று பெரிய திருவிழாக்கள் நடைபெறும். அவை சித்திரைத் திருவிழா, தெப்பத் திருவிழா, ஆவணிமூலவிழா என்பன. தமிழ் நாட்டுத் தலைநகரங்கள் மூன்றிலும் மூன்று விழாக்கள் நடைபெற்று வந்ததாக அறிகிறோம். மதுரையில் ஆவணி மூல விழாவும், உறையூரில் பங்குனி உத்தர விழாவும், கருவூரில் உள்ளி விழாவும் நடைபெற்று வந்தன. இக் கோயிலில் மாதந்தோறும் திருவிழாக்கள் நடந்த வண்ணமாக இருக்கும்.

### திருவிழாக்களின் விவரம்

*சித்திரை :* சித்திரைப் பெருவிழா 12 நாட்கள் நடைபெறும். முதல் நாள் கொடியேற்றமும், 8-ம் நாள் மீனாட்சியம்மன் பட்டாபிஷேகமும், 9-ம் நாள் மீனாட்சி திக்குவிஜயமும், 10-ம் நாள் மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணமும், 11-ம் நாள் தேரோட்டமும், 12-ம் நாள் சித்திரை நட்சத்திரம் பௌர்ணமி கூடிய நாளில் தீர்த்த விழாவும், தேவேந்திரன் உச்சிக் காலப் பூஜை செய்த ஐதீகமும் நடைபெறும். விழா நாட்களில் நான்கு மாசி வீதிகளிலும் சுவாமி புறப்பட்டு வலம்வரும். திருக்கல்யாணத்தில் அர்ச்சகர்கள் மீனாட்சி-சுந்தரேஸ்வரராக நடித்துக் காட்டுவார்கள். சித்திரைப் பரணி நாளில் பைரவ நாடகம் நிகழும். சித்திரைப் பௌர்ணமி நாளில் திருமாலிருஞ்சோலை அழகர் வைகையாற்றுக்கு எழுந்தருளும் விழா நிகழும்.

*வைகாசி :* கால வசந்த விழா 10 நாள்வரை நடைபெறும். 10-ம் நாள் பால்மாங்காய் நைவேத்யம். சுவாமி புதுமண்டபம் புறப்பட்டுச் சென்று தங்கி நான்கு சித்திரை

வீதிகளிலும் வலம்வரும். இம்மாதம் திருஞான சம்பந்தர் விழா மூன்று நாள் நடைபெறும். மூலநாளில் காலையில் அறுபத்துமூவர் புறப்பாடும், இரவில் வெள்ளி ரதத்தில் திருஞானசம்பந்தர் புறப்பாடும் நிகழும்.

ஆனி : ஊஞ்சல் விழா 10 நாள் நடைபெறும். 10-ம் நாள் முப்பழப் பூஜை நிகழும். ஆனி உத்திர நாளில் நடராஜர் - சிவகாமி அம்மனுக்கு அதிகாலையில் அபிஷேக மும், பஞ்ச சபை நடராஜ மூர்த்திகள் புறப்பட்டு நான்கு மாசி வீதிகளில் வலம் வரும்.

ஆடி : ஆடி முளைக்கொட்டு விழா 10 நாட்கள் நடைபெறும். அம்மனுக்கு மட்டும் விழா. ஆடிவீதி நான் கிலும் அம்மன் வலம் வரும். சித்திரைச் சதயம், வைகாசி மூலம், ஆனிமகம், ஆடி சுவாதி முதலிய நாட்களில் சைவ சமயாச்சாரியார் நால்வருக்கும் அபிஷேக ஆராதனைகளும் புறப்பாடும் நடைபெறும். தற்போது மூர்த்தி நாயனர், நெடுமாறர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகியோ ருடைய நாட்களிலும் அபிடேக ஆராதனைகளும் புறப்பாடும் நடத்தப் பெறுகின்றன.

ஆவணி மாதத்தில், ஆவணிமூலப் பெருவிழா 18 நாட்கள் நடைபெறும். சந்திரசேகரருக்கு 6 நாட்களும், பஞ்சமூர்த்திகளுக்கு 12 நாட்களும் நடைபெறும். முதல் நாள் கொடியேற்றமும், 7-ம் நாள் ஸ்ரீ சுந்தரேஸ்வரருக்குப் பட்டாபிஷேகமும், 8-ம் நாள் குதிரைக்கயிறு மாற்றுதலும், 9-ம் நாள் பிட்டுக்கு மண் சுமத்தலும், 12-ம் நாள் அவிட்ட மும் பூரணையும் கூடிய நாளில் தீர்த்தமும் நிகழும். இரவில் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியரும், திருவாதவூர் மாணிக்க வாசகரும் விடைபெறுதல். சந்திரசேகரர் உற்சவத்தில் சுவாமி கோயில் 2ம் பிராகாரத்தில் வலம்வரும். பஞ்ச மூர்த்திகள் ஆவணிமூல வீதிகளில் வலம்வரும். இவ்விழா

நாட்களில் பத்துத் திருவிளையாடற் காட்சிகள் நடைபெறும்.

64 திருவிளையாடல்களில் சித்திரை விழாவில் 4 திருவிளையாடல்களும், ஆவணிமூல விழாவில் 10 திருவிளையாடல்களும், தை மாதத்தில் மூன்றும், பங்குனியில் ஒன்றும் நடைபெறுகின்றன. இதன் விவரம் வருமாறு :—

சித்திரை விழாவில் 8, 9, 10, 12ந் திருநாட்களில் ஸ்ரீ மீனாட்சி பட்டாபிஷேகம், திக்குவிஜயம், திருக்கல்யாணம், இந்திரன் பூஜை ஆகிய திருவிளையாடல்கள் நடைபெறும். ஆவணிமூல விழாவில் முதல் நாள் தொடங்கிப் பத்தாம் நாள் வரையில் கரிக் குருவிக்கு உபதேசம், நாரைக்கு முத்திகொடுத்தல், மாணிக்கம் விற்றது, தருமிக்குப் பொற்கிழி கொடுத்தது, உலவாக் கோட்டை அருளியது, அங்கம் வெட்டியது, வளையல் விற்றது - சுவாமி பட்டாபிஷேகம், குதிரை கயிறு மாறுதல், பிட்டுக்கு மண் சுமந்தது, விறகு விற்றது முதலிய திருவிளையாடல்கள் நடைபெறும். தை மாதத்தில் மாதப் பிறப்பில் கல்யானைக்குக் கரும்புகொடுத்தல், 8-ந் திருநாளில் வலை வீசுதல், 12-ந் திருநாளில் யானையை எய்தது ஆகிய திருவிளையாடல்களும், பங்குனி 10-ந் திருநாளில் பொன்னனையாளுக்கு இரசவாதஞ் செய்த திருவிளையாடலும் நடைபெறும்.

ஸ்ரீ மீனாட்சியம்மனுக்கு சித்திரையில் பட்டாபிஷேகமும், ஸ்ரீ சுந்தரேஸ்வரருக்கு ஆவணியில் பட்டாபிஷேகமும் நிகழும். அம்மன் 4 மாதமும், சுவாமி 8 மாதமும் அரசு புரிவதாக ஐதீகம். இவ் வைபவங்களை அர்ச்சகர்கள் நடத்தி வைப்பார்கள்.

புரட்டாசி மாதத்தில் அம்மனுக்கு நவராத்திரி விழா நடைபெறும். அம்மன். சந்நிதியிலுள்ள கொலு மண்டபத்தில் அம்மன் கொலுவீற்றிருக்கும். மூலஸ்தான அம்மனுக்குக் கல்பக பூஜை, லட்சார்ச்சனை முதலியன

நடைபெறும். 10-ம் நாள் சடையலம்புதல். பஞ்சமூர்த்திகள் புறப்பட்டுக் கோயிலுக்குள் வலம்வரும்.

ஐப்பசி மாதத்தில் கோலாட்ட விழா 6 நாட்கள் நிகழும். 5 நாட்கள் அம்மனும், 6-ம் நாள் சுவாமியும் அம்மனும் புறப்பட்டு ஆடிவீதியில் வலம் வரும். பவித்ரோத்சவமும் நிகழும். சந்திரசேகரர் புறப்பட்டு 2-ம் பிராகாரத்தில் வலம்வரும். இம்மாதத்தில் கந்தர் சஷ்டி விழா 6 நாட்கள் நடைபெறும். ஸ்ரீ முத்துக்குமரர் புறப்பட்டு 2-ம் பிராகாரத்தில் வலம்வரும். இங்கு சூரசம்மாரம் நடைபெறுவதில்லை. 7-ம்நாள் பாவாடை நிகழும். தீபாவளி நாளில் கோயில் பரிஜனங்களுக்குத் தர்பார் காட்சி நிகழும். ஆடி–ஐப்பசிப் பூர நாட்களில் அம்மனுக்கு ஏற்றி இறக்கும் சடங்குகள் நிகழும்.

கார்த்திகை மாதத்தில் தீபவிழா 10 நாட்கள் நடைபெறும். சுவாமி புறப்பட்டு ஆடி வீதியில் வலம்வரும். கார்த்திகை நாளில் சித்திரை வீதியில் சொக்கப்பானை கொளுத்தப் பெறும்.

மார்கழி மாதத்தில் 9 நாட்கள் எண்ணெய்க் காப்புத் திருவிழா புதுமண்டபத்தில் நிகழும். அம்மன் புறப்பட்டுச் சித்திரை வீதியில் வலம்வரும். திருவாதிரை நாளில் ஆருத்ரா தரிசனம் நிகழும். பஞ்சசபை நடராஜர் புறப்பட்டு மாசி வீதிகளில் வலம்வரும். அஷ்டமி நாளில் அம்மனும் சுவாமியும் ரிஷப வாகனத்தில் அமர்ந்து கோட்டை வீதிகளில் வரும். இம்மாதத்தில் திருவெம்பாவை உற்சவம் 10 நாட்கள் நடைபெறும். தினந்தோறும் காலையில் மாணிக்கவாசகர் புறப்பட்டு ஆடி வீதியில் வலம்வரும். 10-ம் நாள் இராட்டினப் பொன்னூசல் விழா நிகழும். இம்மாதத்தில் விடியற்காலையில் திருவெம்பாவை—திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் பாராயணம் செய்யப்படும்.

தை மாதத்தில் தெப்பவிழா 12 நாட்கள் நடைபெறும். சுவாமி புறப்பட்டுச் சித்திரைவீதியில் வலம்வரும். மூன்று முக்கிய விழாக்களில் ஒன்று. 8-ம் நாள் வலை வீசுதலும், 10-ம் நாளில் தீர்த்தமும், தெப்பந் தள்ளுதலும், 11-ம் நாள் கதிரறுப்பும், 12-ம் நாள் தெப்பமும் நடைபெறும்.

மாசி மாதத்தில் மாசி மகவிழா ஒரு மண்டலம் நடைபெறும். விநாயகருக்கு 6 நாட்களும், ஸ்ரீ குமரருக்கு 6 நாட்களும், மூவர் முதலிகளுக்கு 3 நாட்களும், சந்திர சேகரருக்கு 6 நாட்களும் விழா நிகழும். மூர்த்திகள் 2-ம் பிராகாரத்தில் வலம்வரும். பஞ்சமூர்த்திகள் உற்சவம் 10 நாட்கள் நடைபெறும். மூர்த்திகள் சித்திரை வீதியில் வலம்வரும். மகத்தில் தீர்த்தம் நிகழும். மௌன உற்சவம் 9 நாட்கள் நிகழும். சந்திரசேகரருக்கு 3 நாட்களும், சுவாமிக்கு 3 நாட்களும், சண்டிகேஸ்வரருக்கு 3 நாட்களும் நிகழும். 10-ம் நாள் கொடியிறக்கிக் கணக்கு வாசிக்கப் பெறும்.

பங்குனி மாதத்தில் கோடை வசந்தவிழா 9 நாட்கள் வெள்ளியம்பல மண்டபத்தில் நிகழும். நான்கு சித்திரை வீதியிலும் சுவாமி புறப்பட்டு வலம்வரும். பங்குனி உத்திர நாளில் திருவாப்புடையார் கோயிலுக்குச் சுவாமி எழுந்தருளி இரவில் பக்தியில் சிறந்த பொன்னனை யாளுக்குக் காட்சி கொடுக்கும்.

திருப்பரங்குன்றம் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் திருக் கல்யாணத்திற்குச் சுவாமி அதிகாலையில் மதுரையிலிருந்து புறப்பட்டுச் சென்று அன்றைய இரவிலேயே மதுரை வந்துசேரும்.

" மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்
கண்ணினால் அவர்நல்விழாப் பொலிவுகண் டார்தல் "

என்னும் பெரிய புராணப் பாடலின்படி மனிதராய்ப் பிறந்தவர் அனைவரும், கண்பெற்ற பயனைப் பெருமானுக்கு நடைபெறும் திருவிழாக்களைக் கண்டு தரிசித்து அவனருள் பெற முயல்வது நலமாகும்.

---

## 17. வருமானமும் சொத்துக்களும்

இக் கோயிலுக்குக் கீழ்க்கண்டபடி நன்செய் புன்செய் நிலங்கள் உள்ளன :—

| | ஏக்கர்—செண்டு |
|---|---|
| நன்செய் விஸ்தீரணம் | 452 — 99 |
| புன்செய் விஸ்தீரணம் | 447 — 89 |
| | 900 — 88 |

### தேவஸ்தான நிலங்கள் உள்ள கிராமங்கள் :

மதுரை ஜில்லா :—பெரியகுளம், மன்னாடிமங்கலம், விளாம்பட்டி, மட்டப்பாரை, சோழவந்தான் தென்கரை, சோழவந்தான்பேட்டை, சோளகுறிச்சி, கீழமாத்தூர், தும்பச்சிப்பட்டி, போடிநாயக்கன்பட்டி, தாதம்பட்டி, சம்பைக் குளம், பொன்மேனி, சம்பந்தர் ஆலங்குளம், கல்லந்திரி, பூவக்குடி, மீனாக்ஷிபுரம், சாமநத்தம், வில்லாபுரம், அவணியாபுரம், விளாங்குடி, ஆமூர், கருவேலம்பட்டி, வடபழிஞ்சி, கூடல்செங்குளம், கொடிக்குளம், திருப்பரங்குன்றம், வடிவேல்கரை, மேலநெடுங்குளம், புலியூர்நத்தம், ஜோகில்பட்டி, கோதையிருப்பு, அனுப்பானடி, கொக்குளல்லி, வண்டியூர், நாயக்கன்பட்டி, செல்லூரர், பழக்காபுதுப்பட்டி, வலையங்குளம், ஆஸ்டின்பட்டி, கோச்சடை.

இராமநாதபுரம் ஜில்லா :—சம்சிகாபுரம், வத்திரா யிருப்பு, பானகசேரி, தின்னுனேரி, நெடுங்குணம், பாட்டம், பிரமனூர், குருந்தம்பட்டு, அயன்புளியங்குளம், தச்ச னேந்தல்.

திருச்சி ஜில்லா :—மேலப்பகுதி, தோகைமலை, இக் கரைகோகி குறிச்சி.

திருநெல்வேலி ஜில்லா :—அணியாபரணநல்லூர்.

## கோயிலின் வருஷ வருமானம்

| | |
|---|---|
| 1. குத்தகை ரொக்கம் | ரூ. 83455=00 |
| 2. கிராமங்களை கவர்மெண்டார் எடுத்துக் கொண்டதற்கு தஸ்திக் | ரூ. 62686=68 |
| தஸ்திக் அலவன்ஸ் | ரூ. 17514—1·7 |
| பேரீஜ் வஜா. | ரூ. 679=03 |

குத்தகை நெல் சுமார் 1017 கலம் (48 படி கொண்டது)

| | |
|---|---|
| கடை வாடகை, மனை வாடகை முதலியவை வருமானம் சுமார் | ரூ. 109768—00 |
| உண்டியல் மூலம் வருட வருமானம் சுமார் | ரூ. 53443=44N.P. |

திருவாபரணங்கள் மதிப்பு சுமார் ரூ. 1775870—5—6

திருவாபரணங்கள்:—இக்கோயிலின் திருவாபரணங் கள் மிகவும் விலை மிக்கவை. பாண்டியர்களாலும், நாயக்கர் களாலும், பிற மன்னர்களாலும் கொடுக்கப்பட்டன. இவை களில் முக்கியமாக முற்காலப் பாண்டிய மன்னனால் கொடுக் கப்பட்ட அழகிய தொங்கலணியும் (Pendant), திருமலை நாயக்கரால் தரப்பெற்ற இரத்தினங்களும் - முத்துக்களும்

இழைத்த முடியணியும் (Head-dress), கிழக்கிந்தியக் கம்பெனியாரால் கொடுக்கப்பெற்ற 108 பவுன்களைக் கொண்ட பொன் வடமும், கலெக்டராய் இருந்த ரூஸ் பீட்டர் என்பவரால் தரப்பெற்ற தங்கத்தாலான அங்கவடிகளும் (Golden stirrups) உள்ளன. ரூஸ் பீட்டர் மீனுட்சியம்மையிடம் மிகவும் பக்தி கொண்டவராம். தன்னை ஓர் விபத்திலிருந்து காப்பாற்றியதற்காக மேற்படி நகையைக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. சிறப்பாக நளச் சக்கரவர்த்தியால் ஸ்ரீ சுந்தரேஸ்வரருக்குக் கொடுக்கப்பட்ட ஓர் ஆபரணம் உள்ளது. இது இத்தலத்தின் பழமையை நன்கு விளக்கும். மேலும் மைசூர், திருவாங்கூர், நேபாளம் முதலிய மகாராஜாக்களாலும், மற்றைய குறுநில மன்னர்களாலும் கொடுக்கப்பட்ட வேறு நகைகளும் உள்ளன. இவைகள் மிகவும் பத்திரமாய்ப் பாதுகாக்கப்படுகின்றன. வெள்ளி, தங்கத்தாலாக்கிய வாகனங்களும், சப்பரங்களும், உள்ளன.

---

## *18. நிர்வாகம்*

இக் கோயிலின் நிர்வாகம் ஆதியில் தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையிலிருந்து வந்தது. பிறகு 1925-ல் திட்டம் (Scheme) ஏற்பட்டு 1937-ல் சென்னை எண்டோமெண்ட் போர்டின் நிர்வாகத்துக்கு வந்தது. 1951-முதல் சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) நேர் நிர்வாகத்திலிருந்து வருகிறது. அறநிலையத்தாரால் நியமிக்கப் பெற்ற நிர்வாக அதிகாரியும், மற்ற தர்மகர்த்தர்களும் கோயில் காரியங்களைக் கவனித்து வருகிருர்கள்.

---

# 19. சரித்திர வரலாறு

'வான்புகழ்கொண்ட தமிழ்நாடு' என்று போற்றப் பட்ட தமிழ் நாட்டைச் சேர சோழ பாண்டியர்கள் அரசாண்டு வந்தனர். பழமை வாய்ந்த பாண்டியர்கள் பாண்டி நாட்டை ஆண்டனர். நாட்டின் தலைநகரான மதுரை—கடைச் சங்கமிருந்து தமிழாராய்ந்த மதுரை—பாண்டி நாட்டிற்கேயன்றித் தமிழ்நாடு முழுவதும் மொழி வளர்க்கும் நகரமாகவும், கலைக் கருவூலமாகவும் விளங்கியது. சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பெற்ற மகாவம் சத்திலும், மெகஸ்தனிஸ் என்பவர் குறிப்பிலும் மதுரையின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. மதுரையைச் சுற்றிலும் ரோமானிய நாணயங்கள் கிடைத்ததும், பாண்டிய மன்னனின் தூதர்கள் அகஸ்டஸ் என்பவனிடம் தூது சென்ற செய்தியும் சரித்திரத்தால் அறியப்படுகின்றன. கி. பி. 800-ல் பெரிபுளுசும், தாலமியும் பாண்டியர்களைப் பற்றியும், மதுரையைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள்.

பாண்டிய மன்னர் பலர் பற்பல காலங்களில் புகழுடன் அரசாண்டனர். கொற்கைப் பாண்டியன், இளம்பெரு வழுதி, அறிவுடைய நம்பி, நெடுஞ்செழியன், நன்மாறன், உக்கிரப் பெருவழுதி முதலியோர் கடைச்சங்க காலத்தில் திகழ்ந்த பாண்டியர்கள். மேலும் சுந்தர பாண்டியன், பராக்கிரம பாண்டியன், குலசேகர பாண்டியன், அதிவீர ராம பாண்டியன், வரதுங்கராம பாண்டியன் முதலியோரும் சிறப்புடையோராக ஆண்டுவந்தனர். பாண்டியன் நெடுஞ் செழியன், காவிரிப்பூம்பட்டினத்து வணிகனை கோவலனைக் கள்வன் என்று கருதி ஆராயாது கொலைபுரிந்து பின்பு உண்மை உணர்ந்து உயிர்துறந்தான். சமணமதத்தைச் சார்ந்த நெடுமாறன் சைவனானான்.

14-ம் நூற்றாண்டில் மாலிக்காபர் படையெடுத்துவந்து கோயில் சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவற்றைத் தகர்த்துச்

சிதைவுபடுத்தினன். கி. பி. 1559-ல் சோழ மன்னன் ஒருவன் பாண்டி நாட்டின் மீது படையெடுத்து வந்து மதுரையைக் கைப்பற்றிக் கொண்டான். அப்போது சோழனை அடக்கிப் பாண்டியனுக்கு உதவி செய்ய, விஜய நகரத்து மன்னன், நாகம நாயக்கன் என்பவனை அனுப்பினன். நாகம நாயக்கன் சோழனை அடக்கித் தானே அரசாளத் தொடங்கினன். பிறகு அவன் மகன் விசுவநாத நாயக்கன் தந்தையுடன் போர் செய்து அவனைச் சிறைப் படுத்தித் தானே அரசனுனன். கி. பி. 1559 முதல் ஆளத் தொடங்கினன். நாயக்கவமிசத்து அரசர்களில் இவனே முதல்வன் ஆவன். இவனுடைய தளகர்த்தன் அரிய நாத முதலியாவன். விசுவநாத நாயக்கன் காலத்தில் பழய கோட்டைகளும், மதில்களும் அழிக்கப்பட்டுப் புதிய கட்டிடங்கள் கட்டப்பெற்றன. ஆயிரக்கால் மண்டபமும் இவன் காலத்தில் அரிய நாத முதலியால் கட்டப்பெற்றது.

விசுவநாத நாயக்கனுக்குப்பின் பல நாயக்க மன்னர்கள் - குமாரகிருஷ்ணப்ப நாயக்கர், முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர், முத்துவீரப்ப நாயக்கர் முதலியோர் அரசாண்டனர். பிறகு முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கர் புதல்வரும், முத்துவீரப்ப நாயக்கரின் இளைய சகோதரருமான திருமலை நாயக்கர் கி. பி. 1623 முதல் 1659 வரையில் அரசாண்டார். நாயக்க மன்னர்களில் தலைசிறந்தவர். தென்னிந்திய ஷாஜகான் என்பர். கோயிலுக்குப் பல பணிகள் புரிந்துள்ளார். பல்லாயிரக்கணக்கான கிராமங்களையும் நகைகளையும், கோயிலுக்கு வழங்கியுள்ளார். புதுமண்டபம், ராயகோபுரம், தெப்பக்குளம் முதலியன இவர் காலத்தில் ஏற்பட்டன.

இம் மன்னர் காலத்தில் கத்தோலிக்க கிறிஸ்தவ மதகுருவான நொபிலி—(வீரமா முனிவர்) என்பவர் மதுரைக்கு வந்து பல தமிழ் இலக்கியங்களைப் படித்துத் தென்னுட்டுத் துறவிகள்போல வேடந்தரித்து மதப் பிரசாரஞ் செய்து வந்தார். இவர் திருமலை நாயக்கரின் சிறப்புக்களைத் தமது

கடிதங்களில் குறித்துள்ளார். திருமலை நாயக்கருக்குப்பின் பல நாயக்க மன்னர்களும், ராணி மங்கம்மாளும், மீனாட்சியும் ஆட்சிபுரிந்தனர். கி. பி. 1736-ல் நாயக்கர் ஆட்சி முடிவுற்றது. நாயக்க மன்னர்களின் ஆட்சி சுமார் 200 ஆண்டுகள் நிலவியது. பின்பு முகம்மதிய ஆட்சி ஏற்பட்டது. கி. பி. 1801-ல் கிழக்கிந்திய கம்பெனியாரும், பிறகு ஆங்கிலேயரும் ஆட்சி செய்தனர். 1947 முதல் சுதந்திரம் பெற்ற குடியரசின் ஆட்சியிலிருந்து வருகிறது.

எனவே நகரமும் கோயிலும் பல கால மாறுதல்களுக்கும் நிலைத்து நின்று புகழை நாட்டிவருகின்றன. வருவார் வருக—போவார் போக நான் என்றும் உள்ளேன் என்று கோயில் காட்சி கொடுத்து வருகிறது.

---

## 20. கல்வெட்டுக்கள்

மதுரை சுந்தரேஸ்வரர் கோயில், மீனாட்சியம்மன் கோயில் பிரகாரச்சுவர்களிலும், பிற இடங்களிலும் சுமார் 44 கல்வெட்டுக்கள் உள்ளன. அவை சர்க்காரால் பிரதியெடுக்கப்பெற்றுத் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் 1890-ல் 46 முதல் 50 எண்களாகவும், 1905-ல் 58 முதல் 62 எண்களாகவும், 1915-ல் 5வது எண்ணாகவும், 1918-ல் 340 எண்ணாகவும், 1941-ல் 266 முதல் 289 எண்களாகவும், 1943-ல் 187 முதல் 195 எண்களாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவைகளின் முக்கிய செய்திகள் வருமாறு :—

கல்வெட்டுக்கள் தூய தமிழில் அகவற் பாடல்களிலும், அழகிய உரைநடைகளிலும் அமைந்துள்ளன. சில சிதைந்துள்ளன. சில திருமுகப் பட்டயங்களாக (Plates) உள்ளன. பராக்கிரம பாண்டியன், செண்பகமாறன், குலசேகர தேவர், மல்லிகார்ச்சுன ராயர், வீரபாண்டிய

தேவர், கோனேரின்மைகொண்டான், சுந்தரபாண்டியன், விசுவநாத நாயக்கரையன், திருமலை நாயக்கரையன், வீரம நாயக்கர், விக்கிரமபாண்டிய தேவர் முதலிய மன்னர்களின் காலங்களில் கோயில் வழிபாடுகளுக்கும், புறப்பாடுகளுக்கும் விளக்கெரிப்பதற்கும், சந்தனக்காப்பிற்கும், இறையிலி நிலங்களும், பொன்களும் வழங்கப்பட்டுள்ளன. ஸ்ரீ சுந்த ரேசருக்கும், மீனுட்சியம்மைக்கும் பல பெயர்கள் தமிழில் வழங்கப்பட்டுள்ளன. பெருமானுக்கு மாதேவரழகிய சொக் கனுரான சுந்தரபாண்டியச் சோழக்கோனுர் முதலிய பெயர் களும், அம்மனுக்கு திருக்காமக்கோட்டத்து ஆளுடைய நாச்சியார் என்ற பெயரும் கூறப்பெற்றுள்ளன. அரச னுக்கும், சுவாமிக்கும் சுந்தரபாண்டியன் என்ற பெயர் கூறப்பெற்றுள்ளது. அரசர்களுக்கு நம்பிள்ளை என்றும், தேவிகளுக்கு நம்பிராட்டி - உலகமுழுதுடையார் என்றும் பெயர்கள் வருகின்றன. மார்கழித் திருநாளில் திருவெம் பாவை ஓதப்பெற்றது. திருவாலவாயான் திருவீதி என்ற ஓர் வீதியில் திருவுலாப்புறம்போக (வலம்வர) 500 பொன் கொடுக்கப்பெற்றது. கடமையிறுக்குங்கோல் என்று ஓர் அளவு கருவி சொல்லப்படுகிறது. திருஅற்பிசித் திரு நோன்புக்கு நெல் கொடுக்கப்பெற்றது. திருஞான சம்பந்தர் வாது செய்த வாரணர் என்று போற்றப்படுகிருர். சந்நிதியில் மத்தளம், சேமகலம், திருச்சின்னம் முதலிய இசை வாத்தியங்கள் வாசிக்கப்பெற்று அவைகள் நடப் பதற்கு நிலங்கள் வழங்கப்பட்டன. இறையிலியாகப் பல வரிகள் நீக்கப்பெற்றன. அவ்வரிகள்—“ தறிஇறை, செக் கிறை, தட்டொலி, தட்டாரப் பாட்டம், கோழிவரி, கப்பிவரி, ஆட்டுவரி, இடையர்வரி, இனவரி, எரிமின்பாட்டம், காணிக்கை, காத்திகைப்பச்சை, மற்றும் எப்பேர்ப்பட்ட இறைகளும் முதலடங்கக் கழித்து ” என்பன. கோயில் நந்தவனம் பார்ப்போருக்கும், மற்றவர்க்கும், ஆவணித் திருநாட்களில் தினம் நூறுபேர்களாகப் பத்து நாளைக்கும்

ஆயிரம் பேர்களுக்கும் உணவிட வேண்டிய செலவுகளுக்கு நீர் நிலமும், கருஞ்செய்யும், நத்தமும், தோட்டமும் அளிக்கப் பெற்றன. நிலங்களுக்குத் திருசூலக்கல் நாட்டப்பட்டன. சாதிவரிக்கொள்கை, மயிலஞ் சந்தைத் தரகு முதலியன நீக்கப்பெற்றன. திருநடை மாளிகை செய்யவும், எழுநிலைக் கோபுரங்கள் திருப்பணி செய்யவும் நிலங்கள் தரப் பெற்றன. சதுர்வேதிமங்கலம், தேவதானம், தேவகன்மிகள் முதலிய பெயர்கள் வருகின்றன. சதுர்வேதிமங்கலம் என்பது நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்கள் வசிக்குமிடம். தேவதானம் என்பது கோயிலுக்கு விடப் பட்ட நிலம். தேவகன்மிகள்—கடவுளுக்குத் தொண்டு செய்வோர். பலமடங்கள் சொல்லப்படுகின்றன. பலவகை நைவேத்தியப் பொருள்களும் விவரிக்கப்படுகின்றன. அவை—திருமேற் பூச்சு, புழுகிணைக்காப்பு, பன்னிறக்காப்பு, திருப்பள்ளித்தாமம், உள்ளிட்டனவும், அப்பம், வடை, பிட்டு, இளநீர், தேங்காய், பழம், கரும்பு, பானகம், இலையமுது, அடைக்காயமுது (வெற்றிலைபாக்கு) நெல், அமுதுபடி, நெய்யமுது, வெல்லம், பயறு, உழுந்து, மிளகு, உப்பு, சீரகம், ஏலம், எள்ளு, சர்க்கரை, சந்தனம், கற்பூரம், களபநீர், குங்குமம், திருமாலை, திருவிளக்கு, பருமுறி முதலியன. எனவே உப்பு முதல் கற்பூரம் வரையில் உள்ள பொருள்கள் சொல்லப்பட்டுள்ளன.

முற்கால மக்களின் பக்திநிலை, வழிபாட்டுமுறை, அரசுமுறை, சமூகவழக்கங்கள் முதலியவைகளைக் கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. மாதிரிக்காகச் சில கல்வெட்டுக்கள் பின்னே காட்டப் படுகின்றன.

1. *(58—1905)* சுந்தரேஸ்வரர் கோயில் மேலக் கோபுரத்தின் வடசுவரில் உள்ளது. பராக்கிரம பாண்டியன், செண்பகமாறன்—இவர்களுடைய மெய்க் கீர்த்தியை விளக்கும் பாடல்கள் :—

வடிவைத்த வெல்வல்ல வையந்தொழ நின்றமாற முந்நாள்
படிவைத்த வுந்திப்பராக்கிரம பாண்டியன் பார்புரக்க
முடிவைத்த பின்பு பரராசர்தங்கள் முறைமை விட்டுக்
குடிவைத்த நர்வெய்ய காநிலும் வாநிலும் குன்றிலுமே.

ஆலிலைக்கு ளடங்கியமாயன் அவநி எல்லாஞ்
சேலிலடக்கிய செண்பகமாறந் தெவ்வேந்தர்தமை
வேலிலடக்கிய வையந் தொழுதென்னன் மிண்டுமுந்நைக்
காலிலடக்குவன் காண்க கடுதொழிகாற் கடலே.

2. (60—1905) சுந்தரேஸ்வரர் கோயில் கீழ்க் கோபுரத்தின் 2-வது நிலையில் நான்கு தூண்களிலும் உள்ளவை. இதில் சுந்தரபாண்டியனது மெய்க் கீர்த்தியும், அவனுடைய வீரச் செயல்களும் வர்ணிக்கப்பட்டுள்ளன.

"ஸ்வஸ்திஸ்ரீ பூமருவியதிரு மடந்தையும்
புவிமடந்தையும் புயத்திருப்ப
நாமருவிய கலைமடந்தையும் ஜயமடந்தையும் நலஞ் சிறப்பக்
கோளார்ந்த சினப்புலியும் கொடுஞ்சிலையும் குலைந் தொளிப்ப
வாளார்ந்த பொற்கிரிமேல் வரிக்கயல்கள் விளையாட
இருங்கடல் குவலையத்தின் அறம்பெருகக்
கருங்கலிகடிந்து செங்கோல் நடப்ப
ஒருகுடை நிழலில் இருநிலங்குளிர
மூவகைத் தமிழும் முறைமையில் விளங்க
நால்வகை வேதமுந்நின்று வளர
ஐவகைவேள் வியுஞ்செய்வினை இயற்ற
அறுவகைச் சமயமும் அழகுடன் திகழ
எழுவகைப் பாடலும் இயலுடன்பரவ
எண்டிசையளவுஞ் சக்கரஞ் செல்லக்
கொங்கணர் கலிங்கர் கோசலர் மாளுவர்
சிங்களர் தெலுங்கர் சினக்குச்சரர் வில்லவர்

மகதர் விக்கலர் செம்பியர் பல்லவர்
முதலியர் பார்த்திவ ரெல்லார் உறைவிடம்
அருளென் றொருவர் முன்னொருவர் முறைகண்
அணிமுடி இந்திரன் பூட்டிட
பொலங் கதிரார மார்பினிற் பொலியப்
பனிமலர்த் தாமரைத் திசைமுகன் படைத்த
மனுநெறி தழைப்ப மணிமுடிசூடிப்
பொன்னி சூழ்நாட்டுப் புலியாணை போயகலக்
கன்னி சூழ்நாட்டுக் கயலாணை கண்வளர
வெஞ்சின இவுளியும் வேழமும் பரப்பித்
தஞ்சையு முறந்தையும் செந்தழல் கொளுத்திக்
காவியு நிலமும் நின்று கவினிழப்ப
வாவியுமாறும் மணிநீர் நிலனழித்துக்
கூடமுமாமதிலுங் கொபுரமும் ஆடரங்கும்
மாடமு மாளிகையும் மண்டபமும் பலவிடத்து
தொழுது வந்தடைய.........
வீரக் கழலணிந்து விளங்கிய மணியணி
வீரசிம்மானத்து விளங்கெழுகவரி
இருமருங் கசைப்பக் கடலென முழங்குங்
களிநல்யானை வடபுலவேந்தர்
மணிப்புயம் பிரியா இலகுகுழை அரிவையர்

தொழுது நின்றேத்த உலக முழுதுடையா ரொடுவீற் றிருந் தருளிய ஸ்ரீ கோச்சக்கரவர்த்திகள் சோணாடு வழங்கியருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு பத்தாவது—நாள் நூற்றைம்பத்து மூன்றினில்...... சுந்தரபாண்டியன் மடத்து உண்ணும் தபசியர்க்கு, மடப்புற இறையிலியாக இட்ட நிலம் முக்காலும் நிக்கி நிக்கி உள்ள நிலம் எழாவது முதல் காராண்மை மியாட்சியும் அந்தராயமுள்படத் தேவதான இறை யிலியாய் இறுப்பதாக இட்டுவித்து வரியிலார் எழுத் திட்ட உள்வரியும் ஓலையும் தந்தோம் ''.........

இக் கல்வெட்டின் முற்பகுதிகள் அகவற்பாவில் அமைந்துள்ளன. சுந்தரபாண்டியன் மடத்தில் உண்ணும் தவசியர்க்காக நிலம் வழங்கப்பெற்றது.

3. *(288—1941—42)* சுந்தரேஸ்வரர்கோயில், கீழைக் கோபுரத்தின் உட்புறச் சுவரில் இடப்பக்கம் உள்ளது.

"சகாத்தம் 1545க்கு மேல் செல்லா நின்ற துந்துபி, வருஷம் ஆவணி மாதம் 1ந் தேதி அத்த நட்சத்திர மும், சத்தமியும் சவுபாக்கியை யோகமும் பெற்ற நாள் சிறிய மதுரை விசுவநாத நாயக்கர்—வீரப்ப நாயக் கரய்யனவர்கள் நிருபப்படிக்குச் சொக்கநாத சுவாமி சீபாதந்தாங்குவாற்கு நடத்தி கிராமங்களுக்கு, எழுந் தருளவும், மற்றுமுண்டான சில்லறை, ஊழிய முட்பட வேண்டாமென்று கட்டளையிட்ட படியினுலே இந்தத் தன்மம் சந்திராதித்தவரை, சந்ததிப் பிரவேச மும் நடத்திவரவும். இந்தத் தன்மத்துக்கு யாதா மொருத்தர் அகுதம் பண்ணினவர்கள் கெங்கைக் கரையிலே காராம் பசுவையும், மாதா பிதாவையும், குருவையும் கொன்ற தோஷத்திலே போகக் கடவா ராகவும். இந்தத் தன்மம், வீரப்ப நாயக்கரையன் அவர்கள் புண்ணியம்."

4. *(289—1941—42)* மீனுட்சி நாயக்கன் மண்டபத் தில் நிறுத்தியுள்ள ஓர் கல்லில் உள்ளது. காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியாருடைய தர்மங்கள் சொல்லப் பட்டுள்ளன.

"(மதுரை)—காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியா ருடைய தர்மம். சகலருக்கும் பிரசித்தமாகத் தெரியும் பொருட்டும், நிரந்தரமான ஞாபகத்தின் பொருட்டும் செய்யும் விளம்பரமாவது இறந்துபோன புண்ணிய புருஷராகிய மேற்படி பச்சையப்ப முதலியாரவர்

களாலே வைக்கப்பட்டிருக்கும் லட்சம் வராகனுக்கு (ஓர் வராகன்—3½ ரூபாய்) வரப்பட்ட வட்டிப் பணத்தில் நின்றும் மதுரையில் ஸ்ரீ மீனாட்சியம்மன் சந்நிதியில் நித்தியக் கட்டளைத் தர்மவிசாரணைக்கர்த்தர்களாக நியமிக்கப்பட்டுச் சென்னைப் பட்டணத்திலிருக்கும் இந்து சபையாரவர்களுடைய உத்தரவின்படி சாலிவாகன சகாப்தம் 1764-ம் வருஷத்துக்குச் சரியான சுபகிருது வருஷ முதல் வருஷம் க—1120 வராகன் செலவுள்ளதாக நடந்து வருகின்றது. ஷை மூலதனம் கனம்பொருந்திய சுப்பிரீம் கோர்ட்டு அதிகாரிகளுடைய உத்தரவின்படி சென்னைப் பட்டணத்திலிருக்கும் ஜெனரல் திரேசரி என்னும் கவர்ன்மெண்டாருடைய பொக்கிஷத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. ஷை தர்மம் கிரமமாக நடக்காவிட்டால் தர்மத்தில் சிரத்தையுள்ளவர்கள் ஷை சபையாரவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுவது. மேற்படி லட்சம் வராகன்போக மற்ற மிகுதிப் பணத்துக்கு வரப்பட்ட வட்டியில் அனுகூலமாகும்போது ஷை இடத்தில் இந்துப் பிள்ளைகளுக்கு இந்தத் தேசத்தில் வழங்காநின்ற விவகார சாஸ்திரங்கள் கற்பிக்கிறதற்கு மாசம் 1க்கு 10 வராகன் சம்பளத்தில் ஒரு பண்டிதரையும், இங்கிலீஷ்பாஷை கற்பிக்கிறதற்கு 5 வராகன் சம்பளத்தில் ஒரு உபாத்தியாயரையும் நியமித்து வித்தியாசாலை ஏற்படுத்தப்படும்.''

இக்கல்வெட்டு, தற்காலத்துத் தமிழ் நடையில் உள்ளது. மீனாட்சியம்மன் சந்நிதியில் நித்தியக் கட்டளைக்கும், வித்தியாசாலை ஏற்படுத்திச் சாஸ்திரங்கள் கற்பிக்கவும் மூலதனம் வைக்கப்பட்டுள்ளது. பச்சையப்ப முதலியாருடைய தருமங்கள் எல்லாக் கோயில்களிலும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

***கல்வெட்டு** : " இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்களாக சுந்தரேஸ்வரஸ்வாமி கோயிலிலும், மதனகோபால சுவாமி கோயிலிலும், கூடழலகர் கோயிலிலுமாக முப்பத்தைந்து கல்வெட்டுக்கள் உள்ளன. 17-ல் தாமர சாஸனங்கள் உள்ளன. அவற்றுள் (36 of 1908) கல்வெட்டு பெருமாள் கோயிலில் உள்ளது. 557 முதல் மூன்று கல்வெட்டுக்கள் கூடலழகர் கோயிலைப்பற்றின. செப்புப் பட்டயங்களில் 6, அந்தணர்களுக்கும் பூந்தோட்டத்துக்குமாக கிருஷ்ணப்ப நாயக்கர், ராணி ரங்கம்மாள் இவர்கள் நிலம் அளித்தமையை அறிவிக்கின்றன. 6 செப்புப் பட்டயங்கள் சேது மன்னர்கள் செய்த அறச் செயல்களை அறிவிப்பன. எனையன சுந்தரேஸ்வரர் கோயிலுக்கும் மீனுட்சியம்மை கோயிலுக்கும் செய்த பல பணிகளை அறிவிக்கின்றன. ஜடாவர்மன் குலசேகரபாண்டியன், மாறவர்மன் சுந்தரபாண்டியன், பராக்கிரமபாண்டியன், வீரபாண்டியன், ஸ்ரீ வல்லபன் முதலிய பாண்டிய மன்னர்கள் திருக்கோயிலுக்கு நிலம் அளித்ததையும், வரி தள்ளுபடி செய்ததையும், வரி வசூலித்துக்கொள்ள உரிமை அளித்ததையும் அறிவிக்கின்றன. (507 of 1907) கல்வெட்டு ஸ்ரீ வல்லபதேவன் காலத்தில் சோமசுந்தரப் பெருமானுக்கு இரு சந்தியிலும் ஏற்பித்தருள நந்தவனம் அமைத்த செய்தி அறிவிக்கப்படுகின்றது. தேவி ஏழுலகம் முழுதுடையாள் எனவும் வழங்கப்படுகிருள். கி. பி. 1572 முதல் 1595 வரை அரசாண்ட வீரப்ப நாயக்கர் கம்பத்தடி மண்டபத்தைக் கட்டினுர்.—(35 of 1908)

ஒரு செப்புப் பட்டயம் ஞானக்கூத்தரான சத்தியஞான தரிசன மடத்துக்கு நிலம்விட்டதையும், ஓர் கல்வெட்டு ஆர்த்தமடம் நந்திகேஸ்வர சந்தானம் சைவ ஆச்சார்யரான ஞானமூர்த்திக்கு மேலக்குடி நாட்டு வடகரை

*திருஞானசம்பந்தர் - முதல் திருமுறை-தருமபுரம் - ஆதீனம்.

வாரணவாசி பட்டணத்து அண்ணல் விழுப்பாதராசன் மனம் பிரியான் மடம் என ஒன்றைக்கட்டிப் பத்துமா பூமிதானம் வழங்கினுன் என்ற செய்தியையும் குறிக்கிறது. நரலோக சூரியன் திருமடம் என்றும், அன்னதான மடம் என்றும் சில மடங்களின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன.

---

## 21. புராண வரலாறுகள்

**பக்தி** மார்க்கத்தில் நின்று பரமனருளைப் பெற்ற முன்னோர் பலருடைய பழைய வரலாறுகளாகிய புராணங்கள், பின் வழியினராகிய மற்றையோரும் அவனருளைப் பெறுவதற்குச் சாதனங்களாக—வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. இனிப்புப் பொருளில் மருந்தை உள்ளடக்கித் தருவதுபோலப் பல சாஸ்திரங்களின் உண்மைகளையும், தத்துவங்களையும் உள்ளடக்கிக் கதை வடிவங்களாக ஆன்றோர்கள் புராணங்களை அமைத்தனர். அவ்வரலாறுகளைப் படிப்பதால் அவைகளில் அடங்கிய உண்மைகளைக் கைக்கொண்டு, முன்னோர்கள் சென்ற மார்க்கங்களில் பிறரும் சென்று வழிபடுவதற்குப் புராணங்கள் உதவுகின்றன.

மதுரைத்தலத்தின் பெருமைகள், வடமொழியில் உள்ள ஆலாஸ்யமான்மியம், நீபவனமான்மியம் முதலிய நூல்களிலும், தமிழில் உள்ள திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், கடம்பவனப்புராணம், சுந்தரபாண்டியம், பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடற்புராணம் முதலிய நூல்களிலும், மற்ற பிரபந்தங்களிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சிவபெருமான் நடித்த 64 திருவிளையாடல்களைக் கதைவடிவாக அகத்தியமுனிவர், மற்ற முனிவர்களுக்குக் கூறியனவாக உள்ளன. 64 திருவிளையாடல்களைத் தொகுப்பாகக்கொண்ட ஓர் பாடல் பின்னே

சேர்க்கப் பெற்றுள்ளது. திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பாவிலும் திருவிளையாடற் கதைகள் தொகுப்பாகக் கூறப்பெற்றுள்ளன. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்துக்கும், பரஞ்சோதியார் திருவிளையாடலுக்கும் சில வேற்றுமைகள் காணப்படுகின்றன. பழய திருவிளையாடற் புராணத்திலுள்ள மூர்த்தியார்க்கு அரசளித்த திருவிளையாடல், காரியார் நாரியார் பாப்பகுந்த திருவிளையாடல், புலிமுலை புல்வாய்க்கருளின திருவிளையாடல் முதலிய கதைகள் பரஞ்சோதியார் புராணத்தில் காணப்படவில்லை என்று பழய திருவிளையாடல் முகவுரையில் கூறப்படுகிறது. புலிமுலை புல்வாய்க்கருளின சிற்பம் புதுமண்டபத் தூணிலும், திருப்பரங்குன்றத்திலும் உள்ளது.

64 திருவிளையாடற் கதைகளில் பிட்டுக்கு மண் சுமந்தது, நாரைக்கு முத்திகொடுத்தது, எல்லாம்வல்ல சித்தரானது, கல்லானைக்குக் கரும்பருத்தியது, வன்னியுங் கிணறும் லிங்கமும் அழைத்தது, கால்மாறியாடினது, அங்கம் வெட்டியது, தடாதகைப் பிராட்டியார் திருஅவதாரம், பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்தது, புலிமுலை புல்வாய்க்கருளியது, கரிக்குருவிக்கு உபதேசித்தது முதலிய திருவிளையாடல்களின் கதைகள், இந்நூல் சிற்பப்பகுதியில் சுருக்கமாய்க் கூறப்பெற்றுள்ளன. வேறு சில ***முக்கிய வரலாறுகள்** சுருக்கமாகக் கூறப்படும்.

பழய திருவிளையாடலில்வரும் 64 திருவிளையாடல்களைத் தொகுத்துக் கூறும் பாடல் :—

உண்மையின் உணர்ந்த உறுபொருள் அன்பர்
கண்ணினுள் நிறைந்த காட்சியை உரைப்பின்
இந்திரன் பழிதீர்த்து இபத்தினுக் கருளி
வந்து மும்முலைத் தடாதகை பிறந்துழி

இதம்பெற மணஞ்செய்து இறையா னதுவும்
பதஞ்சலி முனிக்குப் பர நட நடித்ததும்
நீறணி பூதம் நிறையா துண்டதற்கு
ஆறழைத் ததும்உயர் அலைகடல் அழைத்ததும்
சக்கர மலயத் துவசனை யழைத்ததும்
உக்கி ரப்பெரு வழுதி பிறந்ததும்
கூனல் வளைவேல் செண்டு கொடுத்ததும்
நான்மா டத்திருக் கூட லானதும்
எல்லாம் வல்ல சித்த ரானதும்
கல்லாம் யானை கரும்புவாங் கியதும்
சங்கப் பலகை தனையளித் ததுவும்
ஆங்கம் பொற்கிழி தொடர்ந்தறுத் ததுவும்
மறுவறு கீரனை வண்கரை யேற்றிக்
குறுமுனிக் குத்தமிழ் கூறி யீந்ததும்
உண்மை நற்றமிழ் ஊமை யறிந்ததும்
பண்புடன் இடைக்கா டன்பின் போனதும்
அலைகடல் சுவற அயில்வேல் எறிந்ததும்
வலைவீ சியதும் வளையல்விற் றதுவும்
ஏனுறும் இடப இலச்சினை யிட்டதும்
மாணிக்கம் விற்றதும் வல்லிபம் எய்ததும்
உரிய ஞானம் உபதே சித்ததும்
நரிபரி யானதும் பரிநரி யானதும்
வருத்த மின்றி மண்சுமந் தருளி
விருத்த குமார பாலரா னதுவும்
பதமா றியதும் பழியஞ் சியதும்
அதிபா தகந்தீர்த்து அங்கம் வெட்டியதும்
மதுரை யானதும் வன்சுரந் தீர்த்ததும்
கதியில் அமணர் கழுவே றியதும்
விலகா தரசன்முன் மெய்க்காட் டிட்டதும்
உலவாக் கிழிகொடுத் துயர்வழக் குரைத்ததும்
அட்டமா சித்தி யருளிய அதுவும்
இட்டமாய்த் தண்ணீர்ப் பந்தர்வைத் திருந்ததும்
முன்னமிந் திரன்முடி மிசைவளை எறிந்ததும்

பொன்னனை யாளுக் கருளது புரிந்ததும்
வெருவாச் சோழனை ஆழியில் வீழ்த்தித்
திருவால வாயெனச் செப்பிய செயலும்
வரகுணன் தனக்குச் சிவலோ கத்தினை
விரைவினிற் காட்டி விடைக்குறி எய்ததும்
ஊற்றமிக் குலவாக் கோட்டை வைத்ததும்
மூர்த்தி யார்க்கு முதலர சளித்ததும்
காரியார் நாரியார் கவின்பாப் பகுந்ததும்
வார்புலி முலைபுல் வாய்க்கரு ளியதும்
சாரமா இசைச்சா தாரிபா டியதும்
சேரமா னுக்குத் திருமுகங் கொடுத்ததும்
பலகை யிட்டதும் பாட்டிசை வென்றதும்
தலமிசைப் பன்றித் தாயா யருளிக்
கானக் கரிக்குரு விக்கரு ளியதும்
மீனக் கொடிபொன் மேருவிற் பொறித்ததும்
சாட்சி யழைத்ததும் தரைவியந் தருளி
ஆட்சி நாரைக் கரும்பத மளித்ததும்
வேதம் கரைகண் டருளிய வீறுமா
நாதனெண் ணெண்திரு நடன நடித்தே
தெள்ளிய தில்லைச் சிற்றம் பலத்தும்
வெள்ளியம் பலத்தும் வியன்மா வனத்தன்
அமிர்தமெய் வடிவாய் அருளிய பெருமை
நமர்களே அலது நவிலுவ தரிதே.

—திருவுசாத்தான நான்மணிமாலை

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் கூறப்படும் கதைகள் :—

### 1. மதுரைக்காண்டம்

1 இந்திரன் பழிதீர்த்த படலம். 2 வெள்ளை யானை சாபந்தீர்த்தது. 3 திருநகரங் கண்டது. 4 தடாதகைப் பிராட்டியார் திருஅவதாரம். 5 திருமணப் படலம். 6 வெள் ளியம்பலத் திருக்கூத்தாடியது. 7 குண்டோதரனுக்குஅன்ன

மிட்டது. 8 அன்னக் குழியும் வைகையும் அழைத்தது. 9 எழுகடல் அழைத்தது. 10 மலயத்துவசனை அழைத்தது. 11 உக்கிரபாண்டியன் திரு அவதாரம். 12 உக்கிர பாண்டியனுக்கு வேல் வளைசெண்டு கொடுத்தது. 13 கடல்சுவற வேல்விட்டது. 14 இந்திரன் முடிமேல் வளை எறிந்தது. 15 மேருவைச் செண்டால் அடித்தது. 16 வேதத்துக்குப் பொருள் அருளிச்செய்தது. 17 மாணிக்கம் விற்றது. 18 வருணன்விட்ட கடலை வற்றச்செய்தது.

## 2. கூடற்காண்டம்

19 நான்மாடக் கூடலானது. 20 எல்லாம் வல்ல சித்தரானது. 21 கல்லானைக்குக் கரும்பருத்தியது. 22 யானையெய்தது. 23 விருத்த குமார பாலரானது. 24 கால்மாறியாடினது. 25 பழியஞ்சினது. 26 மாபாதகந் தீர்த்தது. 27 அங்கம் வெட்டினது. 28 நாகம் எய்தது. 29 மாயப்பசுவை வதைத்தது. 30 மெய்க்காட்டிட்டது. 31 உலவாக்கிழி அருளியது. 32 வளையல் விற்றது. 33 அட்டமாசித்தி உபதேசித்தது. 34 விடையிலச்சினையிட்டது. 35 தண்ணீர்ப் பந்தல் வைத்தது. 36 இரசவாதஞ் செய்தது. 37 சோழனைமடுவில் வீட்டியது. 38 உலவாக்கோட்டை அருளியது. 39 மாமனாக வந்து வழக்குரைத்தது. 40 வரகுணனுக்குச் சிவலோகங் காட்டியது. 41 விறகு விற்றது. 42 திருமுகங்கொடுத்தது. 43 பலகையிட்டது. 44 இசைவாது வென்றது. 45 பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்தது. 46 பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியது. 47 கரிக்குருவிக்கு உபதேசஞ்செய்தது. 48 நாரைக்கு முத்தி கொடுத்தது.

## 3. திருவாலவாய்க் காண்டம்

49 திருவாலவாயானது. 50 சுந்தரப்பேரம் பெய்தது. 51 சங்கப் பலகை கொடுத்தது. 52 தருமிக்குப் பொற்கிழி

யளித்தது. 53 கீரனைக் கரையேற்றியது. 54 கீரனுக்கு இலக்கணம் உபதேசித்தது. 55 சங்கத்தார் கலகந் தீர்த்தது. 56 இடைக்காடன் பிணக்குத் தீர்த்தது. 57 வலை வீசியது. 58 வாதவூரடிகளுக்கு உபதேசித்தது. 59 நரி பரியாக்கியது. 60 பரிநரியாக்கி வையை அழைத்தது. 61 மண்சுமந்தது. 62 பாண்டியன் சுரந்தீர்த்தது. 63 சமணரைக் கழுவேற்றியது. 64 வன்னியுங் கிணறும் லிங்கமும் அழைத்தது.

## *முக்கிய வரலாறுகள்

### 1. இந்திரன் வழிபட்டது

தேவலோகத்திற்குத் தலைவனான இந்திரன், விசுவ ரூபன் என்பவனையும் விருத்திராசுரனையும் கொன்றதால் அவனைப் பிரமகத்திதோஷம் (கொலைப்பாவம்) பற்றிக் கொண்டது. இந்திரன் அப்பாவத்தைப் போக்கிக்கொள்ளத் தனது குருவான வியாழ பகவானின் உபதேசப்படிப் பல தலங்களுக்கும் யாத்திரை செய்தான். கேதாரம், காசி, காஞ்சி முதலிய சிவத்தலங்களைத் தரிசித்து கடம்பவன மாகிய மதுரையை அடைந்தான். அப்போது அவனைப் பற்றியிருந்த பிரமகத்தி நீங்கியது. அவ்விடத்தில் ஓர் கடம்பமரத்தினடியில் ஒளிப்பிழம்பாய் முளைத்த சிவலிங் கத்தைக் கண்டான். " கருவாகி முளைத்தெழுந்த சிவக் கொழுந்தை ஆயிரங் கண்ணுங் களிப்பக் கண்டான்.''

இந்திரன் தேவதச்சனை அழைத்து ஓர் விமானம் அமைக்க ஏவினான். அப்போது சூரியமண்டலம்போல் ஓர் விமானம் விண்ணினின்றும் இறங்கி வந்தது. எட்டு யானைகளும், முப்பத்திரண்டு சிங்கங்களும், 64 சிவகணங் களும் தாங்கப்பெற்று, தேவதச்சனால் ஆக்கப்பெற்ற அவ் விமானத்தைப் பெருமானுக்கு நிழலாக அமைத்தான். இது இந்திர விமானம் எனப்படும். பொற்றாமரைக் குளத்தில்

நீராடிப் பொற்றாமரை மலர்களைப் பறித்து வந்து பெருமானை வழிபட்டான். திருமஞ்சனம், தூபம், தீபம், பஞ்சகவ்வியம், திருவமுது முதலிய பொருள்களைக் கொண்டு பெருமானைச் சிவாகமப்படி அன்பு பெருகப் பூசைசெய்து வணங்கிப் போற்றலானான்.

" அங்கண போற்றிவாய்மை ஆரணாபோற்றி நாக
கங்கணாபோற்றி மூலகாரணாபோற்றி நெற்றிச்
செங்கணாபோற்றி ஆதிசிவ பரஞ்சுடரே போற்றி
எங்கணாயகனே போற்றி ஈறிலாமுதலே போற்றி.

" யாவையும் படைப்பாய் போற்றி யாவையும் துடைப்பாய்போற்றி
யாவையும் ஆனாய்போற்றி யாவையும் அல்லாய் போற்றி
யாவையும் அறிந்தாய்போற்றி யாவையும் மறந்தாய்போற்றி
யாவையும் புணர்ந்தாய்போற்றி யாவையும் பிரிந்தாய்போற்றி "
—பரஞ்சோதியார்

இவ்வாறு வழிபட்ட இந்திரனுக்குப் பெருமான், ஆண்டு தோறும் சித்திரைப் பூரணையில் வந்து பூசிக்கும்படிக் கூறிப் பல வரங்களை அருளினார். இந்திரன் பிரியா விடை பெற்றுப் பொன்னுலகடைந்து சோமசுந்தரக் கடவுளை மறவாத சிந்தையுடன் ஆட்சிபுரிந்து வந்தான்.

## 2. மீனாட்சியம்மை திருமணம்

மலையத்துவச பாண்டியன், மனைவி காஞ்சனமாலை இருவருக்கும் மகப்பேறு இல்லாமையால் புத்திரகாமேட்டியாகம் செய்தனர். அப்போது உமாதேவி மூன்று தனங்களையுடைய ஓர் பெண் குழந்தையாக வேள்விக்குண்டத்தினின்றும் தோன்றினாள். குழந்தையின் தோற்றத்தைக்கண்டு அரசன் வருந்தும்போது பெருமான் அசரீரியாக ' இக் குழந்தைக்குக் கணவன் வரும்போது ஓர் தனம் மறையும் ' என்று கூறினார். பெருமான் கட்டளைப்படி குழந்தைக்குத் தடாதகை எனப் பெயரிடப்பட்டது. குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. வில்

வாள் முதலிய கலைகளில் சிறந்து விளங்கினுள். பின்பு மலையத்துவசன் விண்ணுலகடையவே தடாதகை அரசு முறை வழுவாதபடி செங்கோல் செலுத்திவந்தாள். கன்னி யாண்டதால் கன்னிநாடு எனப் பெயர் பெற்றது.

தடாதகை மணப்பருவத்தை அடைந்தாள். நால் வகைப் படைகளுடன் புறப்பட்டுச்சென்று திக்குவிசயஞ் செய்து வென்றுள். இறுதியாகத் திருக்கைலாயத்தை அடைந்து சிவகணங்களுடன் சிவபெருமானையும் கண் டாள். கண்டவுடன் மூன்று தனங்களில் ஒன்று மறைந்தது. தடாதகை நாணங்கொண்டு நின்றுள். முன் அறிவித்தபடி பெருமானே கணவன் என்பது புலப்பட்டது. திருமணத் துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வீதிகளும் வீடுகளும் அலங்கரிக்கப்பட்டன. திருமால் முதலிய தேவர்களும் முனிவர்களும் வந்திருந்தார்கள்.

திருமணத்துக்குரிய நல்வேளையில் முரசங்கள் ஒலித் தன. சங்குகள் முழங்கின. சிவபெருமானுக்குப் பக்கத்தில் தடாதகை வீற்றிருந்தது, கற்பகத்தருவில் மலர்ந்த பூங் கொடிபோல் இருந்தது. மேலும் இருவருடைய காட்சி பண்ணும் இசையும், நீரும் தண்மையும், பாலும் சுவையும், மலரும் மணமும், மணியும் ஒளியும் வெவ்வேறு வடிவு கொண்டிருந்த தன்மையைப் போன்றிருந்தது.

> " பண்ணுமின் னிசையும் நீரும் தண்மையும் பாலும் பாலில்
> நண்ணுமின் சுவையும் பூவும் நாற்றமும் மணியும் அங்கேழ்
> வண்ணமும் வேறு வேறு வடிவுகொண் டிருந்தா லொத்தது
> அண்ணலும் உலகம் ஈன்ற அம்மையும் இருந்ததம்மா "
>
> —பரஞ்சோதியார்

மணமக்களின் கோலத்தைக் கண்ட மங்கையர்கள் மணமக் களைப் பலவாறு புகழ்ந்து பேசினர்.

திருமணச் சடங்குகள் நிறைவேறின. பிரமதேவன் உடனிருந்து நடத்தினுன். சிவபெருமான் திருமங்கல நாணைப் பிராட்டியாருக்குச் சூட்டினுர். எல்லோரும் கண்

பெற்ற பயனைப்பெற்றனர். பங்குனி உத்திர நாளில் திருமணம் நடந்ததாகக் கூறுவர். தடாதகைப் பிராட்டியே மீனாட்சியம்மையாக விளங்குகிறார். பெருமான் திருமணஞ் செய்தருளியது பெருமான் போகியாய் இருந்து உயிர்களுக்குப் போகத்தை அருளுவதை நினைப்பூட்டும்.

பின்பு சிவபெருமான் தாம் உலகில் அரசு நடத்திக் காட்டத் திருவுளங்கொள்ள, இடபக்கொடி மீன்கொடி ஆகியது. பாம்புகள் அணிகளாயின. கொன்றைமாலை வேப்பம்பூமாலை யாகியது. புலித்தோல் பீதாம்பரமாகியது. சந்திரன்முடி வயிரமுடியானது. சோமசுந்தரர், சுந்தர பாண்டியனாய்க் கோலங்கொண்டு விளங்கினார். சிவகணங்கள் மானுடவடிவு கொண்டனர்.

பாண்டியர் கோலம்பூண்ட சுந்தரப்பெருமான் மக்களுக்குஅரசனாகவும், பகைவர்களுக்குச் சிங்கமாகவும், உலக இன்பங்களை வெறுத்த ஞானிகளுக்கு முழுமுதலாகவும் விளங்கினார்.

## 3. மூர்த்தி நாயனார்

பாண்டி நாட்டில் மதுரையில் வைசியர் குலத்தில் மூர்த்திநாயனார் என்பவர், தினந்தோறும் சோமசுந்தரப் பெருமானுக்குச் சந்தனக் காப்பிடச் சந்தனம் அரைத்துக் கொடுத்து வந்தார். கருநாடக தேசத்து மன்னன் பாண்டியனைவென்று நாட்டைக் கைப்பற்றினான். அவன் சமண சமயத்தைச் சார்ந்தவன். நாட்டுமக்களையும் சமண சமயத்தைச் சாரும்படி எண்ணினான். மூர்த்திநாயனாரையும் அவ்வழியில் திருப்ப எண்ணி அவருக்குச் சந்தனக் கட்டைகள் கிடைக்காதபடி செய்தான். நாயனார் கோயிலுக்குச்சென்று பெருமானிடம் "பெருமானே, சந்தனக் கட்டைக்கு முட்டுவந்தாலும் கைக் கட்டைக்கு முட்டில்லை" என்று சொல்லி வட்டந்திகழ் பாறையில் தமது முழங்கையை வைத்து உள்ளெலும்பு கரையும் வரையில்

தேய்த்தார். இதைச் சேக்கிழார், "வட்டந்திகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார், கட்டும் புறந்தோல் நரம் பென்பு கரைந்து தேய" என்று காட்டுகிறார். பெருமான் அசரீரியாக, "உனக்குத் துன்பம் விளைவித்த மன்னன் அழிவான், நீயே நாட்டின் அரசனாய் வந்து சைவ சமயத்தை வளர்ப்பாயாக" என்று சொல்லி யருளினார். தேய்த்த கையும் வளர்ந்தது. அரசனும் இறந்தான். அரசனுக்குப் புதல்வனில்லாமையால், அமைச்சர்கள் புதிய அரசனைத் தேர்ந்தெடுக்க ஓர் யானையைக் கண்ணைக்கட்டி அனுப்பினர். அது பெருமான் சந்நிதியில் இருந்த மூர்த்தி நாயனாரைத் தேர்ந்தெடுத்து, அவரை முதுகின்மேல் வைத்து வந்தது. அமைச்சர்கள் அவரைச் சிங்காதனத்தில் இருத்தி முடிசூட்டினார்கள். நாயனார் திருநீறே அபிஷேகப் பொருளாகவும், உருத்திராட்சமே ஆபரணமாகவும், சடைமுடியே கிரீடமாகவும்கொண்டு நெடுங்காலம் அரசாண்டு சைவ சமயத்தை வளர்த்து முத்தியடைந்தார். விபூதி, ருத்திராட்சம், சடைமுடி ஆகிய மூன்றையும் சாதனமாகக் கொண்டு அரசாண்டதால் "மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்" என்று சுந்தரமூர்த்திகளால் போற்றப்பட்டார். ஆடிக் கார்த்திகை நாள் இவருடைய திருநட்சத்திர தினமாகும்.

மூர்த்திநாயனார் தமது முழங்கையை வைத்துத் தேய்த்த **வட்டந்திகழ் பாறை** அம்மன் கோயில் சுற்றில் வடகிழக்கு மூலையில் புதிதாய் அமைக்கப்பட்டுள்ள வாயிலுக்கு அடுத்துள்ள மண்டபத்தில் இருப்பதைக் காணலாம்.

"மம்மர்சேர் சமணர்க்காய்ந்து வைதிக நெறிவிளக்கி
வெம்மைசேர் தெவ்வைமாதர் விருப்பை ஐம்புலனைவென்று
செம்மையின் ஊழி வாழ்ந்து சிவனுலகத் தடைந்த
மும்மையா லுலகையாண்ட மூர்த்தியை வாழ்த்தல்செய்வாம்"

—பழய திருவிளையாடல்

" மதுரைவணிகக் குலத்தின் மன்னுமெழில் மூர்த்தி
மதியில் சமணரசு மாழ்க—விதுவணிந்த
அம்மாற்குச் சந்தங் கரிதாய் முன்கையரைத்து
மும்மையுல காண்டுற்றூர் முன்பு "

—பெரியபுராண சாரவெண்பா

" அவந்திரிகுண் டமணுவதின் மாள்வன் என்றன்றுலவாய்ச்
சிவன்திரு மேனிக்குச் செஞ்சந்தனமாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பாறையில் தேய்த்துலகாண்ட ஒண்மூர்த்திதன்
நிவந்தபொன் மாடமதுராபுரி என்னும் நீள்பதியே" [னூர்

—நம்பியாண்டார் நம்பி

## 4. திருஞானசம்பந்தரும், அனல்புனல் வாதங்களும்

பாண்டிநாட்டில் பாண்டிய மன்னன் சமண சமயத்தை மேற்கொண்டதால் நாட்டில் சமண சமயம் மேலோங்கிப் பல இடங்களிலும் சமணர் பாழிகளும் பள்ளிகளும் மிகுந்து விளங்கின. ஆனல் பாண்டிமாதேவியாகிய மங்கையர்க் கரசியாரும், அமைச்சராகிய குலச்சிறையாரும் சைவ சமய நெறியிற் சென்று, நாட்டிற்கு ஏற்பட்ட தீங்கை எண்ணி வருந்துவாராயினர். பாண்டிமாதேவியார், ஞானசம்பந்தரிடம் மிக்க அன்புடையவர். அவர் சரிதையைக் கேட்டவுடன் பால்சுரக்கும் பான்மையர். " நின்நிலே விளம்பக் கொங்கை சுரந்த அருட்கோமகள் " என்று போற்றப் பட்டவர்.

அப்போது திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமறைக் காட்டுக்கு எழுந்தருளி வேதங்களால் திருக் காப்புச்செய்து மூடப்பட்டிருந்த திருக்கதவை இருவரும் பதிகம் பாடித் திறக்கவும் மூடவும் செய்து அவ்விடத்தில் தங்கியிருந்தார்கள். இதைப் பாண்டிமாதேவியாரும் அமைச்சரும் கேள்வியுற்றுத் தமது பரிசனங்களே அழைத்துக் காழிவேந்தரிடம் சென்று நாட்டின் நிலேயை அறிவித்துவரும்படி அனுப்பி வைத்தனர். அவர்கள் அவ்

வாறே மறைக்காட்டிற்குச் சென்று ஞானசம்பந்தரைக் கண்டு வணங்கிப் பாண்டிநாடு சமண சமயத்தில ஆழ்ந் திருப்பதையும், தேவியாரும் அமைச்சரும் தங்களை அனுப் பியதையும் கூறினர்கள். திருஞானசம்பந்தரும் அவைகளைக் கேட்டுப் பாண்டி நாட்டிற்குப் புறப்பட எண்ணங் கொண்டார்.

திருஞானசம்பந்தர் பல தலங்களை வணங்கிப் பதிகங் கள் பாடித் தொண்டர்களுடன் மதுரை எல்லையை அடைந்தார். தேவியாரின் திருவுள்ளப்படி குலச்சிறையார் காழிவேந்தரைக் கண்டு வணங்கிப் போற்றி அவரை எதிர் கொண்டு அழைக்கும்படி தேவியார் தம்மை அனுப்பியதை யும் கூறினர்.

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப்பெற்ற பேறிதனல்
எற்றைக்குந் திருவரு ளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்தியநாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்ரெளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்"

—பெரியபுராணம்

திருஞானசம்பந்தர் திருவாலவாய்ப் பதியை நோக்கிப் பதிகம் தொடங்கிப், பதிகத்தில் மங்கையர்க்கரசியார், குலச் சிறையார் இருவரின் தொண்டுகளையும் சிறப்பித்துப் பாடினர். பிறகு கோயிலுக்குச் சென்று வலம்வந்து வணங் கினர். அப்போது பாண்டிமாதேவியாரும் காழிவேந்தரை வணங்கினர். காழிவேந்தர் அவருக்கு அருள் செய்து தொண்டர்களுடன் ஓர் திருமடத்தில் அமர்ந்தருளினர். இதையறிந்த சமணர்கள் அவர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர். அரசனது கொடுங்கோலே இதன் காரணம் என்றறிந்து சம்பந்தர் 'செய்யனே' என்ற பதிகம்

பாடினர். சமணர் வைத்த வெந்தழல் வெப்பு நோயாகிப் பாண்டியனைப் பற்றிக்கொண்டது. சமணர்கள் வெப்பு நோயைப் போக்க முயன்றும் பயனில்லாமற் போயிற்று.

பின்பு தேவியார் அறிவித்தபடி பாண்டியன் ஞானசம்பந்தரை அழைக்க, அவர் 'மந்திரமாவது நீறு' என்னும் திருப்பதிகம்பாடி வெப்பு நோயைத் தணித்தார். வலப்புறத்தில் குளிர்ந்து இடப்பக்கம் மிகுந்தது. காழி வேந்தர் பாண்டியன் வேண்டுகோளின்படி இடப்புறத்து வெப்பையும் நீக்கினர். இது சுரவாதமாகும்.

பின்பு சமணர்கள் தீயிலும் நீரிலும் வாதம்செய்து வெற்றிபெற விரும்பினர். சம்பந்தர் "போகமார்த்த பூண் முலையாள்" என்னும் நள்ளாற்றுப் பதிகம் எழுதப்பெற்ற ஏட்டினை எல்லோருங்காணத் தீயில் இட்டார். சிவபெருமானையே மெய்ப்பொருளாகக்கொண்ட அவ்வேடு தீயில் வேகாமல் பச்சையாய் விளங்கிற்று. சமணர்கள் தங்கள் சமய உண்மைப் பொருளை ஏட்டில் எழுதித் தீயில் இட்டனர். தீயில் பஞ்சு பட்டழிவதுபோல எரிந்து போயிற்று. அனல் வாதத்திலும் சமணர் தோற்றனர்.

மூன்றுவதாகப் புனல் வாதத்தில் சமணர்கள் 'அத்தி நாத்தி' என்று எழுதப்பட்ட ஏட்டை வைகை நதியில் இட்டனர். அதனை ஆற்றுநீர் அடித்துக்கொண்டு கடலை நோக்கிச் சென்றது. ஞானசம்பந்தர் 'வாழ்க அந்தணர்' என்னும் பதிகம் எழுதப்பெற்ற ஏட்டை வைகையில் விட்டார். பிறவியாற்றில் மாதவர் மனம் எதிர்த்துச் செல்வது போல் அவ்வேடு ஆற்றை எதிர்த்துச்சென்று ஓரிடத்தில் தங்கியது. ஏடுகிடைத்த இடம் திருஏடகமாகும். இப்பதிகத்தில் வேந்தனும் ஓங்குக என்றதால் பாண்டியனுடைய கூனும் நிமிர்ந்தது. முன்னர் கூன் இருந்ததால் கூன்பாண்டியன் என்றும், கூன் நிமிர்ந்ததால் நெடுமாறன் என்றும் பெயர்கள் வழங்கின.

திருஞானசம்பந்தர் மூன்று வாதங்களிலும் வெற்றி பெற்றதால் வாது செய்த வாரணம் என்ற பெயரும் வழங்கும். சமணர்களும் தாங்கள் கூறியபடி கழுவேறினர். அரசனும் சைவனுனன். நாட்டில் சைவ சமயம் தழைத் தோங்கியது. மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும், நின்றசீர் நெடுமாறனும், 63 நாயன்மார்கள் வரிசையில் சேரும்படியான பேற்றைப்பெற்ருர்கள்.

திருஞானசம்பந்தர் திருவாலவாய்ப் பெருமானைப் போற்றிப் பாண்டி நாட்டுத் தலங்களை வணங்கிச் சோழ நாடு சென்ருர்.

திருஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடம் திருஞான சம்பந்தர் ஆதீனத் திருமடமாகத் தெற்கு ஆவணிமூல வீதியில் உள்ளது. தற்போது 291-வது பட்டமாக **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்** ஆதீனத் தலைவராய் இருந்து சமயத் தொண் டாற்றி வருகிருர்கள்.

## 5. திருவாதவூரர்

தமிழளிக்கும் தண் பாண்டிநாட்டில், வைகை நதிக் கரையிலுள்ள திருவாதவூரில் அமாத்தியர் குலத்தில் திருவாதவூரர் தோன்றினர். இளமையில் எல்லாக்கலைகளை யும் கற்று விளங்குங்கால், அரிமர்த்தன பாண்டியன் இவரது பெருமையைக் கேள்வியுற்று இவரை முதல் மந்திரியாக்கித் தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தையும் அளித்தான். மந்திரித்தன்மை பெற்ற வாதவூரர் சிவஞானம் தரவல்ல நல்லாசிரியனை எதிர்பார்த்து வந்தார்.

கீழ்க் கடற்கரையில் நல்ல குதிரைகள் விற்பனைக்கு வந்திருப்பதை அறிந்த அரசன் மிகுந்த பொருளை வாத ஊரரிடம் கொடுத்துக் குதிரைகள் வாங்கிவரும்படி அனுப் பினன். வாதவூரர் திருப்பெருந்துறையை அடைந்தார். அங்கு சிவபெருமான் வாதவூரருக்கு ஞானேபதேசம் செய்ய

உளங்கொண்டு சிவயோகியாராகப் பல சீடர்களுடன் குருந்த மரத்தடியில் வீற்றிருந்தார். இக் காட்சியைக் கண்ட வாதவூரர் குருமூர்த்தியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தம்மை ஆட்கொள்ள வேண்டினர். சிவபெருமான் ஞானக்கண்ணல் அவருடைய மும்மலங்களையும் போக்கித் திருவடியைச்சூட்டி ஐந்தெழுத்தை உபதேசித்தார்.

வாதவூரர் மெய்ஞ்ஞான வடிவினராய் தேனும் பாலும், அமுதமுமாய்த் தித்தித்து அகத்தில் தோன்றிய அருள் ஒளியை உணர்ந்து பரம்பொருளைத் துதிக்கலாயினர். பழுதில்லாத சொற்களை வரிசைப்படுத்தி அன்புவடத்தில் முறையாகக் கோத்த பாமாலையை அழுதுசாத்தும் அன்பருக்கு மாணிக்கவாசகன் என்ற பெயரைக் கொடுத்தார்.

" பழுதிலாத சொல்மணியினைப் பத்தி செய்தன்பு
முழுதுமாகிய வடத்திஞல் முறைதொடுத் தலங்கல்
அழுது சாத்து மெய்யன்பருக்கக மகிழ்ந்தையர்
வழுவிலாதபேர் மாணிக்க வாசகன் என்ருர் "

—பரஞ்சோதியார்

மாணிக்கவாசகர் தம்முடன் வந்த பரிசனங்களை அனுப்பிவிட்டு, குதிரை வாங்கக் கொண்டுவந்த பொருளைக் கோயில் திருப்பணிக்கும் பூசனைக்கும், திருவிழாக்களுக்கும் செலவு செய்து திருப்பெருந்துறையில் தங்கியிருந்தார்.

இவைகளை அறிந்த பாண்டியன் உடனே புறப்பட்டு வரும்படி திருமுகம் அனுப்பினன். மாணிக்கவாசகர் இறைவனை வேண்ட, இறைவன் " ஆவணிமூலத்தில் குதிரைகள் வரும். முன்னே செல்க " என்று கட்டளை யிட்டார். பெருமான் ஓர் மாணிக்கத்தையும் கொடுத்தார் என்று வாதவூர்ப் புராணம் கூறும். மாணிக்கவாசகர் அரசனிடம் சென்று ஆவணிமூலத்தில் குதிரைகள் வருவதைப் பற்றிக் கூறினர். குறித்த காலத்தில் குதிரைகள் வராமையைக் கண்டு பாண்டியன் மாணிக்கவாசகரைத் துன்புறுத்தினன்.

பெருமான் நரிகளைக் குதிரைகளாக்கித் தாம் குதிரைச் சேவகனுக அவைகளை நடத்திக்கொண்டு பாண்டியனிடம் விடுத்துச் சென்ருர். அன்றிரவே அவை மீண்டும் நரி களாயின.

பாண்டியன் மீண்டும் மாணிக்கவாசகரைத் தண்ட லாளர்களைக்கொண்டு தண்டிக்கச் செய்தான். அவர்கள் கடும் வெயிலில் நிறுத்தியும், அவரைப் பலவாறு புடைத்தும் துன்புறுத்திஞர்கள். இறைவன் கருணையால் வைகையில் பெருவெள்ளம் வந்து கரைகளை உடைத்து நகருக்குள் புகுந்தது.

அரசன் மந்திரிகளை அழைத்து வைகையின் வெள் ளத்தை ஆங்காங்குள்ள குடிகளைக்கொண்டு கரைகளை அடைக்கும்படி கட்டளையிட்டான்.

எல்லா உடைப்புக்களும் அடைபட்டன. வந்தி என் பவளின் கரை மட்டும் அடைபடவில்லை. சோமசுந்தரப் பெருமானே அவளுக்கு வேலையாளாக வந்து பிட்டை யுண்டு வேலை செய்யாமல் இருந்தார். வந்தியின் வேலை ஆள் வேலை செய்யாமலிருப்பதை அரசன் கண்டு வேலை யாளின் முதுகில் பொற்பிரம்பால் அடிக்கவே, எல்லா உயிர்கள் மேலும் அடிபட்டது. எங்கும் நிறைந்த பெரு மான் கூடை மண்ணை உடைப்பில் கொட்டி மறைந் தருளினர். பெருமான் அரசனுக்கு மாணிக்கவாசகரின் பெருமைகளையும், அவருக்காகச் செய்த திருவிளையாடல் களையும் அசரீரியாகக் கூறினர். பாண்டியன் மாணிக்க வாசகரை வணங்கித் தன்னை மன்னிக்க வேண்டினன். மாணிக்கவாசகர் அரசனுக்குப் பல நல்லுரைகளைக் கூறி விடைபெற்றுப் பல தலங்களை வணங்கிச் சிதம்பரம் சென்று தில்லைத் திருக்கூத்தனை வணங்கி ஓரிடத்தில் வசித்து வந்தார்.

சிவனடியார்களில் ஒருசிலர் செயற்கரிய செயல்களைச் செய்து தொண்டர்களாயினர். ஆனல் மாணிக்கவாசகரின்

பொருட்டுப் பெருமான் சில திருவிளையாடல்களைச் செய்து காட்டித் தொண்டராக்கிக் கொண்டார்.

" வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரை மாநகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழில் மேனியில் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன் "
—நால்வர் நான்மணிமாலை

## 6. குமர குருபரர்

பாண்டி நாட்டில் தாமிரபரணி நதியின் வடகரையில், ஸ்ரீ வைகுண்டத்துக்கு வடபுறத்தில் உள்ள கைலாசபுரத்தில், சைவவேளாள குலத்தில் சண்முக சிகாமணிக் கவி ராயருக்கும், சிவகாமசுந்தரியம்மையாருக்கும் புதல்வராகக் குமரகுருபரர் பிறந்தார். ஐந்தாண்டு வரையில் ஊமையா யிருந்து திருச்செந்தூர்ப் பெருமானருளால் பேசும் ஆற்றல் பெற்றுக் கந்தர் கலிவெண்பா பாடினர். தமிழ் இலக்கியங்களையும், ஞானசாத்திரங்களையும் கற்ருர். பல தலங்களையும் தரிசிக்க விரும்பி மதுரையில் தங்கி மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடித் திருமலை நாயக்கர் முன்னிலையில் அறுகாற் பீடமண்டபத்தில் அரங்கேற்றினர். அப்போது அம்மையே குழந்தை வடிவமாக வந்து ஓர் முத்து மாலையை இவருக்கு அணிந்து மறைந்ததாகக் கூறுவர். மதுரைக் கலம்பகம் என்னும் நூலையும், திருமலை நாயக்கரின் வேண்டுகோளுக் கிணங்கி நீதிநெறி விளக்கம் என்னும் நூலையும் இயற் றினர்.

பின்பு தருமபுரம் சென்று ஆதீனத்தின் 4வது பட்டமாக விளங்கிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை ஞானுசிரியராகக் கொண்டார். பிறகு வேளூர், சிதம்பரம், திருவாரூர் முதலிய தலங்களுக்குச் சென்று பல நூல்களை இயற்றினர். காசியில்

சிங்கத்தின்மேல் சென்று முகலாய மன்னனைக் கண்டு அவன் உதவியால் கேதார கட்டத்தில் கேதார மந்திரம், கேதாரத்துறை முதலியன அமைத்தார். மீண்டும் தரும புரம் வந்து ஞானசிரியரைத் தரிசித்துக் காசிக்குச் சென்று வைகாசி—கிருஷ்ணபட்சத் திருதியையில் இறைவன் திருவடி அடைந்தார். இவரே திருப்பனந்தாள் ஆதீனம் காசிமடத்தின் முதல்வராவர். இவர் இயற்றிய பிற நூல்கள் முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ், சிதம்பரம் மும் மணிக்கோவை, திருவாரூர் நான்மணிமாலை, காசிக் கலம் பகம் முதலியன. இவர் காலம் 17-ம் நூற்றுண்டு. மீனுட்சி யம்மை பிள்ளைத் தமிழின் இரு பாடல்கள் அம்மன்கோயில் அறுகால் பீட மண்டபத்தில் சலவைக் கல்லில் பொறிக்கப் பெற்றுள்ளன.

# 22. திருவாலவாய் என்னும் மதுரைத் தேவாரத் திருப்பதிகங்கள்

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

### திருவிருக்குக் குறள்

பண் - குறிஞ்சி [1-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நீல மாமிடற், றால வாயிலான்
பால தாயினர், ஞாலம் ஆள்வாரே. 1

ஞாலம் ஏழுமாம், ஆல வாயிலார்
சீல மேசொலீர், காலன் வீடவே. 2

ஆல நீழலார், ஆல வாயிலார்
கால காலனர், பால தாமினே. 3

அந்த மில்புகழ், எந்தை யாலவாய்
பந்தி யார்கழல், சிந்தை செய்ம்மினே. 4

ஆட லேற்றினன், கூட லாலவாய்
பாடி யேமனம், நாடி வாழ்மினே. 5

அண்ணல் ஆலவாய், நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத், திண்ணம் இன்பமே. 6

அம்பொன் ஆலவாய், நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர், துன்பம் வீடுமே. 7

அரக்க னார்வலி, நெருக்கன் ஆலவாய்
உரைக்கு முள்ளத்தார்க், கிரக்கம் உண்மையே. 8

அருவன் ஆலவாய், மருவி னான்றனை
இருவ ரேத்தநின், றுருவம் ஓங்குமே. 9

ஆரம் நாகமாம், சீரன் ஆலவாய்த்
தேரமண்செற்ற, வீர னென்பரே. 10

அடிகள் ஆலவாய்ப், படிகொள் **சம்பந்தன்**
முடிவி லின்றமிழ், செடிகள் நீக்குமே. 11

திருச்சிற்றம்பலம்

---

## திருநீற்றுப்பதிகம்

இப்பதிகம் பாண்டியனது வெப்புநோயைப் போக்கப் பாடியது.

பண் - காந்தாரம் [2-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 4

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்

ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே. 8

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே. 10

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் **ஞானசம் பந்தன்**
தேற்றித் தென்னன் உடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

இப்பதிகம் சமணர்களுக்கு எளியேனல்லேன் என்று குறித்துப் பாடியது.

பண் - கொல்லி [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

**மா**னினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. 1

ஆகமத்தொடு மந்திரங்க ளமைந்தசங்கத பங்கமாப்
பாகதத்தொ டிரைத்துரைத்த சனங்கள்வெட்குறு பக்கமா
மாகதக்கரி போல்திரிந்து புரிந்துநின்றுணும் மாசுசேர்
ஆகதர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. 2

அத்தகுபொருள் உண்டுமில்லையு மென்றுநின்றவர்க் கச்சமா
ஒத்தொவ்வாமை மொழிந்துவாதி லழிந்தெழுந்த கவிப்பெயர்ச்
சத்திரத்தின் மடிந்தொடிந்து சனங்கள் வெட்குற நக்கமே
சித்திரர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. 3

சந்துசேனனும் இந்துசேனனுந் தருமசேனனுங் கருமைசேர்
கந்துசேனனுங் கனகசேனனு முதலதாகிய பெயர்கொளா
மந்திபோல்திரிந் தாரியத்தொடு செந்தமிழ்ப்பயன் அறிகிலா
அந்தகர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. 4

கூட்டினார்கிளி யின்விருத்தம் உரைத்ததோரொலி யின்தொழிற்
பாட்டுமெய்சொலிப் பக்கமேசெலும் எக்கர்தங்களைப் பல்லறம்
காட்டியேவரு மாடெலாங்கவர் கையரைக்கசி வொன்றிலாச்
சேட்டைகட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. 5

கனகநந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியுங் குமணமா
சுனகநந்தியுங் குனகநந்தியுந் திவணநந்தியும் மொழிகொளா
அனகநந்தியர் மதுவொழிந்தவ மேதவம்புரி வோமெனும்
சினகருக்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. 6

பந்தணம்மவை யொன்றிலம்பரி வொன்றிலம்மென வாசக
மந்தணம்பல பேசிமாசறு சீர்மையின்றிய நாயமே
அந்தணம்மரு கந்தணம்மது புத்தணம்மது சித்தணச்
சிந்தணர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. 7

மேலெனக்கெதி ரில்லையென்ற அரக்கனார்மிகை செற்றதீப்
போலியைப்பணி யக்கிலாதொரு பொய்த்தவங்கொடு குண்டிகை
பீலிகைக்கொடு பாயிடுக்கி நடுக்கியேபிறர் பின்செலும்
சீலிகட்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. 8

பூமகற்கும் அரிக்குமோர்வரு புண்ணியன்அடி போற்றிலார்
சாமவத்தை யினார்கள்போல் தலையைப்பறித்தொரு பொய்த்தவம்
வேமவத்தைசெ லுத்திமெய்ப்பொடி யட்டிவாய் சகதிக்குநேர்
ஆமவர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. 9

தங்களுக்குமச் சாக்கியர்க்குந் தரிப்பொணாதநற் சேவடி
எங்கள்நாயகன் ஏத்தொழிந்திடுக்கே மடுத்தொரு பொய்த்தவம்
பொங்குநூல்வழி யன்றியேபுல வோர்களைப்பழிக் கும்பொலா
அங்கதர்க்கெளி யேனலேன்திரு ஆலவாயரன் நிற்கவே. 10

எக்கராம்அமண் கையருக்கெளி யேனலேன்திரு ஆலவாய்ச்
**சொக்கன்**என்னு ளிருக்கவேதுளங் கும்முடித்தென்னன் முன்னிவை
தக்கசீர்ப்புக லிக்குமன்தமிழ் நாதன்ஞானசம் **பந்தன்வாய்**
ஒக்கவேயுரை செய்தபத்தும் உரைப்பவர்க்கிடர் இல்லையே. 11

திருச்சிற்றம்பலம்

---

பண் - கௌசிகம் [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனான்
வேட்டு வேள்விசெய் யாஅமண் கையரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே. 1

மத்த யானையின் ஈருரி மூடிய
அத்த னேயணி ஆலவா யாய்பணி
பொய்த்த வன்தவ வேடத்த ராஞ்சமண்
சித்த ரையழிக் கத்திரு வுள்ளமே. 2

மண்ண கத்திலும் வானிலும் எங்குமாம்
திண்ண கத்திரு ஆலவா யாயருள்
பெண்ண கத்தெழிற் சாக்கியப் பேயமண்
தெண்ணர் கற்பழிக் கத்திரு வுள்ளமே. 3

ஓதி யோத்தறி யாஅமண் ஆதரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
ஆதி யேதிரு ஆலவா யண்ணலே
நீதி யாக நினைந்தருள் செய்திடே. 4

வைய மார்புக ழாயடி யார்தொழும்
செய்கை யார்திரு ஆலவா யாய்செப்பாய்
கையி லுண்டுழ லும்அமண் கையரைப்
பைய வாதுசெ யத்திரு வுள்ளமே. 5

நாறு சேர்வயல் தண்டலை மிண்டிய
தேற லார்திரு ஆலவா யாய்செப்பாய்
வீறி லாத்தவ மோட்டமண் வேடரைச்
சீறி வாதுசெ யத்திரு வுள்ளமே. 6

பண்ட டித்தவத் தார்பயில் வாற்றெழும்
தொண்ட ருக்கெளி யாய்திரு ஆலவாய்
அண்ட னேயமண் கையரை வாதினில்
செண்ட டித்துள றத்திரு வுள்ளமே. 7

அரக்கன் முன்கிரி யேற்றவன் தன்முடிச்
செருக்கி னைத்தவிர்த் தாய்திரு ஆலவாய்ப்
பரக்கு மாண்புடை யாயமண் பாவரைக்
கரக்க வாதுசெ யத்திரு வுள்ளமே. 8

மாலும் நான்முக னும்அறி யாநெறி
ஆல வாயுறை யும்அண்ண லேபணி
மேலை வீடுண ராவெற்ற ரையரைச்
சால வாதுசெ யத்திரு வுள்ளமே. 9

கழிக்க ரைப்படு மீன்கவர் வாரமண்
அழிப்ப ரையழிக் கத்திரு வுள்ளமே
தெழிக்கும் பூம்புனல் சூழ்திரு ஆலவாய்
மழுப்ப டையுடை மைந்தனே நல்கிடே. 10

செந்நெ லம்மலி யுந்திரு ஆலவாய்
மைந்த னேயென்று வல்லம ணாசறச்
சந்த மார்தமிழ் கேட்டமெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற்பக ரும்பழி நீங்கவே. 11

திருச்சிற்றம்பலம்

---

திருஞானசம்பந்தர் எழுந்தருளிய திருமடத்தில் சமணர்கள்
தீவைத்தபோது இப் பதிகம் பாடியது.

பண் - கௌசிகம் [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே. 1

சித்த னேதிரு ஆலவாய் மேவிய
அத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எத்த ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பத்திமன் தென்னன் பாண்டியற் காகவே. 2

தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்க னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எக்க ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே. 3

சிட்ட னேதிரு ஆலவாய் மேவிய
அட்ட மூர்த்திய னேயஞ்ச லென்றருள்
துட்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பட்டி மன்தென்னன் பாண்டியற் காகவே. 4

நண்ண லார்புரம் மூன்றெரி ஆலவாய்
அண்ண லேயஞ்ச லென்றருள் செய்யெனை
எண்ணி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பண்ணி யல்தமிழ்ப் பாண்டியற் காகவே. 5

தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்ச லென்றருள் ஆலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தம ணர்கொழு வுஞ்சுடர்
பஞ்ச வன்தென்னன் பாண்டியற் காகவே. 6

செங்கண் வெள்விடை யாய்திரு ஆலவாய்
அங்க ணாஅஞ்ச லென்றருள் செய்யெனைக்
கங்கு லார்அமண் கைய ரிடுங்கனல்
பங்கமில் தென்னன் பாண்டியற் காகவே. 7

தூர்த்தன் வீரந் தொலைத்தருள் ஆலவாய்
ஆத்த னேஅஞ்ச லென்றருள் செய்யெனை
ஏத்தி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பார்த்தி வன்தென்னன் பாண்டியற் காகவே. 8

தாவி னான்அயன் தானறி யாவகை
மேவி னாய்திரு ஆலவா யாயருள்
தூவி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பாவி னன்தென்னன் பாண்டியற் காகவே. 9

எண்டி சைக்கெழில் ஆலவாய் மேவிய
அண்ட னேயஞ்ச லென்றருள் செய்யெனைக்
குண்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பண்டிமன் தென்னன் பாண்டியற் காகவே. 10

அப்பன் ஆலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே. 11

திருச்சிற்றம்பலம்

---

திருவிராகம்

பண் - கௌசிகம் [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

விடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே. 1

பட்டிசைந்த அல்குலாள் பாவையாளோர் பாகமா
ஒட்டிசைந்த தன்றியும் உச்சியாளொ ருத்தியாக்
கொட்டிசைந்த ஆடலாய் கூடல்ஆல வாயிலாய்
எட்டிசைந்த மூர்த்தியா யிருந்தவாறி தென்னையே. 2

குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்தும்நீ அருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே. 3

முதிருநீர்ச் சடைமுடி முதல்வன்நீ முழங்கழல்
அதிரவீசி யாடுவாய் அழகன்நீ புயங்கன்நீ
மதுரன்நீ மணாளன்நீ மதுரையால வாயிலாய்
சதுரன்நீ சதுர்முகன் கபாலமேந்து சம்புவே. 4

கோலமாய நீள்மதிற் கூடல்ஆல வாயிலாய்
பாலனாய தொண்டுசெய்து பண்டுமின்றும் உன்னையே
நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே. 5

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடல்ஆல வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. 6

ஆதியந்த மாயினாய் ஆலவாயில் அண்ணலே
சோதியந்த மாயினாய் சோதியுள்ளோர் சோதியாய்
கீதம்வந்த வாய்மையாற் கிளர்தருக்கி னார்க்கலால்
ஓதிவந்த வாய்மையால் உணர்ந்துரைக்க லாகுமே. 7

கறையிலங்கு கண்டனே கருதலாக் கருங்கடல்
துறையிலங்கை மன்னனைத் தோளடர வூன்றினாய்
மறையிலங்கு பாடலாய் மதுரையால வாயிலாய்
நிறையிலங்கு நெஞ்சினால் நினைப்பதே நியமமே. 8

தாவணவ் விடையினாய் தலைமையாக நாடொறும்
கோவணவ் வுடையினாய் கூடலால வாயிலாய்
தீவணம் மலர்மிசைத் திசைமுகனும் மாலும்நின்
தூவணம் அளக்கிலார் துளக்கமெய்து வார்களே. 9

தேற்றமில் வினைத்தொழில் தேரருஞ் சமணரும்
போற்றிசைத்து நின்கழற் புகழ்ந்துபுண் ணியங்கொளார்
கூற்றுதைத்த தாளினாய் கூடல்ஆல வாயிலாய்
நாற்றிசைக்கும் மூர்த்தியாகி நின்றதென்ன நன்மையே. 10

போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்
பாயகேள்வி **ஞானசம்பந்தன்** நல்ல பண்பினால்
ஆயசொல்லின் மாலைகொண் டாலவாயில் அண்ணலைத்
தீயதீர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே. 11

திருச்சிற்றம்பலம்

## நாலடிமேல் வைப்பு

### பண் - பழம்பஞ்சுரம் [3-ஆம் திருமுறை]

### திருச்சிற்றம்பலம்

**வே**த வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 1

வைதி கத்தின் வழியொழு காதஅக்
கைத வம்முடைக் காரமண் தேரரை
எய்தி வாதுசெ யத்திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 2

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையில் மாமழு வாளனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 3

அறுத்த அங்கம்ஆ றாயின நீர்மையைக்
கறுத்த வாழமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெ யத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 4

அந்த ணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே. 5

வேட்டு வேள்விசெ யும்பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டி லானை உரித்தஎங் கள்வனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே. 6

அழல தோம்பும் அருமறை யோர்திறம்
விழல தென்னும் அருகர் திறத்திறம்
கழல வாதுசெ யத்திரு வுள்ளமே
தழல்இ லங்கு திருவுருச் சைவனே
ஞானம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே. 7

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள ரக்கற்கும் அருளினாய்
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே. 8

நீல மேனி அமணர் திறத்துநின்
சீலம் வாதுசெ யத்திரு வுள்ளமே
மாலும் நான்முக னுங்காண் பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே.

அன்று முப்புரஞ் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணு அருகரைத்
தென்ற வாதுசெ யத்திரு வுள்ளமே
கன்று சாக்கியர் காணுத் தலைவனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 10

கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
ஆடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தஇப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே. 11

திருச்சிற்றம்பலம்

---

திருவியமகம்

பண் - பழம்பஞ்சுரம் [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

ஆலநீழ லுகந்ததி ருக்கையே
ஆன பாட லுகந்ததி ருக்கையே
பாலின்நேர்மொழி யாளொரு பங்கனே
பாதமோதலர் சேர்புர பங்கனே
கோலநீறணி மேதகு பூதனே
கோதிலார்மன மேவிய பூதனே
ஆலநஞ்சமு துண்டக ளத்தனே
ஆலவாயுறை அண்டர்கள் அத்தனே. 1

பாதியாயுடன் கொண்டது மாலையே
பாம்புதார் மலர்க் கொன்றைநன் மாலையே
கோதில்நீறது பூசிடு மாகனே
கொண்ட நற்கையின் மானிட மாகனே

நாதன்நாடொறும் ஆடுவ தானையே
நாடியன்றுரி செய்ததும் ஆனையே
வேதநூல்பயில் கின்றது வாயிலே
விகிர்தனூர்திரு ஆலநல் வாயிலே. 2

காடுநீட துறப்பல கத்தனே
காதலால்நினை வார்தம் அகத்தனே
பாடுபேயொடு பூதம சிக்கவே
பல்பிணத்தசை நாடிய சிக்கவே
நீடுமாநட மாடவி ருப்பனே
நின்னடித் தொழுநாளும் இருப்பனே
ஆடல்நீள்சடை மேவிய அப்பனே
ஆலவாயினின் மேவிய அப்பனே. 3

பண்டயன்றலை யொன்றும் அறுத்தியே
பாதமோதினர் பாவம் அறுத்தியே
துண்டவெண்பிறை சென்னியி ருத்தியே
தூயவெள்ளெரு தேறியி ருத்தியே
கண்டுகாமனை வேவவி ழித்தியே
காதலில்லவர் தம்மையி ழித்தியே
அண்டநாயக னேமிகு கண்டனே
ஆலவாயினின் மேவிய கண்டனே. 4

சென்றுதாதை யுகுத்தனன் பாலையே
சீறியன்பு செகுத்தனன் பாலையே
வென்றிசேர்மழுக் கொண்டுமுன் காலையே
வீடவெட்டிடக் கண்டுமுன் காலையே
நின்றமாணியை யோடின கங்கையால்
நிலவமல்கி யுதித்தன கங்கையால்
அன்றுநின்னுரு வாகத் தடவியே
ஆலவாயர னாகத் தடவியே. 5

நக்கமேகுவர் நாடுமோர் ஊருமே
நாதன்மேனியின் மாசுணம் ஊருமே
தக்கபூமனைச் சுற்றக ருளொடே
தார முய்த்தது பாணற்க ருளொடே
மிக்க தென்னவன் தேவிக்கணியையே
மெல்லநல்கிய தொண்டர்க்கணியையே
அக்கிறாமு துண்கல ஞேடுமே
ஆலவாயர ஞருமை யோடுமே. 6

வெய்யவன்பல் உகுத்தது குட்டியே
வெங்கண்மாசுணங் கையது குட்டியே
ஐயனேயன லாடிய மெய்யனே
அன்பினுல்நினை வார்க்கருள் மெய்யனே
வையமுய்யஅன் றுண்டது காளமே
வள்ளல்கையது மேவுகங் காளமே
ஐயமேற்ப துரைப்பது வீணையே
ஆலவாயரன் கையது வீணையே. 7

தோள்கள்பத்தொடு பத்தும யக்கியே
தொக்கதேவர்செ ருக்கைம யக்கியே
வாளரக்கன் நிலத்துக்க ளித்துமே
வந்தமால்வரைக் கண்டு களித்துமே
நீள்பொருப்பை யெடுத்தவுன் மத்தனே
நின்விரற்றலை யான்மத மத்தனே
ஆளுமாதிமு றித்தது மெய்கொலோ
ஆலவாயர னுய்த்தது மெய்கொலோ. 8

பங்கயத்துள நான்முகன் மாலொடே
பாதநீண்முடி நேடிட மாலொடே
துங்கநற்றழ லின்னுரு வாயுமே
தூயபாடல்ப யின்றது வாயுமே

செங்கயற்கணி னாரிடு பிச்சையே
சென்று கொண்டுரை செய்வது பிச்சையே
அங்கியைத்திகழ் விப்பதி டக்கையே
ஆலவாயர னாரதி டக்கையே. 9

தேரரோடம ணர்க்குநல் கானையே
தேவர்நாடொறுஞ் சேர்வது கானையே
கோரமட்டது புண்ட ரிகத்தையே
கொண்டநீள்கழல் புண்டரி கத்தையே
நேரிலார்கள் அழித்தது நாகமே
நீள்சடைத்திகழ் கின்றது நாகமே
ஆரமாக வுகந்தது மென்பதே
ஆலவாயர னாரிட மென்பதே. 10

ஈனஞானிகள் தம்மொடு விரகனே
ஏறுபல்பொருள் முத்தமிழ் விரகனே
ஆனகாழியுள் ஞானசம் பந்தனே
ஆலவாயினின் மேயசம் பந்தனே
ஆனவானவர் வாயினுள் அத்தனே
அன்பரானவர் வாயினுள் அத்தனே
நானுரைத்தன செந்தமிழ் பத்துமே.
வல்லவர்க்கிவை நற்றமிழ் பத்துமே. 11

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் இவர்களின் தொண்டுகளைச் சிறப்பித்துப் பாடியது.

பண் - புறநீர்மை [3-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்

பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே. 1

வெற்றவே அடியார் அடிமிசை வீழும்
விருப்பினன் வெள்ளைநீ றணியும்
கொற்றவன் தனக்கு மந்திரி யாய
குலச்சிறை குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன்
உலகினில் இயற்கையை யொழிந்திட்
டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற
ஆலவா யாவதும் இதுவே. 2.

செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்
சிவன்திரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி
பணிசெயப் பாரிட நிலவும்
சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தந்
தண்ணெருக் கம்மலர் வன்னி
அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ணல்
ஆலவா யாவதும் இதுவே. 3

கணங்களாய் வரினும் தமியராய் வரினும்
அடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடு பணியும் குலச்சிறை குலாவுங்
கோபுரஞ் சூழ்மணிக் கோயில்
மணங்கமழ் கொன்றை வாளரா மதியம்
வன்னிவண் கூவிள மாலை
அணங்குவீற் றிருந்த சடைமுடி யண்ணல்
ஆலவா யாவதும் இதுவே. 4

செய்யதா மரைமேல் அன்னமே யனைய
சேயிழை திருநுதற் செல்வி
பையர வல்குற் பாண்டிமா தேவி
நாடொறும் பணிந்தினி தேத்த
வெய்யவேற் சூலம் பாசம்அங் குசமான்
விரிகதிர் மழுவுடன் தரித்த
ஐயனூர் உமையோ டின்புறு கின்ற
ஆலவா யாவதும் இதுவே. 5

நலமில ராக நலமதுண் டாக
நாடவர் நாடறி கின்ற
குலமில ராகக் குலமதுண் டாகத்
தவம்பணி குலச்சிறை பரவும்
கலைமலி கரத்தன் மூவிலை வேலன்
கரியுரி மூடிய கண்டன்
அலைமலி புனல்சேர் சடைமுடி யண்ணல்
ஆலவா யாவதும் இதுவே. 6

முத்தின்தாழ் வடமுஞ் சந்தனக் குழம்பும்
நீறுந்தன் மார்பினில் முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே
சுடர்மர கதம்அடுத் தாற்போல்
அத்தனூர் உமையோ டின்புறு கின்ற
ஆலவா யாவதும் இதுவே. 7

நாவணங் கியல்பாம் அஞ்செழுத் தோதி
நல்லராய் நல்லியல் பாகும்
கோவணம் பூதி சாதனங் கண்டால்
தொழுதெழு குலச்சிறை போற்ற

ஏவணங் கியல்பாம் இராவணன் திண்டோள்
இருபதும் நெறிதர வூன்றி
ஆவணங் கொண்ட சடைமுடி யண்ணல்
ஆலவா யாவதும் இதுவே. 8

மண்ணெலாம் நிகழ மன்னனாய் மன்னும்
**மணிமுடிச் சோழன்றன் மகளாம்**
பண்ணினேர் மொழியாள் பாண்டிமா தேவி
பாங்கினாற் பணிசெய்து பரவ
விண்ணுளார் இருவர் கீழொடு மேலும்
அளப்பரி தாம்வகை நின்ற
அண்ணலார் உமையோ டின்புறு கின்ற
ஆலவா யாவதும் இதுவே. 9

தொண்டரா யுள்ளார் திசைதிசை தோறுந்
தொழுதுதன் குணத்தினைக் குலாவக்
கண்டநா டோறும் இன்புறு கின்ற
குலச்சிறை கருதிநின் றேத்தக்
குண்டரா யுள்ளார் சாக்கியர் தங்கள்
குறியின்கண் நெறியிடை வாரா
அண்டநா யகன்றான் அமர்ந்துவீற் றிருந்த
ஆலவா யாவதும் இதுவே. 10

பன்னலம் புணரும் பாண்டிமா தேவி
குலச்சிறை யெனுமிவர் பணியும்
அந்நலம் பெறுசீர் ஆலவா யீசன்
திருவடி யாங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞான
**சம்பந்தன்** செந்தமி ழிவைகொண்
டின்னலம் பாட வல்லவர் இமையோர்
ஏத்தவீற் றிருப்பவர் இனிதே. 11

திருச்சிற்றம்பலம்

இப்பதிகம் வைகை ஆற்றில் ஏடு எதிர்த்துச்செல்லப் பாடியது.

திருப்பாசுரம்

பொது - பண் கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

**வா**ழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. 1

அரிய காட்சி யராய்த்தம தங்கைசேர்
எரியர் ஏறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரிய ராரறி வாரவர் பெற்றியே. 2

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தி யாளெழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ. 3

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில்அள வில்லைகிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையுங் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவை கேட்கதக்கார். 4

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள்சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையேவந்து சார்மின்களே. 5

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்துவேதம்
பாடும் எனவும் புகழல்லது பாவம்நீங்கக்
கேடும்பிறப்பும் அறுக்கும் மெனக் கேட்டீராகில்
நாடுந் திறத்தார்க் கருளல்லது நாட்டலாமே. 6

கடிசேர்ந்த போது மலரானகைக் கொண்டுநல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதைபண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக்கேட்டு மன்றே. 7

வேதமுதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப்படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூதமுதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை யென்றே கலிக்கோவைசொல்லே. 8

பாராழி வட்டம் பகையால் நலிந்தாட்ட ஆடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல்பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்டவர்க்குப்
போராழி யீந்தபுகழும் புகழுற்ற தன்றே. 9

மாலாயவனும் மறைவல்ல நான்முகனும்
பாலாய தேவர் பகரில்லமு தூட்டல்பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க் கரிதாயெழுந்த
ஆலாலம் உண்டங்கம ரர்க்கருள் செய்ததாமே. 10

அற்றன்றி யந்தண் மதுரைத் தொகையாக்கினானும்
தெற்றென்று தெய்வந் தெளியார் கரைக்கோலைதெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் வினூரவும் பண்புநோக்கில்
பெற்றொன் றுயர்த்த பெருமான் பெருமானுமன்றே. 11

நல்லார்கள் சேர்புகலி ஞான சம்பந்தன்நல்ல
எல்லார்களும் பரவும் ஈசனை யேத்துபாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரஞ் சொன்னபத்தும்
வல்லார்கள் வானோருலகாளவும் வல்லரன்றே. 12

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

### திருநேரிசை [4-ஆம் திருமுறை]

### திருச்சிற்றம்பலம்

வேதியா வேத கீதா விண்ணவர் அண்ணா என்றென்(று)
ஓதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ் சூடும்
ஆதியே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே. 1

நம்பனே நான்மு கத்தாய் நாதனே ஞான மூர்த்தீ
என்பொனே ஈசா என்றென் றேத்திநான் ஏசற் றென்றும்
பின்பினே திரிந்து நாயேன் பேர்த்தினிப் பிறவா வண்ணம்
அன்பனே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே. 2

ஒருமருந் தாகி யுள்ளாய் உம்பரோ டுலகுக் கெல்லாம்
பெருமருந் தாகி நின்றாய் பேரமு தின்சு வையாய்க்
கருமருந் தாகி யுள்ளாய் ஆளும்வல் வினைகள் தீர்க்கும்
அருமருந் தால வாயில் அப்பனே அருள்செ யாயே. 3

செய்யநின் கமல பாதஞ் சேருமா தேவர் தேவே
மையணி கண்டத் தானே மான்மறி மழுவொன் றேந்தும்
சைவனே சால ஞானங் கற்றறி விலாத நாயேன்
ஐயனே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே. 4

வெண்டலை கையில் ஏந்தி மிகவுமூர் பலிகொண் டென்றும்
உண்டது மில்லை சொல்லில் உண்டது நஞ்சு தன்னைப்
பண்டுனை நினைய மாட்டாப் பளகனேன் உளம தார
எண்டனே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே. 5

எஞ்சலில் புகலி தென்றென் றேத்திநான் ஏசற் றென்றும்
வஞ்சக மொன்று மின்றி மலரடி காணும் வண்ணம்
நஞ்சினை மிடற்றில் வைத்த நற்பொருட் பதமே நாயேற்(கு)
அஞ்சலென் றால வாயில் அப்பனே அருள்செ யாயே. 6

வழுவிலா துன்னை வாழ்த்தி வழிபடுந் தொண்ட னேன்உன்
செழுமலர்ப் பாதங் காணத் தெண்டிரை நஞ்ச முண்ட
குழகனே கோல வில்லீ கூத்தனே மாத்தா யுள்ள
அழகனே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே. 7

நறுமலர் நீருங் கொண்டு நாடொறு மேத்தி வாழ்த்திச்
செறிவன சித்தம் வைத்துத் திருவடி சேரும் வண்ணம்
மறிகடல் வண்ணன் பாகா மாமறை யங்க மாறும்
அறிவனே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே. 8

நலந்திகழ் வாயின் நூலாற் சருகிலைப் பந்தர் செய்த
சிலந்தியை அரச தாள அருளினாய் என்று திண்ணங்
கலந்துடன் வந்து நின்தாள் கருதிநான் காண்ப தாக
அலந்தனன் ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே. 9

பொடிக்கொடு பூசிப் பொல்லாக் குரம்பையிற் புந்தி யொன்றிப்
பிடித்துநின் தாள்க ளென்றும் பிதற்றிநா னிருக்க மாட்டேன்
எடுப்பனென் றிலங்கைக் கோன்வந் தெடுத்த லும்இரு பதுதோள்
அடர்த்தனே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே. 10

திருச்சிற்றம்பலம்

---

திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறத்
தூமுத்த வெண்முறுவல் உமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 1

விண்ணுலகின் மேலார்கள் மேலான் தன்னை
மேலாடு புரமூன்றும் பொடிசெய் தானைப்
பண்ணிலவு பைம்பொழில்சூழ் பழனத் தானைப்
பசும்பொன்னின் நிறத்தானைப் பால்நீற் றானை
உண்ணிலவு சடைக்கற்றைக் கங்கை யாளைக்
கரந்துமையோ டுடனாகி இருந்தான் தன்னைத்
தெண்ணிலவு தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 2

நீர்த்திரளை நீள்சடைமேல் நிறைவித் தானை
நிலமருவி நீரோடக் கண்டான் தன்னைப்
பாற்றிரளைப் பயின்றாட வல்லான் தன்னைப்
பகைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தான் தன்னைக்
காற்றிரளாய் மேகத்தி னுள்ளே நின்று
கடுங்குரலாய் இடிப்பானைக் கண்ணோர் நெற்றித்
தீத்திரளைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பேற்றேன் நானே. 3

வானமிது வெல்லா முடையான் தன்னை
வரியரவக் கச்சானை வன்பேய் சூழக்
கானமதில் நடமாட வல்லான் தன்னைக்
கடைக்கண்ணால் மங்கையுமை நோக்கா வென்மேல்
ஊனமது வெல்லா மொழித்தான் தன்னை
உணர்வாகி யடியேன துள்ளே நின்ற
தேனமுதைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 4

ஊரானை யுலகேழாய் நின்றான் தன்னை
ஒற்றைவெண் பிறையானை உமையோ டென்றும்
பேரானைப் பிறர்க்கென்று மரியான் தன்னைப்
பிணக்காட்டில் நடமாடல் பேயோ டென்றும்

ஆரானை அமரர்களுக் கமுதீந் தானை
அருமறையால் நான்முகனும் மாலும் போற்றும்
சீரானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 5

மூவனை மூர்த்தியை மூவா மேனி
யுடையானை மூவுலகுந் தானே யெங்கும்
பாவனைப் பாவ மறுப்பான் தன்னைப்
**படியெழுத லாகாத மங்கை யோடும்**
மேவனை விண்ணோர் நடுங்கக் கண்டு
விரிகடலின் நஞ்சுண் டமுத மீந்த
தேவனைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 6

துறந்தார்க்குத் தூநெறியாய் நின்றான் தன்னைத்
துன்பந் துடைத்தாள வல்லான் தன்னை
இறந்தார்க ளென்பே அணிந்தான் தன்னை
எல்லி நடமாட வல்லான் தன்னை
மறந்தார் மதில்மூன்றும் மாய்த்தான் தன்னை
மற்றொருபற் றில்லா அடியேற் கென்றும்
சிறந்தானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 7

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற கருத்தானைக்
**கருத் தறிந்து முடிப்பான் தன்னைத்**
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 8

பகைச்சுடராய்ப் பாவ மறுப்பான் தன்னைப்
பழியிலியாய் நஞ்சுண் டமுதீந் தானை
வகைச்சுடராய் வல்லரசர் புரமட் டானை
வளைவிலியா யெல்லார்க்கும் அருள்செய் வானை
மிகைச்சுடரை விண்ணவர்கண் மேலப் பாலை
மேலாய தேவாதி தேவர்க் கென்றும்
திகைச்சுடரைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 9

மலையானை மாமேரு மன்னி னானை
வளர்புன் சடையானை வானோர் தங்கள்
தலையானை யென்தலையி னுச்சி யென்றுந்
தாபித் திருந்தானைத் தானே யெங்கும்
துலையாக வொருவரையு மில்லா தானைத்
தோன்றாதார் மதில்மூன்றுந் துவளஎய்த
சிலையானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 10

தூர்த்தனைத் தோள்முடிபத் திறுத்தான் தன்னைத்
தொன்னரம்பின் இன்னிசைகேட் டருள்செய் தானைப்
பார்த்தனைப் பணிகண்டு பரிந்தான் தன்னைப்
பரிந்தவற்குப் பாசுபதம் ஈந்தான் தன்னை
ஆத்தனை அடியேனுக் கன்பன் தன்னை
அளவிலாப் பல்லூழி கண்டு நின்ற
தீர்த்தனைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. 11

திருச்சிற்றம்பலம்

## மாணிக்கவாசக சுவாமிகள்

### திருவாசகம் [8-ஆம் திருமுறை]

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டக் கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய். 1

—திருவம்மானை

மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்
தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்
கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும்
பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ. 2

—திருப்பூவல்லி

சதுரை மறந்தறி மால்கொள்வர் சார்ந்தவர்சாற்றிச் சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதி கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்குடி கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப் போட மறித்திடுமே. 3

—திருப்பாண்டிப் பதிகம்

நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும் பெருந்துறையாய்!
அரிய பொருளே! அவிநாசி அப்பா! பாண்டி வெள்ளமே!
தெரிய அரிய பரஞ்சோதீ! செய்வதொன்றும் அறியேனே.

—ஆனந்த மாலை

அமைவும் பிறப்பும் இறப்புமாம் மற்றுங்
கமைவும் பரமான ஆதி—அமையுந்
திருவாலவாய் சென்று சேராது மாக்கள்
திருவால வாய் சென்று சேர். 5

—11-ம் திருமுறை • பரணதேவர்

### திருமுகப் பாசுரம்

திருப் பிரபந்த மாலை [11-ஆம் திருமுறை]

*இது பாணபத்திரனுக்காகப் பெருமான் பாடிக் கொடுத்தது.*

*திருச்சிற்றம்பலம்*

*மதிமலி புரிசை மாடக் கூடல்*
*பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற(கு)*
*அன்னம் பயில்பொழில் ஆல வாயின்*
*மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்*
*பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு*
*ஒருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்*
*குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்*
*செருமா உகைக்குஞ் சேரலன் காண்க :*
*பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்*
*தன்போல் என்பால் அன்பன் தன்பால்*
*காண்பது கருதிப் போந்தனன்*
*மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.* 6

*திருச்சிற்றம்பலம்*

---

## 23. புராணப் பாடல்கள்

### மதுரைத் தலத்தைப்பற்றிய புராண நூல்கள்

**1. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் :**

உத்தரமகாபுராணம் என்னும் வடநூலின் மொழி பெயர்ப்பு. செல்லிநகர்ப் பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவரால் இயற்றப்பட்டது. பழைய திருவிளையாடல் என வழங்கும். இந்நூலின் பாடல்கள் இவ்வரலாற்றில் அங்கங்கே சேர்க்கப் பெற்றுள்ளன.

**2. கடம்பவன புராணம் :**

வீமநாதபண்டிதரால் கதம்பவன புராணம் என்னும் வடமொழி நூலிலிருந்து மொழி பெயர்க்கப்பெற்றது. இதில் பத்தாவதான இலீலாசங்கிரக அத்தியாயத்தில் 64 திருவிளையாடல்களும் தனித்தனியே கூறப்பெற்றுள்ளன.

**3. சுந்தரபாண்டியம் :**

தொண்டை நாட்டிலுள்ள அனதாரி என்பவரால் சுந்தரபாண்டியம் என்னும் வடநூலிலிருந்து மொழி பெயர்க்கப் பெற்றது. இந்நூலின் காலம் கி. பி. 1563.

**4. அட்டமிப் பிரதக்ஷிண மான்மியம் :**

மதுரை வாசியான இராமசாமி பிள்ளையால் வடநூலி லிருந்து உரைநடையாக இயற்றப்பெற்றது.

**5. திருவிளையாடற் புராணம் :**

பரஞ்சோதி முனிவரால் ஹாலாஸ்ய மாகாத்மியம் என்னும் வடநூலிலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றது. இதன் பாடல்கள் 3363. இக் காலத்தில் எல்லோராலும் மிகுதியாகப் பாராட்டப் பெறுவது. இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல்களும், வேறு சிலவும் இதில் சேர்க்கப் பெற்றுள்ளன.

## கடவுள் வாழ்த்து

### சித்தி விநாயகர்

*உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்*
*தறிநிறுவி உறுதியாகத்*
*தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி*
*இடைப்படுத்தித் தறுகட்பாசக்*

கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம். 1

முருகக் கடவுள்

கறங்குதிரைக் கருங்கடலும் காரவுணப்
பெருங்கடலுங் கலங்கக் கார்வந்து
உறங்குசிகைப் பொருப்புஞ்சூர் உரப்பொருப்பும்
பிளப்பமறை உணர்ந்தோர்ஆற்றும்
அறங்குலவும் மகத்தழலும் அவுணமட
வார்வயிற்றின் அழலும்மூள
மறங்குலவு வேலெடுத்த குமரவேள்
சேவடிகள் வணக்கஞ் செய்வாம். 2

சொக்கநாதர்

பூவில் நாயகன் பூமகள் நாயகன்
காவின் நாயகன் ஆதி கடவுளர்க்கு
ஆவி நாயகன் அங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடி ஏத்துவாம். 3

அரியசடை முடிபோற்றி அருள்பொழி செம்முகம் போற்றி
விரையிதழி மலரணிநூல் விளங்கிய மார்பகம் போற்றி
மருவுமுயர் பேரழகு வளருதரநிலை போற்றி
திருவளர் செந்தமிழ்ச் சொக்கன் திருவடித்தாமரை போற்றி. 4

(இது கேசாதிபாத வர்ணனை)—(பழய திருவிளையாடல்)

அங்கயற்கண்ணம்மை

பங்கயற்கண் ணரியபரம் பரனுருவே
தனக்குரிய படிவமாகி
இங்கயற்கண் அகனுலகம் எண்ணிறந்த
சராசரங்கள் ஈன்றும் தாழாக்

கொங்கயற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண்
டியன்மகள்போற் கோலங் கொண்ட
அங்கயற்கண் அம்மை இரு பாதப்போது
எப்போதும் அகத்துள் வைப்பாம். 5

### சோமசுந்தரர்

சடைமறைத்துக் கதிர்மகுடந் தரித்து நறுங்
கொன்றையந்தார் தணந்து வேப்பந்
தொடை முடித்து விடநாகக் கலனகற்றி
மாணிக்கச் சுடர்ப்பூண் ஏந்தி
விடைநிறுத்திக் கயலெடுத்து வழுதிமரு
மகனாகி மீன நோக்கின்
மடவரலை மணந்துலக முழுதாண்ட
சுந்தரனை வணக்கஞ் செய்வாம். 6

### வெள்ளியம்பலவாணர்

பொருமாறிற் கிளர்தடந்தோள் ஒருமாறன்
மனங்கிடந்த புழுக்கம் மாற
வருமாறிற் கண்ணருவி மாறாது
களிப்படைய மண்ணும் விண்ணும்
உருமாறிப் பவக்கடல் வீழ்ந்துஊசலெனத்
தடுமாறி உழலும் மாக்கள்
கருமாறிக் கதியடையக் கால்மாறி
நடித்தவரைக் கருத்துள் வைப்பாம். 7

### தக்ஷிணாமூர்த்தி (தென்முகக் கடவுள்)

கல்லாலின் புடையமர்ந்து நான்மறைஆறு
அங்கமுதற், கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்

எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம். 8

நாமகள்

பழுதகன்ற நால்வகைச்சொல் மலரெடுத்துப்
பத்திபடப் பரப்பித்திக்கு
முழுதகன்று மணந்துசுவை ஒழுகிஅணி
பெறமுக்கண் மூர்த்திதாளில்
தொழுதகன்ற அன்பெனுநார் தொடுத்தலங்கல்
சூட்டவரிச் சுரும்புந்தேனுங்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தாள்
அடிமுடிமேற் கொண்டு வாழ்வாம். 9

திருநந்திதேவர்

வந்திறை யடியில்தாழும் வானவர் மகுட கோடி
பந்தியின் மணிகள் சிந்தவேத்திரப் படையால் தாக்கி
அந்தியும் பகலுந் தொண்டர் அலகிடுங் குப்பையாக்கும்
நந்தியெம் பெருமான்பாத நகைமலர் முடிமேல் வைப்பாம். 10

திருஞானசம்பந்தர்

கடியவிழ் கடுக்கைவேணித் தாதைபோற் கனற்கண் மீனக்
கொடியனை வேவநோக்கிக் குறையிரந் தணையான் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப்பின்னுயி ரளித்துக் காத்த
முடியணி மாடக்காழி முனிவனை வணக்கஞ் செய்வாம். 11

திருநாவுக்கரசர்

அறப்பெருஞ் செல்விபாகத் தண்ணலைத் தெழுத்தாலஞ்சா
மறப்பெருஞ் செய்கைமாறு வஞ்சகரிட்ட நீல
நிறப்பெருங் கடலும்யார்க்கும் நீந்துதற் கரியவேழு
பிறப்பெனுங் கடலும் நீத்தபிரானடி வணக்கம் செய்வாம்.

### சுந்தரமூர்த்தியார்

அரவகலல் குலார்பால் ஆசைநீத்தவர்க்கே வீடு
தருவமென்றளவில் வேதஞ்சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன் புலவிதீர்ப்பான் கழுதுகண் படுக்கும்பானாள்
இரவினிற்றூது கொண்டோன் இணையடி முடிமேல்வைப்பாம்.

### திருவாதவூரர்

எழுதரு மறைகள்தேறா இறைவனை எல்லிற்கங்குற்
பொழுதறு காலத்தென்றும் பூசனைவிடாது செய்து
தொழுதகை தலைமேலேறத்துளும்பு கண்ணீருள் மூழ்கி
அழுதடியடைந்த அன்பன் அடியவர்க்கடிமை செய்வாம்.

### நால்வர்

படிபுகழ் சண்பைவேந்தர் மலரடிபோற்றி பத்தி
வடிவுடை இயல்தேர் நாவுக்கரசடிபோற்றி மாலை
முடிகொள் சுந்தரர்தாள்போற்றி மூதுரை வாதவூரர்
அடியிணைபோற்றி மற்றுங் கடியவர்அடிகள் போற்றி. 15

—பழய திருவிளையாடல்

### பொய்யடிமையில்லாத புலவர் (சங்கப்புலவர்)

தரணியிற் பொய்ம்மைஇலாத் தமிழ்ச்சங்கமதிற் கபிலர்
பரணர்நக் கீரர்முதல் நாற்பத்தொன்பதுபல் புலவோர்
அருள் நமக்கீயுந் திருவாலவாய்அரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபாடும் புலவர்களே. 16

### மங்கையர்க்கரசியார்

பூசலயிற் றென்னனார்க் கனலாகப் பொருமையினால்
வாசமலர்க் குழல் பாண்டிமாதேவியாம் மாணிகண்டீர்
தேசம் விளங்கத் தமிழாகரர்க்கறி வித்தவரால்
நாசம் விளைத்தாள். அருகந்தருக்குத் தென்னாட்டகத்தே. 17

—நம்பியாண்டார் நம்பி

தண்டியடிகள் முதலியோர்

தந்தைதா ளொடும் பிறவித் தாளெறிந்து
திருத்தரிரு தாளைச்சேர்ந்த
மைந்தர்தாள் வேதநெறி சைவநெறி
பத்திநெறி வழாது வாய்மெய்
சிந்தை தானரனடிக்கே செலுத் தினராய்ச்
சிவானு பவச் செல்வராகிப்
பந்தமாந் தொடக்கறுத்த திருத்தொண்டர்
தாள்பரவிப் பணிதல் செய்வாம். 18

—பரஞ்சோதியார்

பல்லக்கு மேலேறிப் பல்லக்கு மேலிட்டோம்
பல்லக்கணி சொக்கைப் பாடினோம்—பல்லக்கு
மன்னு குறையுண்டு மண்மதிக்கும் விண்மதிக்கும்
என்ன குறையுண் டெமக்கு. 19

வாழ்த்து

ஞால மோங்குக நான்மறை நீடுக
சீல மன்னவன் செங்கோல் விளங்குக
கால மாமழை மன்னுக காதலால்
சால ஈச னடியார் தழைகவே. 20

—பழய திருவிளையாடல்

---

## 24. பிற இலக்கியங்கள்

திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா : பரஞ்சோதியார் இயற்றியது.

பூமேவு கற்பக நாடாளும் புரந்தரனர்
தீமை விருத்திரனைச் செற்றபழி—போமாறு
பொற் கமலஞ்தோய்ந்து விமானமிசைப் பூசிப்ப
நற்கருணை செய்தநலம் போற்றி—நற்றவத்தோர்

*ஈசனுர்ச் சாத்தும்எழில் மலரைக் கால்சிதைத்த*
*வாசவனுர் வெள்ளானை மண்ணிழிந்து—பூசனைசெய்து*
*அல்லற்படு சாபந்திர அருள் சுரந்த*
*மல்லற் கருணை வளம் போற்றி * * *  1*

மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி : பரஞ்சோதி முனிவர் பாடியது.

*இனிக்குந்தமிழ் மதுரேசனை யிருபோதினு நினைவீர்*
*பனிக்குந்திரை கடற்கும் யமபடர்க்கும் தெறுசுடர்க்கும்*
*தொனிக்கும் புயலிடிக்கும் புலிதொலைக்கும் கடையனற்கும்*
*தனிக்குந் தனிவழிக்கும் பிணிதனக்கும் தளரீரே.  2*

திருவிளையாடற் பயகரமாலை : வீரபத்திரக் கம்பர் இயற்றியது. (பயகரன் - பயத்தைப் போக்குபவன்).

*அடல்வந்த மானப்பரிக்கு நரியிட்டமைச் சனுக்காக்*
*கடல்வந்த வெள்ளமழைப்பித்துத் தென்கரை கட்டுதற்காச்*
*சுடவந்த பிட்டுக்குக் கூடையிலேமண் சுமந்தடியும்*
*படவந்த தென்சொக்கனே பரதேசி பயகரனே.  3*

—30 - மண்சுமந்த திருவிளையாடல்

கடம்பவன புராணம்:—இலீலா சங்கிரக அத்தியாயம் : வீமநாத பண்டிதர் இயற்றியது.

*அன்புடைய அன்னை கடலாடற் கெண்ண*
*அவள்மொழி கேட்டீசனைத் தன்வயத்த தாக்கும்*
*நன்புடையாள் தொழுதுரைத் தம்மாற்றங் கூற*
*நயந்தறியா ரெனவிருந்து முகம்வாடக் கண்டு*
*இன்புடைநின் முகவாட்டம் துணிந்து காண்பான்*
*எண்ணியிருந்தே னெனவேழ் கடலுங் கூவத்*
*தென்புடவி கடவ்ாதவ் வடைவின் வந்து*
*சிவதீர்த்தத் தடத்துறவேழ் கடலென் றூர்கள்.  4*

—8 - கடலழைத்த திருவிளையாடல்

மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது :

*உருவால வாயிருக்கு மோதரிய முத்தித்*
*திருவால வாயிருக்குஞ் செல்வர்—ஒருமால்*
*வடமதுரை யேறுமுன்னே வந்தவடி வென்னத்*
*தடமதுரை மீனுயர்த்த தாணு—படர்தீர்க்கும்*
*சத்திபுரத் தோர்பாற் றழைத்துமகிழ்ந் தோர்சிவன்*
*முத்திபுரத் தோர்பான் முளைத்தெழுந்தோர்—அத்திசைபோல்*
*ஆங்கோர் இருநான் கயிரா வதஞ்சுமக்கும்*
*பூங்கோயிற் குள்ளுயர்ந்த புண்ணியனார்—பாங்காம்*
*இடம்பவன மீதாக இந்திரன்வந் தேத்தும்*
*கடம்பவன மீதிலுறை காந்தர்.* (134—138) 5

கல்லாடம் : சங்கப்புலவருள் ஒருவரான கல்லாடர் இயற்றியது.

*பெருநீர் வையை வளைநீர்க் கூடல்*
*உடலுயிர் என்ன உறைதரு நாயகன்*
*கடுக்கை மலர்மாற்றி வேப்பலர்சூடி*
*ஐவாய்க் காப்புவிட் டணிபூண் அணிந்து*
*விரிசடை மறைத்து மணிமுடி கவித்து*
*விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி எடுத்து*
*வழுதியாகி முழுதுல களிக்கும் பேரருளாளன்.* 6

*(இவ்வரிகள் சோமசுந்தரப் பெருமான் சுந்தரபாண்டியனாய்க் கோலங்கொண்டதைக் குறிக்கும்.)*

திருவாலவாயுடையார் கோயில் திருப்பணிமாலை :

*மலைமகள் கோயிலுநாயகர் கோயிலு மாமதிளும்*
*அலர்கதிர்ச் சூரியனாதி சண்டேச்சுரனந் தமதா*
*இலகியசுற்றத் திருந்தவர் கோயிலும் யாவுஞ்செய்தான்*
*பலகலை தேருமுகில்* **குலசேகர பாண்டியனே.** 7

*சந்திரசேகரர் தென்மது ரேசர்தஞ் சந்நிதியில்*
*வந்தொரு கோபுர மாமகமேரு வளர்ந்ததெனச்*

சுந்தரபாண்டியன் கோபுரமென்று துலங்கச் செய்தான்
மந்தர நேர்புயன் **சுந்தர பாண்டிய** மன்னவனே. 8

சொக்கநாத வெண்பா—சொக்கநாதக் கலித்துறை:—
தருமபுர ஆதீனம் முதல்வர் ஸ்ரீகுருஞானசம்பந்தர் பாடியது.

எல்லாமும் வல்லசித்த ரென்றக்கால் என்னுடைய
பொல்லாக் கருத்தகற்றப் போகாதோ—வல்லாடும்
பொங்கரா வேணிப்புனிதா மதுரை நகர்ச்
சங்கரா சொக்க நாதா. 9

கண்ணுக்கினிய பொருளாகியே யென்கரத்தில் வந்தாய்
விண்ணும்பரவிடு மற்புதமே யென்னவிஞ்சை யிதான்
மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும்படி செய்மது ராபுரிச் சொக்க நாயகனே. 10

மதுரைக் காஞ்சி: கடைச்சங்க நூல்களில் பத்துப் பாட்டில் ஒன்று. மாங்குடி மருதனார் பாடியது.

" திவவு மெய்ந்நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி
நுண்ணீ ராகுளி இரட்டப் பலவுடன்
ஒண்சுடர் விளக்க முந்துற மடையொடு
நன்மா மயிலின் மென்மெல இயலிக்
கடுஞ்சூன் மகளிர் பேணிக் கைதொழுது
பெருந்தோட் சாலினி மடுப்ப ஒருசார் " 11

(இவ்வரிகளில் பெண்களின் வழிபாடு கூறப்பெற்றுள்ளது.)

மதுரை மும்மணிக்கோவை: பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை இயற்றியது.

ஆறுடைக்கு மங்கா ளறியா வழுதியர்கோன்
மாறுபட மண்சுமந்து வந்திடும்—பேறுடைய
பிட்டுக்காட் டானும் பெருமையான்என் குற்றையும்
பிட்டுக்காட் டானும் பிறர்க்கு. 12

குன்றுபோற் கோபுரஞ்சூழ் கூடற் குருமணியை
இன்றுபோய்க் காணுங்காண் ஏழையீர்—பொன்றுங்கால்
கையுங் கதையுமாய்க் காலனும் முன்னேவருதல்
பொய்யுங் கதையுமாய்ப் போம். 13

மதுரைச் சொக்கநாதர் உலா : புராணத் திருமலைநாதர் இயற்றியது.

" ஆதி யநாதி அடிமுடியொன் றில்லாத
சோதியளவு படாத் தோற்றத்தான்—ஓதும்
இமய முதல்வி இறைவி மறைதேர்
சமய முதல்வி தலைவி—உமைகௌரி
மாணிக்க வல்லி மரகத வல்லியிசை
பேணித் தமிழறியும் பெருமாட்டி * * *
ஐந்தரு நாட்டண்ணல் அரும்பழிக்கா அன்றுதனக்
கிந்திர விமான மினிதமைத்து—வந்தித்
தழுகிய சொக்கரென வானதிரு நாமம்
குழைவுதரு நேசமுடன் கொண்டோன் * * * " 14

மதுராபுரி அம்பிகைமாலை : குலசேகர பாண்டியன் செய்ததாகக் கூறுவர்.

நோக்குங் கருணை விழியாற் பொதுவற நோக்கி என்னைக்
காக்கும் படிக்குங் கருது கண்டாய் ஒளிகக்கு நிலா
வீக்குஞ் சடாடவியா ருண்ட காள விடத்தையமு
தாக்குஞ் சிவானந்தமே மதுராபுரி யம்பிகையே. 15

பொடிபட்ட பிட்டுக்குத் தோட்கொண்டு கூடை
மண்போட்டுப் பொங்கி
வெடிபட்ட வையை யடைத்தவர் நாட்
சொக்கர் மேனிசுற்றுங்
கொடி பட்டபோது முழு நீலக்
கோமள மேனியிலும்
அடி பட்டதோ அணங்கே மதுரா
புரியம் பிகையே. 16

மதுரை மீனாட்சியம்மை கலிவெண்பா : திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் பாடியது.

*சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே*
*காராரு மேனிக் கருங்குயிலே—ஆராயும்*
*வேதமுத லாகிநின்ற மெய்ப்பொருளே மின்னொளியே*
*ஆதிபரா பரையே அம்பிகையே * * * சந்ததமும்*
*நீயே துணையாகி நின்றிரட்சி அங்கயற்கண்*
*தாயே சரணஞ் சரண்.* 17

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்

*நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே*
*நீவந்த வாழ்வைக்கண் டதனாலே*
*மாலொன்று பேதைக்கும் மணநாறு*
*மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே*
*வேல்கொண்டு வேலைக்குன் றெறிவோனே*
*வீரங்கொள் சூரர்க்குங் கொலைகாரா*
*நாலங்க வேதத்தின் பொருளோனே*
*நானென்று மார்தட்டும் பெருமாளே.* 18

மதுரைக் கலம்பகம் : குமரகுருபரர் இயற்றியது.

*இருவருக்குங் காண்பரிய ஈசர்மது ரேசனார்*
*விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனர்காண் அம்மானை*
*விருதுகட்டி அங்கம்வெட்டி வென்றனரே யாமாகில்*
*அருமையுடம் பொன்றிரு கூறுவதே னம்மானை*
*ஆனாலுங் காயமிலை ஐயரவர்க் கம்மானை.* 19

*மும்மைத் தமிழ்க்கூடல் மூலலிங்கத் தங்கயற்கண்*
*அம்மைக் கமுதாம் அருமருந்தை—வெம்மைவினைக்*
**

கள்ளத் திருக்கோயிற் காணலாங் கண்டீர்நம்
உள்ளத் திருக்கோயி லுள். 20

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்: குமரகுருபரர் பாடியது

தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும்புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத்து வசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. 21

மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை

கார்பூத்த கண்டத்தெங் கண்ணுதலார்க் கீரேழு
பார்பூத்த பச்சைப்பசுங் கொம்பே—சீர்கொள்
கடம்பவனத் தாயேநின் கண்ணருள் பெற்றாரே
இடம்பவனத் தாயே யிரார். 22

மணியே யொருபச்சை மாணிக்க மேமருந் தேயென்றுன்னைப்
பணியேன் பணிந்தவர் பாலுஞ் செல்லேனை வர்பாற்செலவும்
துணியேன் துணிந்தவை யென்னுரைக் கேன்மதுரைத் திருநாட்
டணியேயனைத்து யிர்க்கும்மனை நீயென் றறிந்து கொண்டே.

மீனாட்சியம்மை குறம்

மங்கை குங்குமக் கொங்கை பங்கயச்
செங்கை யங்கயற் கண்ணினாள் மறைபண்ணினாள்
பங்க னைக்கழ லங்கனைச் சொக்க
லிங்கனைக்கூடி மேவுவாய் கொல்லிப் பாவையே. 24

கூடல்புன வாயில் கொடுங்குன்று பரங்குன்று
குற்றால மாப்பனூர் பூவணநெல் வேலி
ஏடகமா டானைதிருக் கானப்பேர் சுழியல்
இராமேசந் திருப்புத்தூரிவை முதலாந் தலங்கள்
நாடியெங்க ளங்கயற் கண்ணாண்ட தமிழ்ப்பாண்டி
நன்னாடும் பிறநாடு மென்னாட தாகக்
காடுமலை யுந்திரிந்து குறிசொல்லிக் காலங்
கழித்தேனென் குறவனுக்குங் கஞ்சிவாரா தம்மே. 25

(இப்பாடலில் பாண்டிநாட்டுப் பதினான்கு தலங்களும் கூறப் பெற்றுள்ளன.)

சோற்றால் மடையடைக்கும் சொக்கர்திருக் கூடலிலே
வேற்றாளாய் மண்சுமக்க வேண்டினர்காண் அம்மானை
வேற்றாளாய் மண்சுமக்க வேண்டினரே ஆமாகில்
மாற்றான் அடிக்க வழக்குண்டோ அம்மானை
வைகையிலே தானடிக்க வழக்குண்டோ அம்மானை. 26
—மூவர் - அம்மானை

முக்கட் பராபரை சொக்கப்பிரானெனு முன்னவனோ
டொக்கச் சிறந்த கயற்கண்ணி சந்நிதி யுற்றுமிகச்
செக்கச் சிவந்த பொற்றாமரைப் பாததெரி சனைக்கே
பக்கத் தடுத்தவர் சொர்க்கத்தினை யெட்டிப் பார்ப்பவரே.
—தனிப்பாடல்

***அனைத்துமுன்செயல் அடியேன்மேற் பிழையில்லை :—**

காண்பதுவு முயிர்ப்பதுவும் முதலெவையுமுன் செயலாக்
கருதா நின்றேன்
பூண்பதினி எத்தவற்றை என்னுடைய தெனத்தாயே
புசிப்பா யென்ன
ஊண்பறிந்து தாய்கொடுத்த துண்டசிறு குழந்தை யின்பால்
மீதூண் குற்றம்
காண்பவர்யார் இவ்வுலகிற் கடம்பவன பவனமமர்
கயற்கண் ணாளே. 28

**பதுமரேகையாய்ப் பதிக வென்மனனே :—**

கொழுமையழ கொழுகொளியாற் குலவுமுன தகவடியைக்
கூடி நன்கு
கழுமியென திதய பதுமம் பதிந்து காண்பதனால்
கயற் கண்ணாளே
செழுமைமிகு புவனமிரு நூற்றிருபானுள் இனிலும்
செங்கோ லோச்சும்
விழுமியசீர்ச் செல்வத்தை விளக்குமறிகுறி வரையாய்
விளங்குந் தேவி.* 29

**வாழ்த்து**

மல்குக வேதவேள்வி வழங்குக சுரந்துவானம்
பல்குக வளங்களெங்கும் பரவுகஅறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட்கெல்லாம் நான்மறைச் சைவம்ஓங்கிப்
புல்குக உலகமெல்லாம் புரவலன் செங்கோல்வாழ்க. 30

**அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த**
**ஆலவாய்ச் சொக்கன் அடிமலர் போற்றி.**

---

*ஆநந்த சாகரஸ்தவம் அல்லது இன்பமாகடல். நீலகண்ட தீக்ஷிதர். (மொழிபெயர்ப்பு : கோவை - கவியரசு கு. நடேச கவுண்டர்.)

# 25. பிற விவரங்கள்

## வழிபடும் முறை

**ஸ்ரீ மீனுட்சி சுந்தரேஸ்வரர் கோயில்**

இவ்வாலயத்தில் ஸ்ரீ மீனுட்சியம்மையை முதலில் தரிசிப்பது தொன்றுதொட்டு வழக்கத்திலிருக்கிறது. ஆகவே பக்தர்கள் ஷ்ரீ கோயில் கிழக்கு அம்மன் கோபுரத்தைக் கைகூப்பித் தொழுதவண்ணம்—அஷ்ட சக்தி என்ற அஷ்ட லட்சுமி மண்டபம், மீனுட்சிநாயக்கர் மண்டபம், அம்மன் முன்கோபுர வாயிலிலுள்ள திருவாசிவிளக்குகள், முதலி மண்டபம் ஆகிய இவற்றைக் கடந்து சிவகங்கை என்ற பொற்ருமரைக்குச் சென்று நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடையணிந்து தென்மேற்குக் கரையிலுள்ள விபூதி விநாயகரை வணங்கி "சிவசிவ" என்று விபூதி தரித்துச் செல்லவேண்டும்.

தென்கிழக்குக் கரையிலிருந்து அம்மன் - சுவாமி கோயில்களின் தங்க விமானங்களைக் காணலாம். குளத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் சொக்கேசன் திருவிளையாடல் 64ம் சித்திரிக்கப்பட்டுள்ளன. தெற்குப் பக்கத்துச் சுவரில் திருக்குறள் 1330ம் சலவைக் கல்லில் பொறித்து வைக்கப் பெற்றுள்ளன.

கிளிக்கட்டு மண்டபத்திலுள்ள சித்திவிநாயகர், குமரர் முதலான மூர்த்திகளையும் வணங்கி, அம்மன் சந்நிதியில் உள்ள பலி பீடத்தைச் சுற்றித் திரும்பி வந்து மீனுட்சி அம்மன் பிரதானவாயில் வழியாக மூலஸ்தானம் செல்ல வேண்டும். சந்நிதியில் ஒருபால் ஆண்களும், மற்றொரு பால் பெண்களும் நின்று தரிசிக்கவேண்டும்.

பக்தர்கள், திருவைந் தெழுத்தைத் தியானித்தும் இறைவன் திருநாமங்களை உச்சரித்தும், பாடல்களைப் பாடியும் வலம் வருதல் முறையாகும்

முதல் பிராகாரம் வலம் வருகையில், தென்கிழக்கில் ஐராவத விநாயகரையும், தென்மேற்கில் எழுந்தருளியுள்ள வல்லபை விநாயகரையும், நிருத்த கணபதியையும்; வடமேற்கிலுள்ள முத்துக்குமார சுவாமியையும், சண்டிகேஸ்வரரையும் வணங்க வேண்டும்.

இரண்டாவது பிராகாரம் வலம் வருகையில் கிழக்கில் திருமலை நாயக்கர் சிலையும், மேற்கில் கொலுமண்டபமும், கூடல்குமரர் சந்நிதியும் உள்ளன. குமரரை வணங்கியதும், சுவாமி கோயில் இரண்டாவது பிராகாரத்திற்குச் செல்ல வேண்டும்.

**சுவாமி கோயில்**

இரண்டாவது பிராகாரத்தில் எழுந்தருளியுள்ள *முக்குறுணிப் பிள்ளையாரை வணங்கிய பின் பிராகாரத்திலுள்ள—(வடமேற்குமூலை)—49 சங்கப் புலவர்களைத் தரிசித்து, நவக்கிரகங்களைச் சுற்றி நந்திமண்டபம் செல்லவேண்டும். இம் மண்டபத்திலுள்ள தூண்களில் சிவபெருமானுடைய பல மூர்த்தங்களைக் காணலாம். நந்தியம் பெருமானை, " கோயிலுக்குள் செல்ல அனுமதிகொடுங்கள் " என்று வேண்டிக் கொள்ளுதல் முறையாகும்.

பிறகு அநுக்ஞை விநாயகரை வணங்கவேண்டும். சுவாமி கோயில் பிரதான வாயிலிலுள்ள அதிகார நந்தியைத் தரிசிக்கவேண்டும்.

---

***முக்குறுணிப் பிள்ளையார்** :—விநாயக சதுர்த்தி அன்று " முக்குறுணி " (12 படி) அரிசியை நீரிலிட்டு சுத்தஞ் செய்த பின் உரலிலிட்டு இடித்து மாவாக்கவேண்டும். பருப்பு, தேங்காய், வெல்லம் போதிய அளவு சேர்த்து ஒரே " மோதகமாக " செய்து, துணியில் கட்டி, அதற்கென்று ஏற்பட்ட கொப்பரையில் வைத்து வேகவைத்து, ஷை பிள்ளையாருக்குப் படைப்பது தொன்றுதொட்டு வழக்கமாக உள்ளமுறை. ஆகவே இப் பிள்ளையாரை முக்குறுணிப் பிள்ளையாரென்று பக்தர்கள் அழைக்கிறார்கள்.

ஆறுகால் பீடவாயில் வழியாகச் சென்று சந்திரசேகரர் முதலான மூர்த்திகளையும், ரஜிதசபை (வெள்ளியம்பலம்) யிலுள்ள கால்மாறி ஆடிய நடராஜரையும் தரிசிக்க வேண்டும். பின்பு மூலவரை வணங்கவேண்டும்.

முதல் பிராகாரம் வலம் வருகையில் முறையே வந்தி யம்மை, சிவலிங்கம், சூரியன், கலைமகள், நாயன்மார்கள் (கற் சிலை), சோமாஸ்கந்தர், பலவித லிங்கங்கள், பிக்ஷாடனர், காசிவிஸ்வநாதர், எல்லாம் வல்லசித்தர், துர்க்கையம்மன், கடம்ப மரம், கனகசபை நடராஜர், சண்டிகேஸ்வரர் (இங்கிருந்து விமான தரிசனம் செய்யலாம்), அட்சர லிங்கம் 51, மகாலட்சுமி சந்நிதி, இரத்தினசபை நடராஜர், வன்னியும் கிணறும் லிங்கமும், பைரவர் ஆகிய மூர்த்திகளை யும் தரிசித்த பின், வெளியே வரவேண்டும்.

பழநி ஆண்டவர், பிரதானவாயிலுக்கு வடபுரம் எழுந் தருளியுள்ளார். நந்தி மண்டபத்திற்கும், நூற்றுக்கால் மண்டபத்திற்கும் இடையிலுள்ள சட்டையப்பர் முதலான மூர்த்திகளையும் நந்தி மண்டபத்தின் கிழக்குத் தூண்களில் உள்ள, அக்னி வீரபத்திரர், அகோரவீரபத்திரர், ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, பத்திரகாளியையும்சுற்றி, ஞானசம்பந்தர் மண்டபம் சென்று அங்குள்ள, நால்வர், மங்கையர்க்கரசி யார், குலச்சிறையார், நெடுமாறநாயனர் முதலியோரையும் வணங்கி, கம்பத்தடியில் *நமஸ்கரித்து சற்று உட்கார வேண்டும். பின் பக்கத்திலுள்ள தூண்களில், அநுமார், கிருஷ்ணன், உருவச்சிலைகளைத் தரிசித்து நடுக்கட்டு வாயிலாக அம்மன் சந்நிதி வழியே திரும்பவேண்டும்.

---

நமஸ்கார விளக்கம்*

அஷ்டாங்க நமஸ்காரம் :—தலை, கைகள் இரண்டு, காது இரண்டு, மோவாய், தோள்கள் இரண்டு—ஆண்கள் ஷை எட்டு உறுப்புகளும், நிலத்தில் படுமாறு வீழ்ந்து வணங்குதல் அஷ்டாங்க நமஸ்காரம் ஆகும்.

பஞ்சாங்க நமஸ்காரம் :—தலை, கைகள் இரண்டு, முழங்கால் இரண்டு நிலத்தில்பட பெண்கள் வணங்குதல் சிறந்த முறையாகும்.

## திருவாதவூர்கோயில் பூஜை – உற்சவ விவரம்

திருவாதவூர் ஸ்ரீ திருமறைநாதஸ்வாமி கோயிலில் தினந்தோறும் நிகழும் பூஜையின் விவரமும் காலமும் :

| | | |
|---|---|---|
| திருவனந்தல் | அதிகாலை | 5 மணி |
| காலைசந்தி | முற்பகல் | 9 மணி |
| உச்சிக்காலம் | நடுப்பகல் | 12 மணி |
| சாயரக்ஷை | பிற்பகல் | 5-30 மணி |
| அர்த்த ஜாமம் பள்ளியறை | இரவு | 8 மணி |

ஷை கோயிலில் நடைபெறும் உற்சவங்களின் மாதம், உற்சவம், நாட்கள் விவரம் வருமாறு :—

1. சித்திரை :—பிடாரி அம்மன் உற்சவம். 10 நாட்கள். 9ம் திருநாள் சட்டத்தேர்.
2. வைகாசி :—பிரமோற்சவம். 10 நாட்கள். 8ம் திருநாள் திருக்கல்யாணம். 9ம் திருநாள் தேர்.
3. ஆனி :—ஆனிமகம்.
4. ஆடி :—ஆடிப்பூரம். 1 நாள். அம்மன் புறப்பாடு.
5. ஆவணி :—ஆவணிமூல உற்சவம். 12 நாட்கள். ஸ்ரீ மாணிக்கவாசகர் மதுரைக்கு எழுந்தருளல்.
6. புரட்டாசி :—நவராத்திரி உற்சவம். ஸ்ரீ மாணிக்கவாசகர் குதிரை வாகனத்தில் எழுந்தருளி அம்புபோடுதல்.
7. கார்த்திகை :—திருக்கார்த்திகை. 1 நாள். பஞ்சமூர்த்திகள் புறப்பாடு.
8. மார்கழி :—திருவெம்பாவை உற்சவம். டோலோ உற்சவம் 10 நாள். 9ம் திருநாள் ஸ்ரீ மாணிக்கவாசகருக்கு சட்டத்தேர். 10ம் திருநாள் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு.
9. மாசி :—சிவ ராத்திரி. 1 நாள்.

## திருப்பரங்குன்றம்கோயில் பூஜை உற்சவ விவரம்

திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஆண்டவர் சுப்ரமணிய சுவாமி கோயிலில் தினந்தோறும் நிகழும் பூஜை காலங்களின் விவரம் :—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருவனந்தல் | காலை | 5-30 முதல் | 6 | மணி வரை |
| 2. | விழா பூஜை | ,, | 7-00 | ,, | 7-30 | ,, |
| 3. | காலைசந்தி | ,, | 8-00 | ,, | 8-30 | ,, |
| 4. | திருக்காலச் சந்தி | ,, | 10-30 | ,, | 11-00 | ,, |
| 5. | உச்சிகாலம் | ,, | 11-45 | ,, | 12-00 | ,, |
| 6. | சாயரக்ஷை | மாலை | 5-30 | ,, | 6-00 | ,, |
| 7. | அர்த்த ஜாமம் | இரவு | 9-00 | ,, | 9-40 | ,, |
| 8. | பள்ளிஅறை | ,, | 9-45 | ,, | 10.00 | ,, |

ஷை கோயிலில் நடைபெறும் திருவிழாக்களின் மாதம், உற்சவம், நாட்களின் விவரம் வருமாறு:—

| | | நாட்கள் |
|---|---|---|
| 1. | *பங்குனி* (March-April) :—பங்குனி பிரம்மோற்சவம் | 14 |
| 2. | *வைகாசி* (May-June) :—வசந்த உற்சவம், விசாகம், மொட்டையரசு | 11 |
| 3. | *ஆனி* (June-July) :—ஆனி ஊஞ்சல் | 10 |
| 4. | *புரட்டாசி* (Sept.-Oct.) :—நவராத்திரி உற்சவம் | 10 |
| 5. | *ஐப்பசி* (Oct.-Nov.) :—கந்தர் சஷ்டி | 7 |
| 6. | *கார்த்திகை* (Nov.-Dec.) :—கார்த்திகை உற்சவம் | 10 |
| 7. | *மார்கழி* (Dec.-Jan.) :—மாணிக்கவாசகர் | 10 |
| 8. | *தை* (Jan.-Feb.) :—தை தெப்ப உற்சவம். | 10 |
| 9. | *மாசி* (Feb.-March) :—எண்ணெய்க் காப்பு உற்சவம் | 5 |
| ,, | ஸ்ரீ வெயிலுகந்தம்மன் உற்சவம் | 10 |

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் **ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** மதுரையில் நிறுவியுள்ள பேரறக்கட்டளைகளின் விவரம் :

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமலை நாயக்கர் தேவாரப் பரிசு நிதி | ரூ. | 10,000 |
| 2. | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் | ,, | 21,000 |
| 3. | ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு | ,, | 5000 |
| 4. | திருவிளையாடற் புராணப் பிரசங்க நிதி | ,, | 7000 |
| 5. | பெரிய புராணப் பிரசங்க நிதி | ,, | 7000 |
| 6. | கந்த புராணப் பிரசங்க நிதி | ,, | 3500 |
| 7. | ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பசு நிதி | ,, | 3500 |
| 8. | ஸ்ரீ சொக்கலிங்கம் சந்தனக் காப்பு நிதி | ,, | 7000 |
| 9. | தேவார நிதி (கட்டிடம் முதலியன) | ,, | 50,000 |
| 10. | ஸ்ரீ மூர்த்தி நாயனுர் நினைவு விழா நிதி | ,, | 2500 |
| 11. | இன்னிசைத் தேவார நிதி (வைகாசி அமரபட்சம் திருதிகையில் திருமுறை விழா நிதி) | ,, | 25,500 |
| 12. | கமலை வெள்ளியம்பலவாணர் நினைவு முதுமொழி மேல் வைப்புப் பரிசு | ,, | 5000 |

மற்றும் மதுரைக் கோயிலில் சிவசிவ விளக்குடன் தேவாரம், திருக்குறள், ஸ்ரீ மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ்ப் பாடல்கள் முதலியன சலவைக் கற்களில் பொறிக்கப் பெற்றுள்ளன.

---

பாண்டி நன்னுட்டுப் பதிமதுரை மீனுட்சி
காண்டுமகிழ் சொக்கக் கடவுளே. —சிவநாம வெண்பா


---

“ நீர்வாழி தென்மதுரை நின்மலனுர் அருள்வாழி
கார்வாழி அங்கயற்கண் கன்னிதிரு வருள்வாழி ”

---

அங்கயற்கண்ணணி தன்னெடும் அமர்ந்த,
ஆலவாய்ச் சொக்கர் மலரடி போற்றி.

# ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயிலின் படம் (Plan)



TIRUVANMIYUR MADRAS-41

